பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 10 வியாழக்கிழமை (26.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 365

மாநகர சபை
யாழ்ப்பாணம்.

# 6 மாதங்களில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு சரத் பொன்சேகா இணக்கம்

## ஐ.தே.மு., ஜே.வி.பியுடன் ஒப்பம்

கொழும்பு, நவம்பர் 26

பதவிக்கு வந்து ஆறு மாதங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணி, ஜே.வி.பி. ஆகிய அணிகளுடன் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி, ஜே.வி.பி ஆகிய எதிர்க்கட்சிகளின் பொது வேட் பாளராக ஜெனரல் சரத் பொன்சேகா களம் இறங்குவது உறுதியாகி உள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் I,II,III பாடத்துக்கான மாதிரி வினாத் தாள்கள்.

## தமிழர் பிரச்சினைக்கான ஜனாதிபதி வேட்பாளர்களின் தீர்வு யோசனை வெளியான பின்னரே கூட்டமைப்பின் முடிவு

கொழும்பு, நவ. 26

ஜனாதிபதி வேட்பாளர்கள் வெளியிடும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் முன்வைக்கும் தீர்வுத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மேற்கொள்ளும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பிறகே இந்த முடிவு எடுக்கப்படும் என்றும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான பா.அரியநேத்திரனே இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே உறுதிப் படுத்தப்பட்ட வேட்பாளராகவுள்ளார். எதிர்க்கட்சிகள் தரப்பில் வேட்பாளர்கள் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

(20ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் மூவர் மன்னாரில் கைது!

கொழும்பு, நவ. 26

புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவர் மன்னாரில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இம்மூவரும் மன்னாரின் நிவாரணக் கிராமங்களான அடம்பன் மற்றும் பருப்பங்கண்டல் பகுதிகளிலிருந்து

கைதுசெய்யப்பட்டனர் என்றும் அவர்களில் இருவர் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் புதல்வரான சார்ள்ஸ் அன்ரனியின் சாரதிகளாக இருந்தவர்கள் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம், புலிகள் வெடிகுண்டுத்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளமுள்ளிவாய்க்காலில் வெடிகுண்டுகள் மீட்பு!

கொழும்பு, நவ. 26

வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்

(20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுக்கிறார் தமிழ் வர்த்தகர் ராஜரட்ணம்

கொழும்பு, நவ. 26

நிதிச்சந்தை மோசடியில் ஈடுபட்டார் என அமெரிக்க அரசால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை - என்று பிரபல அமெரிக்க தமிழ் வர்த்தகர் ராஜ் ராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

பாரிய நிதிச் சந்தை மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல அமெரிக்கத் தமிழ் வர்த்தகர் ராஜ் ராஜரட்ணத்தை அந்நாட்டு அரசு கைது செய்திருந்தது.

போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதன் மூலம் அமெரிக்க அரசு தமது அரசியல் சாசன உரிமையை மீறியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பங்குச் சந்தையில் இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து ராஜ் ராஜரட்ணம் அறிந்திருக்க

(20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்கின்றார் நந்தன குணதிலக

கொழும்பு, நவ. 26

நந்தன குணதிலக தமது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்வார் என்று தெரியவருகிறது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவுடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்தே அவர் தமது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்கின்றார் என்றும், அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு இன்று சமர்ப்பிப்பார் என்று அறிய வந்தது. (சி)

## ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பொலிஸ் இடமாற்றங்களை உடன் நிறுத்துக

### பொலிஸ் மா அதிபர் உத்தரவு

கொழும்பு, நவ.26

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, சகல மாகாணங்களிலும் உள்ளக இடமாற்றங்களை இடைநிறுத்துமாறு பொலிஸ் உயர் அதிகாரிகளுக்குப் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினத்திலிருந்து அமுலுக்கு வரும்வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொலிஸ் திணைக்களத்துக்கு ஆள்சேர்க்கும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பும் பணிகளை இடை நிறுத்துமாறும் அவர் அறிவித்துள்ளார்.

தேவையேற்படின் ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக மாத்திரம் இடமாற்ற உத்தரவுகளைத் தாம் வழங்குவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய சந்தர்ப்பங்களில் உரிய ஆவணக் கோப்பை,

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் விக்கிரமபாகுவும் போட்டி

கொழும்பு, நவ. 26

இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ணவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார். நேற்று அவர் இது தொடர்பாக அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று ஊடகவியலாளர்களிடம் கூறியவை வருமாறு:-

நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாததால் நாம் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க எஸ்.பி. இணக்கம்

கொழும்பு, நவ. 26

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திசாநாயக்க, ஜெனரல் சரத் பொன்சேகாவை சந்தித்து நிபந்தனையற்ற வகையில் அவருக்கு ஆதரவு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார் - என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத் தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, விரிவாகக் கலந்துரையாடிய பின்னரே திஸாநாயக்க, சரத் பொன்சேகாவைச் சந்தித்துள்ளார். (சி)

Day 2-26.11.2009

உலக எயிட்ஸ் தினம் - World AIDS Day 2009

HIV/ AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும் "Universal Access and Human Rights"

HIV / AIDS - நோயியல்

HIV / AIDS என்பது மனிதனது நோயெதிர்ப்பு சக்தி குறைவடைதல் அல்லது இழக்கப்படுதலாகும்.

மனிதனது நோயெதிர்ப்பு செயற்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள தொகுதி நிணநீர்த் தொகுதியாகும்.

HIV கிருமி மனிதனது நிணநீர்த் தொகுதியைத் தாக்கி நோயெதிர்ப்பு சக்தியை அழிக்கிறது. நமது உடலினுட்புகும் நோய்க் கிருமிகளை இனங்கண்டு உரிய பிறபொருளெதிரிகளை அவற்றினை அழிப்பதற்கு தூண்டும் ஞாபகக் கலங்களான CD4/T4 நிணநீர்க் குழியங்களை HIV கிருமி அழிப்பதால் நோயெதிர்ப்பு சக்தி இழக்கப்படுகிறது.

நிணநீர்த் தொகுதியின் செயற்பாடு செயலிழந்து போதல் AIDS நிலைக்கு இட்டுச் செல்கிறது.

AIDS நிலையின் போது பல்வேறு சந்தர்ப்பவாத நோய்த் தொற்றுகளால் மரணம் சம்பவிக்கிறது.

AIDS இனால் இறப்பவர்களில் பெரும்பாலானோர் காச நோயினாலேயே இறக்கின்றனர்.

(சி-562704)

நிதியுதவி

ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை

TRRO LIMITED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியா ஓட்ட மழை!

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்றைய ஆட்ட நேரமுடிவின்போது இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 66 ஓட்டங்களைப் பெற்றது. அதேவேளை முதல் இன்னிங்ஸில் இந்திய அணி, துடுப்பாட்ட வீரர்களின் சதங்களின் உதவியுடன் ஓட்ட மழை பொழிந்தது.

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

அதன்படி அன்றைய ஆட்ட நேர முடிவில் இந்திய அணி இரண்டு விக்கெட்டுகள் இழப்புக்கு 417 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அன்றைய ஆட்ட நேரமுடிவின்போது டிராவிட் (85)- சச்சின் டெண்டுல்கர் (20) ஜோடி களத்தில் இருந்தது.

அதன்படி நேற்றுக் களமிறங்கிய இந்த ஜோடி நிதானமாக ஆடியது.

இந்திய அணி சார்பாக நேற்றைய துடுப்பாட்டத்தின்படி டிராவிட் (144), சச்சின் (40), லக்ஷ்மண் (63), யுவராஜ் சிங் (67) ஆகியோர் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றனர்.

ஏனைய வீரர்களான டோனி (4), ஹர்பஜன் சிங் (5), கான்(1), சிறிசாந்த் (0), ஆகியோர் இரட்டை இலக்க ஓட்டங்களைக் எட்ட முடியாது ஆட்டமிழந்து வெளியேறினர். ஒயா ஆட்டமிழக்காது ஓர் ஓட்டத்துடன் களத்தில் இருந்தார்.

இறுதியில் இந்திய அணி 154 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 642 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் ஹேரத் 5 விக்கெட்டுக்களையும், முரளிதரன், மெண்டிஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பம் தடுமாற்றத்தைக் கொடுத்தது. டில்ஷான் எந்த வித ஓட்டத்தையும் பெறாமலே வெளியேறினார். பரண விதாரண (30) குமார் சங்கக்கார (30) ஆகியோர் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்துக்கொண்டிருந்தனர்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது இலங்கை அணி 24 ஓவர்களை எதிர்கொண்டு ஒரு விக்கெட் இழப்புக்கு 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் கான் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்டமாகும்.

# நியூஸிலாந்து 404/8

பாகிஸ்தான்-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது நியூஸிலாந்து அணி 126 ஓவர்களை எதிர்கொண்டு 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 404 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக நேற்றுமுன்தினம் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி அன்றைய ஆட்ட நேர முடிவின் போது 90 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் மக்கலம்(25) விற்றோரி (40) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

அதன்படி நேற்று இரண்டாவது நாள் ஆட்டத்தை மக்கலம்-விற்றோரி ஆகியோர் தொடர்ந்தனர். இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 404 ஓட்டங்களைப் பெற்றது. பொண்ட் (8), ஓ பிரையன் (2) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்றைய ஆட்டத்தில் வீழ்த்தப்பட்ட மக்கலம், விற்றோரி ஆகியோரின் விக்கெட்டுக்களை உமர் குல் கைப்பற்றினார்.

# நடால் அதிர்ச்சித் தோல்வி

லண்டன், நவ. 26

லண்டனில் நடந்து வரும் ஏ.டி.பி. டென்னிஸ் தொடரில் ஸ்பெயினின் ரபெல் நடால் தனது தொடக்க ஆட்டத்தில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

இப்போட்டித் தொடரின் 2ஆவது நாளான நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில், டென்னிஸ் உலகின் 2ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். சுவீடனின் சோடர்லிங்கை எதிர்கொண்ட நடால் 4-6, 4-6 என்ற நேர் செற் கணக்கில் வீழ்ந்தார்.

பிரெஞ்ச் ஓபனிலும் இதே சோர்டலிங்கிடம் நடால் தோற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஜோகோவிச் 3-6, 6-4, 7-5 என்ற செற் கணக்கில் டேவிடென்கோவை தோற்கடித்தார்.

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி-மார்க் நோலஸ் (பகாமஸ்) ஜோடி ஏற்கனவே தங்களது முதல் ஆட்டத்தில் செர்மாக்- மொர்டினாக் ஜோடியை வீழ்த்தி இருந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் 2ஆவது வெற்றியை அவர்கள் பெற்றனர். பூபதி-நோலஸ் 3-6, 6-3, 10-7 என்ற செற் கணக்கில் கடுமையாகப் போராடி போலந்தின் பைர்ஸ்டென்பர்க்-மார்சின் மேட்கவ்ஸ்கி ஜோடியைச் சாய்த்தனர். இதன் மூலம் பூபதி கூட்டணியின் அரையிறுதி வாய்ப்புப் பிரகாசமாகி உள்ளது.

அதே சமயம் 'பி' பிரிவில் இடம்பிடித்திருக்கும் இந்தியாவின் லியாண்டர் பெயஸ், செக்குடியரசின் லுகாஸ் லோகி ஜோடி தங்களது முதல் ஆட்டத்தில் 3-6, 6-7 (3) என்ற நேர் செற்றில் லுகாஸ் குபோட் (போலந்து) - ஆலிவர் மராச் (ஆஸ்திரியா) ஜோணியிடம் தோல்வி அடைந்தனர்.

# அனுசரணையாளர் இன்றித் தவிக்கும் இந்திய அணி

மும்பை, நவ. 26

இந்திய கிரிக்கெட் அணிக்கு அனுசரணையாளர் கிடைக்காமையால் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அளவுக்கு அதிகமான தொகையை நிர்ணயித்தமையால் முன்னணி நிறுவனங்கள் அனுசரணையாளராவதற்கு விண்ணப்பிக்கவில்லை. இதனால் இந்திய கிரிக்கெட் சபை மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளது.

உலகின் பணக்கார விளையாட்டு அமைப்பாக பி.சி.சி.ஐ. திகழ்கிறது.

தற்போது இந்திய அணியின் அனுசரணையாளராக சகாரா நிறுவனம் உள்ளது. ஒரு போட்டிக்கு நாலரைக் கோடி வீதம் சுமார் 1000 கோடி ரூபாய் வரை கொடுக்கு உரிமை பெற்றிருந்தது. இந்திய வீரர்கள் அணியும் உடைகளில் சகாராவின் விளம்பரம்தான் இடம் பெற்றிருக்கும். நான்கு ஆண்டுகளுக்கான இந்நிறுவனத்தின் ஒப்பந்தம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது.

இதையடுத்து இந்திய சீனியர் அணி, 'ஏ' அணி, 19 வயதிக்குட்பட்ட அணி மற்றும் பெண்கள் அணிகளுக்கு அனுசரணையாளராக இருக்க விரும்புபவர்கள் 50 கோடி ரூபாய் மதிப்பிலான காசோலையை நவம்பர் 22ஆம் திகதிக்குள் பி.சி.சி.ஐக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், 22ஆம் திகதிவரை யாரும் அனுப்பாதமையால் நேற்றுமுன்தினம் மாலை வரை ஏலத்தை நீட்டித்தது. ஆனால், இறுதிவரை யாரும் ஏலம் கேட்காதமையானது பி.சி.சி.ஐ. நிர்வாகிகளுக்கிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெஸ்ட், ஒருநாள் மற்றும் 'ருவென்ரி-20' போட்டிகளுக்கு என குறைந்த அளவிலான தொகையை நிர்ணயித்து, பி.சி.சி.ஐ. புதிய ஏலத்தை நடத்தும் எனத் தெரியவருகிறது.

# அடுத்த கவாஸ்கர்!

''இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டில் கவாஸ்கருக்குப் பிறகு சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக கம்பீர் திகழ்கிறார்''-இந்திய அணியின் அதிரடித்துடுப்பாட்ட வீரரான ஷேவாக் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் முடிவடைந்த பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு-

''கம்பீர் தற்போது தொடர்ச்சியாக 4 டெஸ்ட் சதம் அடித்து அசத்தியுள்ளார். இதுவரை 25-30 டெஸ்ட்களில் ஆடியுள்ள அவர் மொத்தம் 8 சதங்களைக் கடந்துள்ளார். தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருவதால் அடுத்த டெஸ்டிலும் அவரால் சதம் அடிக்க முடியும்'' - இவ்வாறு ஷேவாக் கூறினார்.

# இத்தாலி வீரருக்கு 20 வருடத் தடை!

ஊக்கமருந்துச் சோதனையில் சிக்கிய இத்தாலி வீரர், கியானி டா ரோசுக்கு 20 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த சைக்கிள் ஓட்ட வீரரான கியானி டா ரோஸ் (வயது-23) லிக்குய்காஸ் அணிக்காக விளையாடி வந்தார். இவர் போட்டியின்போது ஊக்க மருந்து பயன்படுத்தியமையானது தெரிய வந்துள்ளது. இதையடுத்து கடந்த மார்ச் மாதம், பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். உடனடியாக அணியிலிருந்தும் நீக்கப்பட்டார்.

கியானியிடம் நீண்ட விசாரணை நடத்தப்பட்டு, இவருடன் தொடர்புடைய அமெச்சூர் வீரர்கள், உடற்பயிற்சி அலுவலர், மற்றும் போதை மருந்து விநியோகம் செய்தவர்கள் என 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் முடிவில் இத்தாலியின் ஒலிம்பிக் சபை, கியானிக்கு 20 ஆண்டுகள் தடைவிதித் தது. இவருடன் சேர்ந்து டாவைடு லூகாட்டோ என்ற வீரருக்கு 8 ஆண்டுகளும், அல்பனோ கொராஜின் என்பவருக்கு இரண்டு ஆண்டுகளும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கேபரியலி போசிசோ என்ற வீரர் தவறு செய்தமை நிரூபக்கப்படாமையால் அவர் விடுவிக்கப்பட்டார்.

# இளம் வயதில் சச்சினைவிட கங்குலியே சிறப்பானவர்!

''இளம் வயதில் (19 வயதுக்குட்பட்ட) சச்சினை விட கங்குலி சிறப்பாக விளையாடினார்'' - என இந்தியாவின் சவுராஷ்டிரா மாநில ரஞ்சி அணியின் பயிற்சியாளர் தேபு மித்ரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஒருமுறை 19 வயதுக்குட்பட்ட வீரர்கள் அடங்கிய கைலாஷ் கட்டானிஸ் ஸ்டார் அணி, இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் சென்றது. அதில் கங்குலி மற்றும் சச்சின் உள்ளிட்ட வீரர்கள் இருந்தனர். நானும் அப்போது இங்கிலாந்து சென்று அவர்களது ஆட்டத்தை உன்னிப்பாகக் கவனித்தேன். அந்தப் போட்டிகளில் கங்குலி, சச்சினை விட மிகவும் சிறப்பாக விளையாடினார். அவர்தான் அந்தத் தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர். அந்தநேரத்தில் சச்சின் விளையாடிவந்த மேற்கு மண்டல அணிதான் இந்தியக் கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. இதனால் அவருக்கு இந்திய அணியில் இடம்பெறுவது எளிதாக இருந்தது.

ஆனால், கங்குலி கிழக்கு மண்டலத்தில் இருந்தமையால், அணியில் இடம்பிடிப்பதற்காகக் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய தாயிற்று.


## ராஜ் திருமணசேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 33 வயது, அச்சுவினி [illegible] B.Sc. M.Sc. [illegible] தாரி அரச உயர் பதவி வகிக்கும் மணமகனிற்கு பட்டதாரி அரசபணிபுரியும் மணமகள் தேவை.

T.P.: 021 3735980/0774745647


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மதாசன் பெல்சியா



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மதாசன் பெல்சியா நேற்று (25.11.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.11.2009) வியாழன் பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, புதுமை மாதா கோவில்
மேற்கு வீதி, யாழ்ப்பாணம். (92491)

தகவல்:
மகன் (பொபி).

## திருமதி புஸ்வதி தவச்செல்வம்



நெல்லியடி, மகாத்மா வீதி குருந்தட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 16 2/4, ஹம்டன் லேன், வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி புஸ்வதி தவச்செல்வம் நேற்று (25.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலம் குமாரசுவாமி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், கிருஷ்ணப்பிள்ளை தவச்செல்வத்தின் அன்பு மனைவியும் அநுரதன் (கண்ணன்), அனிந்திரை (பபா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திவாகரனின் அன்பு மாமியும், றொஸானின் அன்புப் பேர்த்தியும் திலகவதி, நவரத்தினராசா (தவம்), சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணி, தவமலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சிவா னந்தராசா சிவலோகநாதனின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரது பூதவுடல் மஹிந்த மலர்ச்சாலையில் (591, காலி வீதி கல்கிஸை) மு.ப. 10 மணிக்கு வைக்கப்பட்டு 2 மணியளவில் கிரியைகள் நடைபெற்று மாலை 5 மணிக்கு கல்கிஸை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பரஞ்சோதி சிவபாக்கியலட்சுமி



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி சிவபாக்கியலட்சுமி நேற்று (25.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சித்திரவல்லி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமையா- அன்னம்மா தம்பதியினரின் மருமகளும் கஜனியின் (ஆசிரியர், வட்டு கார்த்திகேய வித்தியாலயம்) அன்புத் தாயாரும் இராஜமோகனின் (லங்கா சிமெந்து லிமிட்டெட்) மாமியாரும், மயூரிக்காவின் (மாணவி, யாழ்ப்பாணக் கல்லூரி) பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26/11/2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாதர் சங்க வீதி,*
*சித்தன்கேணி.* (92488)

தகவல்: பரஞ்சோதி - கணவர்,
கஜனி - மகள், இராஜமோகன் - மருமகன்.

## தம்பிப்பிள்ளை செல்லத்துரை

(முன்னாள் உப அதிபர், நடேஸ்வராக் கல்லூரி)



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை செல்லத்துரை நேற்று (25.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பார்வதிதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.யூனியன் கல்லூரி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற திருமதி தெ.செல்வராஜா மற்றும் திருமதி க.கஜநாயகபாகு, வைத்திய கலாநிதி சி.நாகேந்திரா ஆகியோரின் மைத்துனரும் சிறீஸ்கந்தராஜா, சுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வீரவாகு, சுசீலா ஆகியோரின் மாமனாரும் அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி), கம்றித்தா, கர்சித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2009) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/4, வைமன் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (A)

தகவல்:
Dr.சி.நாகேந்திரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தத் தேர்தலில் மஹிந்தர் வென்றால் அப்பதவிக் காலம் எப்போது தொடங்கும்?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது முதலாவது பதவிக் காலத்துக்குரிய ஆறு ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னரே - இரண்டு ஆண்டுகள் முன்பதாகவே - அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், இந்த எஞ்சிய இரண்டு ஆண்டு காலத்துக்குரிய அவரது பதவி நிலை என்னாயிற்று, அதனை அவர் தியாகம் செய்து விட்டாரா என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

ஜனவரி, நடுப்பகுதியில் - அல்லது மூன்றாம் வார முடிவில் - நடத்தப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ அல்லாத ஒருவர் வெற்றி பெறுவாராயின், அந்தத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், வெற்றி பெற்றவரே ஜனாதிபதியாகி விடுவார். மஹிந்த ராஜபக்ஷ முற்கூட்டியே அடுத்த தேர்தலை நடத்திய காரணத்தினால் தமது பதவிக் காலத்தில் இரண்டு ஆண்டுகளை இழந்து, தியாகம் செய்தவராகத் தமது வீட்டுக்கு நடையைக் கட்டவேண்டியதுதான்.

ஆனால், அப்படியல்லாமல் அத்தேர்தலில் அவர் வெற்றி பெற்றால், நிலைமை என்ன என்பதுதான் பிரதான கேள்வியாகும்.

தமது முதலாவது பதவிக் காலத்தில் எஞ்சியிருக்கும் இரண்டு ஆண்டுகளும் முதலில் அதிகாரத்தில் அவர் தொடர்ந்துவிட்டு, அதன்பின்னர் தமக்குத் தற்போது கிடைக்கும் வெற்றிக்கான ஆறு ஆண்டு காலப் பதவியை அவர் தொடரலாமா என்பதுதான் பலரினதும் சந்தேகமாகும்.

அதாவது, 2010 ஜனவரியில் இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் தமக்குக் கிடைக்கக்கூடிய வெற்றியைப் பயன்படுத்தி 2018 ஜனவரி வரை எட்டு ஆண்டுகள் பதவியில் அவர் தொடர்வதற்கு வாய்ப்புண்டா என்பதே வினாவாகும்.

தமது முதலாவது பதவிக்காலத்தில், அந்தப் பதவிக் காலம் முடிய முன்னரே முற்கூட்டித் தேர்தல் நடத்தும் ஒரு ஜனாதிபதி, இரண்டாவது தேர்தலில் வெல்லும் போது, அவரது பதவிக்காலத்தை எப்போது ஆரம்பிப்பது என்பது தொடர்பான ஏற்பாடுகளை அரசமைப்பின் மூன்றாவது திருத்தம் விளக்கியுள்ளது. எனினும், அது தொடர்பான ஏற்பாடுகளுக்கு - சட்ட வாசகத்துக்கு - விளக்கம் கொடுப்பதிலும் சட்ட வியாக்கியானம் செய்வதிலும் ஒரு குழப்பகரமான நிலை நிலவுகின்றது.

என்றாலும், வரும் ஜனவரியில் இடம்பெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வென்றால், அவர் அடுத்த ஆண்டு நவம்பர் 19 வரை தற்போதைய - முதலாவது பதவிக்காலத்துக்குரிய - அதிகாரத்தில் நீடித்த பின்னர், அதன் பின்பு அடுத்த ஒரு மாதத்துக்குள் மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்து இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்கி, அதிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு அதனைத் தொடர முடியும் என்பதே சட்ட அறிஞர்களின் பொதுவான விளக்கமாக இருக்கின்றது.

ஏனெனில், தற்போதைய பதவிக் காலத்தை 2005 நவம்பர் 19 ஆம் திகதியே அவர் ஆரம்பித்தார். அத்திகதிக்கு நேர் ஒத்த திகதிவரை (அதாவது நவம்பர் 19 ஆம் திகதிவரை) அவர் தற்போதைய பதவியில் தொடரலாம் என்ற சாரப்படவே மேற்படி சட்ட வாசகத்துக்கு இப்போது சட்ட அறிஞர்கள் விளக்கம் கொடுக்கின்றனர்.

அப்படிப் பார்த்தால், வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெல்வாராயின் தமது இரண்டு பதவிக் காலங்களுக்கும் உரிய பன்னிரண்டு ஆண்டுகள் பதவிக் காலத்தில் ஆக ஓராண்டை மட்டுமே அவர் தியாகம் செய்யவேண்டியவராக இருப்பார்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கூட தத்தமது இரண்டு பதவிக் கால அதிகாரத்தில் ஏறத்தாழ பதினொரு ஆண்டுகளே பதவியில் இருந்தார்கள் என்பதும் மறக்கற்பாலதல்ல.

எப்படியாயினும், இத்தகைய சர்ச்சைக்குரிய விடயங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் எப்போது ஆரம்பிக்கின்றது, எப்போது முடிகின்றது என்ற அம்சங்களைத் தீர்மானிப்பது அரசமைப்புக்கான பொருள்கோடலிலேயே தங்கியுள்ளது என்பதும் முக்கிய அம்சமாகும்.

அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு எவரொருவர் விளக்கம், வியாக்கியானம் கூறினாலும், இது விடயத்தில், இதுதான் அரசமைப்பு ஏற்பாட்டின் பொருள் என்று அறுதியிட்டுக் கூறும் ஒரே அதிகாரம் இலங்கையின் உயர்நீதிமன்றத்துக்கு மட்டுமே உரியது.

அதேசமயம், அரசமைப்பு ஏற்பாடு ஒன்றின் விளக்கம் என்ன, அதற்குரிய வியாக்கியானம் யாது என்பன பற்றிய வினாக்களை உயர்நீதிமன்றத்திடம் கேட்டுப் பெறும் உரிமை ஜனாதிபதிக்கு விசேடமாக உள்ளது.

அவ்வாறு ஜனாதிபதி கோருமிடத்து உயர்நீதிமன்றம் அது குறித்து விசாரித்து, அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு பொருள் ஆராய்ந்து, ஜனாதிபதிக்குத் தனது கருத்தை வழங்கவேண்டும். இந்த விசேட ஆலோசனை நியாயாதிக்கம் இலங்கை உயர்நீதிமன்றத்துக்கு உள்ளது.

ஆகவே, ஜனவரியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே இவ்விடயத்தில் உயர் நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை கோரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், தற்போது நடைபெறப் போகும் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெல்வாராயின் மட்டுமே, அவரது அடுத்த பதவிக்காலம் எப்போது ஆரம்பமாகும் என்ற சர்ச்சை ஏற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. தோற்பாராயின், அத்தகைய சர்ச்சைக்கு இடமேயில்லை.

# யாழ்.திறந்தவெளி அரங்கை மீளமைக்க இந்தியா 70 மில்லியன் ரூபாவை வழங்கும்

## குடாநாட்டுக்கு வருகை தந்த தூதுவர் அசோக் காந்த் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.26

யுத்தத்தால் அழிவடைந்த யாழ். திறந்த வெளியரங்கை 70 மில்லியன் ரூபா செலவில் மீளமைப்பதற்கு இந்தியா நிதி உதவிகளை வழங்கவுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.பொதுநூலகத்திற்கு நேற்று விஜயம் செய்த இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் நூலகத்தைச் சுற்றிப் பார்வையிட்டார்.

நூலக அபிவிருத்திக்கு இந்தியா தனது பங்களிப்பினை வழங்கும் என்றும், துரையப்பா விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்வதற்கும் யாழ்.மாநகர சபைக்குப் புதிய கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கும் இந்தியா உதவும் என அசோக் கே.காந்த் அங்கு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தால் சிதை வடைந்துள்ள யாழ்.திறந்த வெளி யரங்கை யாழ்.மக்களின் கலாசாரத் தைப் பிரதிபலிக்கும் வகையில் நவீன வசதிகளுடன் மீளமைப்பதற்கு இந்தியா 70 மில்லியன் ரூபா நிதியினை வழங்கவுள்ளது.

பெரும்பாலும் இந்த நவீன திறந்த வெளியரங்கை அமைக்கும் பணிகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

யாழ்.நூலகத்திற்கு இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த நேற்று மதியம் 12.30 மணியளவில் விஜயம் செய்திருந்தபோது அவருடன் கொரியா நாட்டின் இலங்கைக்கான தூதுவர் சோங் கிசோங், தாய்வான் நாட்டின் இலங்கைக்கான பிரதிநிதி தினகோன் கனசுதா மற்றும் மலேசியா நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ததுக் றோஸ்லி இஸ்மாயில், இந்தோனேசியா நாட்டின் இலங்கைக்கான தூதுவர் டிஜாட்டர் குசேன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இவர்களுடன் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (50-9-16-224-15)

# கிராம அலுவலர் ஒப்படைத்த இரு தங்கச் சங்கிலிகள்

யாழ்ப்பாணம்,நவ.26

சாவகச்சேரி டச்சு வீதியில் கண்டெடுத்த தங்கச் சங்கிலிகளை உரியவரிடம் ஒப்படைத்தார் சாவகச்சேரி நகர்ப் பிரிவு கிராம அலுவலர்.

கடமை முடிந்து வீடு திரும்பிய வேளையில் சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள சங்கக் கடைக்கு முன்பாகக் கண்டெடுத்த 64 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு தங்கச் சங்கிலிகளையும் கிராம அலுவலரான வி. சரவணநாதன் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்தார்.

சங்கிலிகளைத் தொலைத்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பெண் நேற்று பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து சங்கிலிகளைப் பெற்றுக்கொண்டார்.

# டிசெ.08 இல் தேசிய மத்தியஸ்த தினம்

யாழ்ப்பாணம்,நவ.26

தேசிய மத்தியஸ்த தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் யாழ்.மாவட்ட மத்தியஸ்த சபை உறுப்பினர்களையும் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். யாழ். மாவட்டத்தில் செயற்படு நிலையில் உள்ள மத்தியஸ்த சபையில் இருந்து ஐந்து பேர் வீதம் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்குச் செல்லும் மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு ரூபா 2 ஆயிரமும், போக்குவரத்துப் படியும் வழங்கப்படவுள்ளது. (ஒ-302)

# வெளி நாடுகளுக்குச் செல்வதற்கு அரச டாக்டர்களுக்குத் தடை!

கொழும்பு, நவ.26

அரசாங்க மருத்துவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதற்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. நாடு முழுவதும் தொற்று நோய்கள் பரவிச் செல்லும் காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்குப் போதியளவு மருத்துவர்கள் தேவை என்ற காரணத்தினால், வெளிநாட்டுப் பயணங்களை ரத்துச் செய்யுமாறு மருத்துவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையில் இந்தத் தற்காலிகத் தடை நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு, பன்றிக் காய்ச்சல் மற்றும் எலிக் காய்ச்சல் போன்ற நோய்கள் நாடு முழு வதிலும் துரித கதியில் பரவி வருவதாக சுகாதார வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (50)

# வடக்கில் இடம்பெயர்ந்த தமிழ் மாணவர்களின் கல்விச் சுதந்திரத்தைப் பாதுகாக்குமாறு கோரிக்கை

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, நவ. 26

வடக்கில் இடம்பெயர்ந்த தமிழ் மாணவர்களின் கல்வி சுதந்திரத்தைப் பாதுகாக்குமாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

இது தொடர்பாக ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த 30வருடங்களாக நிலவிய யுத்தம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. அந்த யுத்தம் தோன்றுவதற்கு காரணமாயிருந்த நிலைமைகள் இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கிறதென்பதே எமது கருத்தாகும்.

இங்கே தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்வதற்கு எடுக்கவேண்டிய அவசரமானதும் அத்தியாவசியமானதுமான சில நடவடிக்கைகள் குறித்து உங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

01.பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் 2ஆம் ஆண்டு மாணவியான ராசையா துவாரகா என்பவர் கடந்த நவம்பர் 12ஆம் திகதி அவரது அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

02.வடக்கின் இடம்பெயர் முகாம்களில் வசிக்கும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் முகாம்களுக்குள் முடங்கிக் கிடப்பதால், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இனங்களின் மீதான அழுத்தத்தை இல்லாமலாக்கி தேச ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான பயணத்தைத் தொடர வேண்டிய அரசு மக்களை பிரித்து துன்புறுத்தும் திசையில் பயணிக்கிறது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களே, கீழ்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

01. புலிகளோடு கடந்த காலங்களில் தொடர்பு வைத்திருந்தார்கள் எனக் குற்றஞ்சாட்டி, தமிழ் மக்களை அச்சுறுத்தி மேற்கொள்ளப்படும் கைதுகளை உடனடியாக நிறுத்துதல்.

02.இடம்பெயர் முகாம்களில் வசிக்கும் அனைத்துப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாத்தல்.

03. தமிழ் மாணவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது குறித்து இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட 6 அம்சயோசனைகளை செயற்படுத்தல் (யோசனைகள் இதனோடு இணைக்கப்பட்டுள்ளன.

யுத்தம் காரணமாக இடம்பெயர் முகாம்களில் வசிக்கும் தமிழ் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையை உறுதி செய்தல்.

இடம்பெயர் முகாம்களில் வசிக்கும் க.பொ.த. சாதாரண, உயர்தர பரீட்சைகளுக்குத் தேவையான கல்வி உபகரணங்கள் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல்.

அனைத்து இடம்பெயர் மாணவர்களுக்குத் தேவைக்கேற்ப பாடப்புத்தகங்களைப் பெற்றுக்கொடுத்தல்.

வடக்குகிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் அசிரியர் வெற்றிடத்தைப் பூர்த்தி செய்தல் ... றுள்ளது.

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 11 27.11.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | தசமி பி.ப.04.14 வரை |
| நட்சத்திரம்: | உத்தரட்டாதி பி.இ.02.53 வரை |
| சுபநேரம்: | 06.12-07.42வரை |
| ராகுகாலம்: | 10.42-12.12 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகரில் இரு கடைகளில் மாட்டிறைச்சி பறிமுதல்

நல்லூர், நவ. 26

சட்டவிரோதமாக இரண்டு மாட்டிறைச்சிக் கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்படுவதற்காக நீதி மன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட சம்பவம் நேற்று குருநகர் பகுதியில் நடைபெற்றது.

இது பற்றிக் கூறப்படுவதாவது கால்நடைகள் இறைச்சிக்காக கொல்களத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குவைத்து அவை வெட்டப்பட்டு சுகாதார பிரிவினரால் சீல் வைக்கப்பட்ட இறைச்சி கடைகளுக்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். இந்த முறையை மீறி இரண்டு இறைச்சிக்கடைகளில் மாட்டிறைச்சி விற்கப்படுவதாக குருநகர் பிரிவு சுகாதார பரிசோதகருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து அந்தப் பகுதியின் பொது சுகாதார பரிசோதகர் எஸ்.ரகுமார் குறிப்பிட்ட கடைகளுக்கு சென்று விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த இறைச்சிகளைக் கைப்பற்றினார்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதி மன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நீதிவான் முன்னிலையில் குறித்த நபர்கள் குற்றத்தினை ஒப்புக் கொண்டதினால் அவர்களில் ஒருவருக்கு 7,500 ரூபாவும் மற்றையவருக்கு 7,000 ரூபாவும் தண்டப்பணமாக அறவிடப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டனர். (ஒ-111-7)

## பெயர் மாற்றம்

பாலசிங்கம் ஸ்ரீவசந்தன் ஆகிய நான் இன்று (26.11. 2009) தொடக்கம் எனது பெயரை பாலசிங்கம் ஸ்ரீவரோதயன் என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜன நாயக குடியரசு மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(92490) பாலசிங்கம் ஸ்ரீவரோதயன்

## கண்ணீர் அஞ்சலி

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியர்
திருமதி அனற்மரீடா றொபின் அவர்களின் அன்புத் தந்தை (92483)

### அந்தோனிப்பிள்ளை செல்வநாயம்

அவர்கள் 17.11.2009 வெள்ளிக்கிழமை காலமானார். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்



### நடராசா சோதிலிங்கம்

(தையிட்டி பவா)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சோதிலிங்கம் நேற்று (25.11.2009) புதன்கிழமை காலமானார்

அன்னார் திருமதி சோ.சிவகுமாரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா - சிவபாக்கியம், தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பவளம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஸ்ரீபிரணவி (கனடா), ஸ்ரீபிரசாந்தி (W.F.P- warehouse, Kopay), ஸ்ரீபிரதீபா ஆகியோரின் அன்புத்தந்தையும், சி.சிவானந்தனின் (கனடா) அன்பு மாமனாரும், அஷ்சயனின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான டாக்டர் ராஜரட்ணம், திருமதி தெய்வநாயகி மற்றும் தருமலிங்கம், குணசேகரம், திருமதி ப.ஜெயமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமன் மற்றும் திருமதி தெய்வநாயகி, திருமதி லங்கநாயகி, க.பரமேஸ்வரன், திருமதி சரோஜினிதேவி, திருமதி நா.செல்வகுமாரி, திருமதி ச.புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான துரைராசா, திருமதி கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், ந.நாகராஜா, காலஞ்சென்ற டாக்டர் சண்முகராஜா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

91/19, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 021 222 2941
தகவல்: குடும்பத்தினர். (92481)

## சிறுமி கிணற்றினுள் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், நவ. 26

கிணற்றினுள் தவறி விழுந்த சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நாவாந்துறை வடக்கில் நிகழ்ந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த யஸ்ரின் கிறிஸ்ரலா (வயது 6) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சிறுமியின் சடலம் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-7-78)

## முதியோர் கௌரவிப்பு

கைதடி, நவ.26.

கனடா வாழ் கைதடி உறவுகளின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகம் அண்மையில் முதியோர் கௌரவிப்பு விழாவை கைதடியில் நடத்தியது.

அன்றைய தினம் 200 இற்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு புடைவைகளும், நிதியும் வழங்கப்பட்டதுடன், சனசமூக நிலையங்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ-288)

## டெங்கு ஒழிப்பு அறிவுரைப் பதாகைகள்

சுழிபுரம், நவ.26.

சுழிபுரம் உப அலுவலகம் முன்பாக பிரதேச சபையினர் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் அறிவுரைகள் கொண்ட பதாகைகளைப் பார்வைக்காக வைத்துள்ளனர்.

நோயின் ஆரம்ப நிலையில், மக்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய நடவடிக்கை, சுற்றுச்சூழல் சுகாதாரம் போன்ற வாசகங்கள் அவற்றில் காணப்படுகின்றன. (ஒ-28)

## வீடு விற்பனைக்குண்டு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் இருபாலைக்கு செல்லும் வீதியில் ஐயப்பன் ஆலயத்திற்கு பின்புறத்தில் 4 பரப்பிற்கு 2 குழி குறைவான காணியில் 2 வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0776515945 (92478)

## மின் விளக்குகள் விஷமிகளால் சேதம்

யாழ்ப்பாண, நவ.26.

யாழ். நகர் பழைய பூங்கா வீதியில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வீதியால் இரவு நேரங்களில் செல்லும் மக்கள் இதனால் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். கடந்த சில தினங்களில் இந்த வீதியில் சென்ற சிலர் தமது உடைமைகளையும் கூட இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-23)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



### கணபதிப்பிள்ளை சண்முகநாதன்

[சமாதான நீதிவான், கிராமசேவையாளர் (ஜே/409), அரச மொழி பெயர்ப்பாளர், விசக்கடி வைத்தியர், சிங்கள ஆசான், ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் முன்னாள் முகாமையாளர், சனசமூக நிலைய முன்பள்ளிப் போசகர், யா/வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர்]

மண்ணில் 15.02.1943

விண்ணில் 26.11.2006

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே! ஆத்தியடி மண்ணில் மலர்ந்து
உதிர்ந்த அன்பனே! ஊர் மக்களின் உயர்வுக்காய்
அயராது உழைத்த ஆசானே! எம்மைவிட்டு நீங்கி மூன்று
ஆண்டுகள் கழிந்தும், எம் நினைவில் ஒருநிமிடம் கூட
ஆகவில்லையே - அப்பா! அன்று அன்பின் அரவணைப்பில்
வளர்ந்தோமே அப்பா! இன்று நீங்கள் காட்டிய அன்பின்
பாதையில் வளர்கின்றோமே - நாம்
என்றும் உம் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது - அப்பா!
உங்களோடு வாழும் நினைவுகளுடன்
நம் பணி தொடர உம் ஆசி வேண்டி......
உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆத்தியடி,
பருத்தித்துறை. (90970)
மனைவி, மகன், மகள், மருமகள், மருமகன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



### திருமதி சுப்பிரமணியம் இராசம்மா

(நாவற்குழி)

பிறப்பு 27.12.1928

இறப்பு 12.11.2009

கடந்த 12.11.2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (27.11.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 12, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு. (92485)
குடும்பத்தினர்.

## நெஞ்சம் கனக்கிறதே....

### S.சிவகரன் (ரவி)

(முன்னாள் ஊழியர்,
பஸ்ரியன் ஹொட்டல்)



உடனிருந்து உள்ளன்போடு
உயர்வு காண உழைத்த காலம்
லண்டன் மாநகரம் சென்ற பின்பும்
உறவாடிய நல் மனதின்
வரவு காண எதிர்பார்த்த பொழுதில்
வந்ததே ரவியின் பிரிவுச் செய்தி
தாங்காத துயரில் குடும்பத்தாருடன்
நாமும் கலங்குகின்றோம்.
நின் ஆன்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகிறோம்.

37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (92489)
உரிமையாளர்,
பணியாளர்கள்,
பஸ்ரியன் ஹொட்டல்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### தங்கராசா தயாரூபன்

தோற்றம் 26.05.1979

மறைவு 26.11.2007

உணர்வுகள் ஊமையாய் ஊருகின்றன
நினைவுகள் உன்னைச் சுற்றியே
நித்தமும் சிறகடிக்கின்றன.
உந்தன் சுவடுகள் இந்த மண்ணில
எம் மூச்சோடு கலந்திருக்கும்.

என்றும் நினைவுடன்
புத்தூர் கிழக்கு, புத்தூர். (92477) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 ★ 11 ★ 1933



மறைவு
07 ★ 12 ★ 2008

### பொன்னையா திருநாவுக்கரசு

(சுபா சுவையக உரிமையாளர், சாவகச்சேரி)

திதி:நவமி

ஆண்டொன்று ஓடிச்சென்றாலும்
அகமெங்கும் உங்கள் நினைவுகளே
நீண்ட கனவோடு நாம் வாழ்திருக்க
நீங்கள் எமைப் பிரிந்திட்ட நியாயமென்ன
தாங்க முடியாத துயரினால் தவிக்கிறோம்.
தரணியில் உங்களை எங்கு காண்போமினி?

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம். (சி/562717)
மனைவி,மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்ப இந்தியாவின் நிதி உதவி தேவை

## இந்தியத்தூதுவரை வரவேற்று யாழ். முதல்வர் விடுத்த கோரிக்கை



யாழ்ப்பாணம்,நவ.26

போரினால் அழிந்துபோய்க் கிடக்கும் யாழ்ப்பாண நகரை சீரமைத்து - மீளவும் கட்டியெழுப்புவதற்கு இந்தியா உதவி செய்ய வேண்டும் என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா யாழ்ப்பாணம் வருகை தந்த இந்திய தூதுவர் அசோக் கே.காந்திடம் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள இந்திய உயர் ஸ்தானிகருக்கும் குழுவினருக்கும் யாழ்.நகர முதல்வர் தலைமையில் மாநகர சபையில் நேற்று வரவேற்பளிக்கப்பட்டது. இந்தியக் குழுவினரை வரவேற்று உரை நிகழ்த்திய முதல்வர் திருமதி பற்குணராஜா, போரினால் சீரழிந்து போயுள்ள யாழ்ப்பாண நகரின் இன்றைய நிலைமையை எடுத்து விளக்கினார்.

நகரைக் கட்டியெழுப்புவதற்கு உதவிகள் வழங்க வேண்டும் என்றும் முதல்வர் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இந்தியா மேற்கொள்ளும் வர்த்தக செயற்பாடுகளுக்கெனப் பொருத்தமான காணி வசதிகளை தாம் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் முதல்வர் உறுதியளித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 1987ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கையை செயல்படுத்த முடியாமல் போனமைக்கு முதல்வர் கவலை தெரிவித்தார். இந்தியாவால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பொன்னான ஒரு சந்தர்ப்பம் கைநழுவிப் போய்விட்டது என்றார்.

நாங்கள் ஒரு தோல்வி கண்ட தேசம் அல்ல. உங்கள் நாட்டைப் போன்று நாங்களும் மீளவும் எழுச்சி கொள்வோம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இப்பொழுது அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளையே நாங்கள் எதிர்நோக்குகின்றோம். நிதிவசதிகள் எங்களுக்குத் தேவைப்படுகின்றது. உங்கள் நிதியுதவியுடன் எமது நாட்டைக் கட்டியெழுப்ப நாங்கள் விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்பும் பெரும் பொறுப்பு இப்போது எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. நகரைக்கட்டி யெழுப்புவதும் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதும் எமது கடமையாக விருக்கின்றது. இந்த வகையில் இந்தியாவின் நிதியுதவிகளையும் நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

அவர் மேலும் பேசுகையில், கடந்த 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் நிலவிய நிலைமைகளால் எமது இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் கல்வி மற்றும் தொழில்வாய்ப்புகள் சீரழிந்து போய்விட்டன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெருமுயற்சியால் இப்போது யாழ். நகரில் பெரும்பாலான இராணுவக் காவலரண்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன - என்றார். (ப-10)

## முதலாம் அரையாண்டுப் பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தால் நடத்தப்பட்டுவரும் பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேரசூசி ஆகியவற்றை நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பட்டப்பின்படிப்புகள் பீடாதிபதி அறிவித்துள்ளார். (50-201)




# இடம்பெயர்ந்த மாணவர் கற்கும் பாடசாலைகளுக்கு வசதிகளை வழங்க நிக்கொட் நிறுவனம் முன்வருகை

## தகவல்கள் திரட்டப்படுவதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.26

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளில் வகுப்பறைகளை அமைக்கவும் தளபாடங்களை வழங்குவதற்கும் 'நிக்கொட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மாணவர்களில் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இணைந்துள்ள மாணவர் வகுப்பறைகள் போதாமையினாலும், தளபாடப் பற்றாக்குறையினாலும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இத்தகைய நிலைமையைக் கருத்திற் கொண்டு மாணவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தடுக்கும் முகமாக பாடசாலைகளில் மேலதிக வகுப்பறைகளை அமைப்பதற்கும், தளபாட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் 'நிக்கொட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

இது தொடர்பான திட்டங்களை அந்த நிறுவனம் கோரியுள்ளது. நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள மாணவர்களைக் கூடுதலாக உள்ளடக்கி பாடசாலைகள் இந்தத் திட்டத்திற்கென தெரிவு செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான விவரங்களை உடனடியாக மாகாணக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விவரங்களை அனுப்பியவுடன் அவை 'நிக்கொட்' நிறுவனத்திடம் கையளிக்கப்படும்.

பெரும்பாலும் புதிய கல்வியாண்டுடன் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (80-9)

## நோயாளிகளுக்கான யாழ். - கொழும்பு அம்புலன்ஸ் சேவை

யாழ்ப்பாணம், நவ.26

நோயாளர்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் அம்புலன்ஸ் மூலமாக வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை நடத்தி வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக விவரங்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தின் 021 2222561, 9792, 021 3215555 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201)

# மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் சேவை உதவியாளர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டோர்

யாழ்ப்பாணம், நவ.26

மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் சேவை உதவியாளர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பட்டியலிலிருந்து 4ஆவது கட்டமாக 10 பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகளுடன் வந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வடவலய உதவிப்பொது முகாமையாளர் த.க.ஆனந்தராசா அறிவித்துள்ளார். இந்த நியமனத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு: ஜே.கஜமுகி (திருநெல்வேலி), கே.கோசலா (கோண்டாவில் மேற்கு), எஸ்.எஸ். மாதங்கி (கரவெட்டி கிழக்கு), டபிள்யூ. மயூரா (மானிப்பாய்), எம்.ரஞ்சனா (வட்டு. தென்மேற்கு), எஸ்.ஈ.ராதிகா (கரவெட்டி மத்தி), எஸ்.செல்வமலர் (நவாலி மத்தி), பி.சண்முகராஜா (திருநெல்வேலி கிழக்கு), எல்.சிந்துசா (யாழ்ப்பாணம்), எஸ்.துளசிதா (இணுவில் தெற்கு). (50-204)

# கடற்றொழில் ஓய்வூதியத் திட்டத்தில் ஆர்வமுடன் இணையும் குடாநாட்டு மீனவர்

சண்டிலிப்பாய், நவ.26

கடற்றொழிலாளர்களின் நலன்கருதி அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடற்றொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைவதில் குடாநாட்டு மீனவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையும் இணைந்து செயற்படுத்தும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் குடாநாட்டில் தற்பொழுது மிக வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மீனவர் சங்கங்களும் இத்திட்டத்தில் மீனவர்களை இணைப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தைச் சேர்ந்த 300க்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் தற்பொழுது இத்திட்டத்தில் இணைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள சங்கத் தலைவர், ஒவ்வொரு அங்கத்தவரும் ஓய்வூதியத் திற்குரிய கட்டுப்பணம் முழுவதையும் ஒரேதடவையில் முழுமையாகக் கட்டி வருவதாகக் கூறினார்.

இதேவேளை பிரதேச செயலகங்களால் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திலும் கடற்றொழிலாளர்கள் இணைக்கப்பட்டுள்ளதனால் இரு திட்டங்களிலும் உறுப்பினர்களாக இருக்கலாமா என்ற சந்தேகம் கடற்றொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-115)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 26

இந்து சமய கலாசார திணைக்களம் நடத்தும் மாதாந்தச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஒட்டுமடம் ஞானவைரவர் அறநெறிப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி வியஜகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சைவப் புலவர் நித்திய தசீதரனின் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (50-9)




யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த இந்தியத் தூதுவருக்கு யாழ். மாநகரசபை வழங்கிய வரவேற்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் ஆகியோர் உரையாற்றுவதையும் முதல் இரு படங்களிலும் காணலாம். யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்துக்கு குடாநாட்டு உருவம் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னம் வழங்குவதையும் யாழ்.மாநகரமுதல்வர் ... இந்தியத் தூதுவர் ... நிற்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே.காந்த் மற்றும் அதிகாரிகள் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

**உதயன்**

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வார காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நாளைமறுதினம் சனிக்கிழமையுடன் முடிவடைய இருந்த இந்தப் போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1142 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 03 05 12 55

24-11-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,932,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 226,203 | 20/- | 4,524,060/- |
| 2 இலக்கங்கள் | 21,998 | 40/- | 879,920/- |
| 1 இல. + லக்கினம் | 20,573 | 60/- | 1,234,380/- |
| 2 இல. + லக்கினம் | 1,996 | 200/- | 399,200/- |
| 3 இலக்கங்கள் | 616 | 1000/- | 616,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,932,750/- | - |
| மொத்தம் | | | 8,783,560/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 271,447 | | 9,283,560/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,903,750/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : பிரதீத் சிரந்த பண்டார மாத்தறை

கைத்தொலைபேசி வெற்றியாளர்: குணசீலி பெர்னாந்து அலதெனிய

2009 நொவெம்பர் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 400720414-8-24 |
| கம்பஹா | 400738367-7-18 |
| திருகோணமலை | 400737293-4-45 |
| அம்பாறை | 400729408-0-15 |
| நுவரெலியா | 400735730-3-22 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## தவறிவிட்டது

செ.மயூரதாசன் என்பவருடைய இருவழி விமான பயணச் சீட்டு (யாழ் - கொழும்பு) ஒன்று நாயன்மார்க்கட்டுக்கும் இந்து மகளிர் கல்லூரிக்குமிடையில் 25.11.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.59, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தொ.பே.: 0773126393 (92476)

## வீடு விற்பனைக்கு

1¾ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. புலோலி கிராமக் கோட்டடியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பிரதான வீதியில் கிராமக் கோட்டிற்கும் முதலாம் கட்டைக்கும் இடையில் கிழக்குப் புறமாகச் செல்லும் வீதியில் 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம் 0770458611 (சி/562712)

## குழந்தையால் விபரீதம்; தாய்க்கு எரிகாயங்கள்

யாழ்ப்பாணம், நவ. 26

தாயின் அரவணைப்பில் படுத்திருந்த குழந்தை காலால் உதைத்ததால் குப்பி விளக்கு சரிந்து விபரீதம் நிகழ்ந்துவிட்டது. உறக்கத்திலிருந்த தாய் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

கொடிகாமம் கச்சாயில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ச.சுகந்தினி (வயது 22) என்பவரே எரிகாயங்களுக்கு ஆளானார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை மாமரத்தில் ஊஞ்சல் கட்டுவதற்கு ஏறிய சிறுமி தவறி வீழ்ந்ததில் கை முறிந்து யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கச்சாயில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.மதுரிகா (வயது 11) என்ற சிறுமியே பாதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-207)

## வீடமைப்புத்திட்ட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 26

தென்மராட்சி பிரதேசத்தின் வீடமைப்புத் திட்டத்திற்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளது.

சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்

**திரு.இரா.ஜெயக்குமார்**

அவர்கள் அதிபர் தரம் 3 இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் பணி மேலும் உயர மனமார வாழ்த்துகின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
யா/நடேஸ்வராக் கல்லூரி,
யா/நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்.

(சி/562718)

## அறிவித்தல்
## வலி.தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் பட்டின உப அலுவலகம்

ஆதனப் பெயர்மாற்றம் இல. 96,98,98/2,98/4,100 லோட்டன் வீதி, வட்டாரம் - 06

ஆதன இல. 96,98,98/2,98/4,100 லோட்டன் வீதி, வட்டாரம் - 06இல் எஸ்.சரவணமுத்து எனும் பெயரில் எமது ஆதனப்பதிவேடுகளில் காணப்படும் ஆதனங்களை, முருகேசு தியாகராஜா என்பவர் தமக்கு உரிமையானது என பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து முருகேசு தியாகராஜா என்பவரின் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை. (சி/562715)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் இலங்கையின் மூலதனச் சந்தை நிலைமைகள் எனும் விடயத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன் 10 பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட வினாடிவினாப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை மாணவர்கள் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர். இப்போட்டியில் பங்குபற்றி சாதனைபடைத்த-

1. நடராஜா குணபாலன் - நான்காம் வருடம்
2. யசோ கந்தசாமி - நான்காம் வருடம்
3. தர்சியா அமிர்தலிங்கம் - நான்காம் வருடம்
4. அனுஷா சிவானந்தலிங்கம் - நான்காம் வருடம்
5. டிலோஜா அலன்டே - நான்காம் வருடம்
6. தர்மபாலன் சுரேசன் - மூன்றாம் வருடம்

ஆகிய மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். தனிப்பட்ட திறமைக்கான தங்கப்பதக்கத்தை நடராஜா குணபாலன் வென்றெடுத்தமைக்காக அவரை மேலும் பாராட்டுகிறோம்.

போட்டியில் வெற்றி பெற்றமைக்காக பணப்பரிசுடன் மூலதனச்சந்தை தொடர்பான கற்கை நெறியை (CCM) மேற்கொள்வதற்கான புலமைப்பரிசிலும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வாழ்த்துவோர்:
துறைத்தலைவி, பேராசிரியர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
முகாமைக்கற்கைகள் துறை, யாழ். பல்கலைக்கழகம். (92479)

## மரண அறிவித்தல்

### நல்லையா தங்கச்சியம்மா



நவாலியைப் பிறப்பிடமாகவும் ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தங்கச்சியம்மா நேற்று (25.11.2009) புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், மல்லிகாதேவி (நீர்கொழும்பு), சற்குணதேவி (ஆறுகால்மடம்), தவராஜா (ஆனைக்கோட்டை) லோகேஸ்வரன் (ஜேர்மனி), ஜெயகுணரூபன் (திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லத்தம்பி மகேந்திரராஜாவின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.11.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தவராஜா (மகன்)

புதுறோட், ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (92480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்வாரா பொன்சேகா?

**ஜனாதிபதித் தேர்தலொன்றில் ஜெனரல் சரத் பொன்சேகாவால் வெற்றிவாகை சூடிக்கொள்ள இயலுமா?**

**இதற்கான பின்புலங்களை ஆழ்ந்து நோக்கும் விதத்தில் அமைகிறது இக்கட்டுரை.**

**லசந்த வீரகுலசூரிய என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை கடந்த 15 ஆம் திகதிய 'லக்பிம' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.**

**அதன் தமிழ் வடிவம் இது.**

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகா போட்டியிடவுள்ளார் என இந்நாட்களில் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் நாடு முழுவதிலும் பரவிச் செல்ல ஆரம்பித்துள்ளன. டிசெம்பர் முதலாம் திகதியிலிருந்து கூட்டுப் படையணிகளின் தளகர்த்தாவென்ற பதவியிலிருந்து விலகிக்கொண்டுள்ளமையை அடுத்து எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெறுமானால் அது தொடர்பாக எதிரணியின் பொது வேட்பாளராகப் பிரமுகர் ஜெனரல் சரத் பொன்சேகா போட்டியிடக்கூடுமென்ற நம்பிக்கை பெரிதும் வலுப்பெற ஆரம்பித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகா நிச்சயமாகவே ஜனாதிபதித் தேர்தலில் நிற்பாரா? இல்லையா? அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வருவாரானால் அவரால் வெற்றிபெற இயலுமா? - இயலாதா? என்பது தொடர்பாகவும் கூட பலதரப்பட்ட கருத்துகள் நாட்டில் உலவுவதைக் காணமுடிகின்றது.

ஐ.தே .கட்சி மற்றும் ஜே.வி.பி. என்ற இவ்விரு கட்சிகளுமே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பொது வேட்பாளரொருவரைத் தாம் முன்நிறுத்தவுள்ளதாகப் பல்வேறு விதங்களிலான கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. எவ்வாறான போதிலும், உண்மையிலேயே ஜெனரல் சரத் பொன்சேகா பொது வேட்பாளராக முன்வரவுள்ளாரா என்பதற்கான பதில் அவரிடம்தான் உள்ளது.



புலிகள் அமைப்பின் பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டை அதிலிருந்து விடுவித்து விடும் போராட்டத்தில் முக்கியமான பாத்திரமேற்று அதை நிறைவேற்றி முடித்த ஜெனரல் சரத் பொன்சேகா இதற்குச் சில காலத்துக்கு முன்னர், தமது இராணுவச் சேவையின் பின்னர், தமது இல்லத்தில் ஓய்வாகத் தமது எஞ்சிய நாட்களைக் கழிக்கவே விரும்புகிறார் எனத் தெரிவித்திருந்தார். ஆனால், இன்றைய அளவில் நிலைப்பாடு சிறிது சிறிதாக மாற்றமடைந்து வருவதை அவர் வெளிப்படுத்தி வரும் கருத்து வெளிப்பாடுகளிலிருந்தும் கூடத் தெரிந்துகொள்ள முடிகிறது. அவர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த வேளையில், வொஷிங்டனிலுள்ள பௌத்த விகாரையில் நிகழ்ந்த விழாவொன்றில் வைத்து, நாடு தறிகெட்டுப் பயணிக்குமானால், அதைக் கட்டுக்குள் கொண்டுவந்து சீரான மார்க்கத்தில் இட்டுச் செல்வது தொடர்பாகத் தாம் எச்சந்தர்ப்பத்திலும் தமது உத்தியோகச் சீருடையைக் களைந்துவிட்டு அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராகவே இருக்கிறார் எனத் தெரிவித்திருந்தார்.

அவரது இதுபோன்ற உரைகள் காரணமாகவும் கூட அவர் அரசியலில் தடம் பதிப்பதற்கு ஆயத்தமாகிறார் என மக்கள் மத்தியில் கருத்தொன்று தலையெடுத்துள்ளது. இதனிடையே, தாம் முன்நிறுத்தும் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றே ஆவாரென ஐ.தே.கட்சியினர் பெரும் நம்பிக்கையுடன் கூறி வருகின்றனர். ஆனால் அவர்கள் தமது பொது வேட்பாளர் யாரென்பதை வெளிப்படுத்துவதற்கு முந்திரிக்கொட்டை போன்று அவசரம் காட்டாமலேயே உள்ளனர். அவ்விதமாக அவர்கள் அரசினுள்ளும் நாட்டு மக்கள் மத்தியிலும் சந்தேக வித்தை விதைத்து வருகின்றமையும் புலப்படுகிறது.

இதனிடையே, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக ஜெனரல் சரத் பொன்சேகா பாதுகாப்புப் படையணிகளின் தளகர்த்தாப் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வாரானால், அவரது ராஜினாமாவை ஏற்பதற்குத் தாம் தயாராகவே இருக்கிறார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்கள் மத்தியில் தெரிவித்திருந்தார் என ஊடகங்கள் செய்தி வெளி யிட்டிருந்தன. அத்தோடு, ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வரையில் கூட்டுப்படையணிகளின் தளகர்த்தா பதவியிலிருந்து ராஜினாமா செய்யாதிருக்குமாறு ஐ.தே.முன்னணியின் தலைவர்கள் மற்றும் அவரைப் பொது வேட்பாளராக முன்நிறுத்தி விடுவதற்கு எதிர்பார்த்திருக்கும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் எனவும் கூட ஊடகங்கள் இதற்கு முன்னர் வெளிப்படுத்தியிருந்தன. அவற்றின் உண்மை - பொய் எவ்வாறான போதிலும் இன்றைய அளவில் ஜெனரல் சரத் பொன்சேகா தனது பதவியிலிருந்து விலகிக்கொண்டுள்ளார்.

எவ்வாறோ இன்று உத்தியோகபூர்வமற்ற மட்டத்தில் ஜனாதிபதிப் பதவிக்கான போட்டி ஆர்வமாகிவிட்டுள்ளதையும் காணமுடிகிறது. ஆனாலும் இதில் புதுமை என்னவெனில், இதுநாள் வரையிலும் ஜனாதிபதித் தேர்தலொன்று பற்றி உறுதியாகஅறிவிக்கப்படாதுள்ளதேயாகும்.

இவை இவ்வாறிருக்க, இந்தப் பொது வேட்பாளரென்ற விடயத்தை அசைபோட்டு வரும் அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் கட்சித் தலைவரென ஒருவர் இருக்கும் நிலையில் ஐ.தே. கட்சியானது, வேறு பொது வேட்பாளர்களைத் தேடி அலைவதற்கு அவர்களது வங்குரோத்து நிலை மற்றும் பலவீனமே காரணமாகியிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். அத்தோடு நில்லாது எந்தவொரு பிரமுகர் பொதுவேட்பாளராகக் களத்தில் நின்றாலும் அவரால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க இயலாதென்பதாகவும் அரசு அடித்துக் கூறுகிறது.

இதற்குப் பதிலடி கொடுத்துள்ள ஐ.தே.கட்சி, எதிரணியின் பொது வேட்பாளர் யாரென்பதைத் தீர்மானிப்பது எதிர்க்கட்சிக்கு உரிய கருமமேயாகுமெனத் தெரிவித்துள்ளதோடு எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டியவர் யாரென்பதைத் தீர்மானிப்பதையும் அரசே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமையானது நகைப்புக்கிடமானது என்பதாகவும் அவர்கள் கூறத் தலைப்பட்டுள்ளனர்.

யுத்தம் முடிந்துபோன கால கட்டத்தில் இன்றைய அரசு மக்கள் செல்வாக்கென்ற உச்சாணிக் கொம்பிலேயே இருந்தது. அச்சந்தர்ப்பத்தில் ஐ.தே.கட்சிக்கோ தேர்தலென்பது பெரும் தலையிடிக்கு ஒப்பானதாகவே இருந்துள்ளது. ஆனால், பொதுவேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகா முன்நிற்கவுள்ளதான தகவல் வெளிவர ஆரம்பித்ததை அடுத்து ஐ.தே.கட்சிக்காரர்கள் உள்ளடங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவித மலர்ச்சிக்கு உள்ளாகியுள்ளமை தெரிகிறது. ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான உயர் சட்டத்தரணி லக்ஷ்மன் கிரியெல்ல கருத்து வழங்குகையில், கடந்த மாகாணசபைத் தேர்தல்களின் போது, வழங்கப்படாதிருந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய வாக்காளர்களின் வாக்குகள் புதிய வேட்பாளரொருவரின் களமிறங்கலின்போது போன்றே ஜனாதிபதித் தேர்தலொன்றிலோ அல்லது பொதுத் தேர்தலொன்றிலோ கிட்டுமெனத் தெரிவித்துள்ளார். எனவே, எதிர்காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலொன்று இடம்பெற்றாலும், ஜனாதிபதித் தேர்தலொன்று இட்டம்பெற்றாலும் அது, எதிர்க்கட்சிக்குச் சாதகமானதாகவே அமையுமென்பதே அவரது வாதமாகியுள்ளது.

கடந்த மாகாண சபைத் தேர்தல்களில் எதிர்க்கட்சியானது படுதோல்வியையே தழுவிக்கொண்டிருந்தது. ஆனாலும், அத்தேர்தல்களில் வழங்கப்படாத வாக்கு விகிதாசாரமொன்றும் இருந்தேயுள்ளது. வாக்குத் தொகையொன்றாகக் கொள்ளும்போது, அது விசாலமானதொரு எண்ணிக்கையாகும். அது இருபது லட்சங்கள் வரையிலானது என்பதே ஐ.தே.கட்சியின் கருத்தாகும். அத்தோடு இளைய சமுதாயத்தினரின் வாக்குகள் போன்றே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகளும் கூட பிரமுகர் ஜெனரல் சரத் பொன்சேகா போன்ற வேட்பாளரொருவர் முன் நிற்பாரானால் கிட்டக்கூடுமென்பதாகவே ஐ.தே.கட்சி கணிப்பிட்டு வருகிறது.

இருந்தபோதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கணிப்பு அதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அதன் பொதுச் செயலாளரான கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் கருத்து, எதிர்க்கட்சியின் எந்த விதத்திலான கூட்டணியொன்று கட்டமைந்தாலும் அரசு வசமிருக்கும் வாக்கு வங்கியின் அடித்தளம் மேலும் வலுப்பெற்றுள்ளதேயல்லாது பலவீனமடையவில்லை என்பதேயாகும். கடந்த மாகாண சபைத் தேர்தல்களின் கிட்டிய பெறுபேறுகளை நோக்கும்போது, எதிர்கால்த்தில் ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெறுமானால், இருபத்திஐந்து இலட்சங்கள் அளவுக்கு மேலதிக வாக்குகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கிட்டுமெனவும், பொதுத் தேர்தலொன்று இடம்பெறுமானால், அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்டுமெனவும் அமைச்சர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, ஐக்கிய தேசியக் கட்சியினால் முன் நிறுத்தப்படும் பொது வேட்பாளர் எதிரணியின் அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு பிரமுகராகவே அமைய வேண்டியுள்ளார் என எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கிறார். அதற்கமைய, அந்த பொது வேட்பாளர் வெற்றிபெறுவாரானால், அவரது நிர்வாகத்தினுள் ஜே.வி.பிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்படவேண்டியுள்ளது எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இங்கு, கருத்து வழங்கிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான கே.டீ.லால்காந்த, கட்சி சாராத பிரமுகரொருவரைத் தாம் பொது வேட்பாளராக முன்நிறுத்தவுள்ளார் எனத் தெரிவித்திருந்தார். ஆனால், அவர்களும்கூட அந்த வேட்பாளர் யார் என்பதை உறுதியாக வெளிப்படுத்தி நிற்பதாக இல்லை. ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி. என்ற இவையிரண்டும் பொது வேட்பாளரொருவர் பற்றிய வாதங்களை முன்வைத்தாலும் கூட, ஐ.தே.கட்சி கட்டமைத்துள்ள கூட்டணி குறித்து இன்னமும் ஜே.வி.பி. தனது இணக்கத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை. அத்தகைய கூட்டணியொன்றில் இணையும் எண்ணம் தமக்கில்லையென ஜே.வி.பி. தெரிவித்திருந்தது. அதேவேளை, ஐ.தே.கட்சி முன்நிறுத்தும் பொது வேட்பாளருக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக ஐ.தே.கட்சி தமது கட்சிக்குக் கோரிக்கை எதையும் விடுத்திருக்கவில்லை எனவும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான அநுர குமார திஸாநாயக்க தெரிவிக்கிறார்.

இவை இவ்வாறிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதானால் தமிழ் மக்களின் வாக்குகளை வென்றெடுப்பதும் ஜெனரல் சரத்பொன்சேகாவைப் பொறுத்தவரையில் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாக அமையக்கூடும். இதுதொடர்பாக ஐ.தே.கட்சி உள்ளடங்கும் சில கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான என்.ஸ்ரீகாந்தா கருத்து வழங்குகையில், ஜனாதிபதித் தேர்தலில் முன்நிற்கும் வேட்பாளர் எவூராக இருப்பினும், அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தயாராகவுள்ள பிரமுகரொருவராகவே அமைய வேண்டியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். அத்தோடு, இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ்க் குடிமக்கள் தொடர்பான பிரச்சினையும் கூட இவற்றுள் முக்கிய இடத்தை வகிக்கின்றது எனவும் அவர் கருத்து வெளிப்படுத்தி நிற்கிறார்.

இவை எவ்வாறான போதிலும், ஜெனரல் சரத்பொன்சேகாவின் பெயர், பொது வேட்பாளராக முன்வைக்கப்பட்டது ஏன்? - என்ற வினாவும் கூட பெருமளவிலானோரின் கவனத்தை ஈர்த்துள்ள விடயமாகியுள்ளது. இது தொடர்பான அரசின் வாதமாகியிருப்பது, ஜெனரல் சரத்பொன்சேகா வெளிநாட்டுச் சக்திகளின் சதித்திட்டமொன்றில் சிக்கிக்கொண்டுள்ளார் என்பதேயாகும். ஆனால், ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து கிட்டும் தகவல் மார்க்கங்களோ, அவருக்கு ஏற்பட்ட கௌரவக் குறைவு, ஓரவஞ்சனைகளின் காரணமாகவே அவர் அத்தகையதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல அண்மையில் கருத்து வழங்குகையில், எதிரணியின் பொது வேட்பாளரை உருவாக்கி விட்டதே அரசுதான் என்பதால், அதற்காகத் தமது நன்றியறிதலை அரசுக்குச் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுள் பெருமளவு தரப்பினர் பிரமுகர் ஜெனரல் சரத் பொன்சேகா அரசியலில் பிரவேசிக்கக் கூடுமென நம்பிக்கை கொள்ளவில்லையென்பதும் தெரிகிறது. அவருக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்குமானால், அது தவறொன்றாக ஏற்கப்பட்டாலும் கூட இன்றைய அரசியலானது சேறும் சகதியும் நிரம்பியதொரு குட்டை என்பதால் ஜெனரல் சரத்பொன்சேகா போன்றதொரு பிரமுகர் அதில் தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளாதிருப்பதே சாலச் சிறந்தது என நம்பும் விசாலமான தரப்பினரும் கூட இந்நாட்டில் இருப்பது தெரிகிறது. அதேபோன்று பிரமுகர் மேஜர் ஜெனரல் ஜானக்க பெரேரா போன்ற வீரரொருவருக்கு ஏற்பட்ட தலைவிதி பிரமுகர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஏற்படக்கூடுமென்பதாகவும் சிலர் மத்தியில் பீதி நிலவுகிறது. இதுவும் அவர்கள் ஜெனரல் சரத் பொன்சேகா அரசியலுக்கு வருவதை எதிர்ப்பதற்கு மேலுமொரு காரணியாகும்.

எவ்வாறான போதிலும், தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு அரசியலில் தடம் பதிப்பதா என்பது பற்றி ஜெனரல் சரத் பொன்சேகா இன்னமும் உறுதியானதொரு கருத்தை வெளிப்படுத்தியதில்லை. ஆனாலும், அவர் இராணுவச் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்வதற்குத் தீர்மானித்தமையானது அது தொடர்பானதொரு தீர்க்கமான அறிகுறியே என்பது பெரும்பாலானோரினது கருத்தாகும்.

**தமிழில் : சரா**

★★★★★★★★★★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வலிகாமம் கி க்கு, கோப்பாய் பிரதேச செயலகப் ரிவின் சர்வதேச சிறுவர்தினவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் சிறுவர் கழக உறுப்பினர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரித்தாஸ்-கியுடெக் பணிப்பாளர் அருட்தந்தை கி.யோ. ஜெயக்குமார் அடிகள், உதவிப் பிரதேச செயலர் செல்வி ச. பிரேமினி ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்- மருதன்)

## ஏகாதசி விரத பூஜை

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை ஏகாதசி விரதபூஜை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். 9 மணிக்குச் சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையையும் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயணசுவாமி பூமாதேவி, ஸ்ரீதேவி புடைசூழ வீதியுலா எழுந்தருள்வார்.


## 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் புலமைப்பரிசில் பாராட்டும்



உரும்பிராய் மேற்கு, வைத்தீஸ்வரா வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி குணரத்தினம்-இந்திராணி தம்பதியரின் செல்வப்புதல்வி

குணசல்மினா (கிரியா)

இன்று (26.11.2009) வியாழக்கிழமை தனது 10ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். குணசர்மிளாவுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் பெற்றமையையிட்டும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். மேலும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு குணசர்மிலா ஸ்ரீநாகபூஷணி அம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன் என்றும் அண்ணா, அக்கா, அப்பா, அம்மா, ஆசையப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம், மாமாமார், மாமிமார் ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

மாகியப்பிட்டி. (91222) பிள்ளையார் குடும்பம்.



## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சங்கரலிங்கம் (கதிர்காமு)



ஊரங்குனையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கு, வேம்பன் ஒழுங்கையைப் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சங்கரலிங்கம் (கதிர்காமு) நேற்று முன்தினம் (24.11.2009) செவ்வாய்க் கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஊரங்குனையைச் சேர்ந்த செல்லத்துரை தம்பதியினரின் ஏக புதல்வனும், உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சோமசுந்தரம்-பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், மலர்மணியின் அன்புக் கணவரும், சசிகரன் (சாந்தன்), வனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹேமறஜனி(சமுர்த்தி வங்கி,சுன்னாகம்), சுதாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷந்தினி, நிலக்ஷன், துஸ்யந்தி, ருஷாந், புருசோத் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்பன் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(சி/562705)

தகவல் :
சசிகரன்
(சாந்தன் - மகன்).


## "ஞானச்சுடர்" வெளியீட்டு விழா

வடமராட்சி,நவ.26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மீக சஞ்சிகையின் கார்த்திகை மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத் தில் பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் சிறுப்பிட்டி கிராமசேவையாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா வெளியீட்டு ரையையும் பிரபல ஆன்மீக எழுத்தாளர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய்சிவம்) மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும், 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# வாசகர் திருமுகம்

## ஏ-9 பயண சிரமங்களை நீக்க ஒரு பிரயாணியின் யோசனை

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா, கொழும்பு உட்பட நாட்டின் பிற பகுதிகளுக்கு ஏ-9 வீதி ஊடாக பாதுகாப்பு அனுமதியின்றிப் பயணம் செய்யும் முறை நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கு வழிசெய்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றிகள்.

யாழ். நகரப் பகுதியை மட்டும் மையப்படுத்தியதாகப் பயணிகள் போக்குவரத்து இடம்பெறுவதால் மிகவும் சிரமப்படுகின்றனர். அதனால் சிரமம் தவிர்த்து பொதுமக்கள் மிக இலகுவாகப் பயணிக்க சில ஆலோசனைகளை பணிவுடன் உரியவர்களுக்கு முன்வைக்கின்றேன்.

01. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலய அடிப்படையில் பயணிகள் பயணிக்கும் இடங்களை ஒழுங்கு செய்தல்.
02. தனியார் பஸ்களை நியாயமான கட்டணத்தில் சேவையில் ஈடுபடுத்தச் செய்தல்.
03. பஸ்களை ஒரு நாளில் பல நேர அட்டவணை ஒழுங்குகளில் பயணிக்கச் செய்தல்.
04. குடாநாட்டில் பல இடங்களில் மக்களைப் பரிசோதித்து பயணம் செய்ய வைத்தல்.

உ+ம்: யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ளோர் - யாழ் நகரம், தென்மராட்சி மக்கள் - சாவகச்சேரி, வடமராட்சி மக்கள் - நெல்லியடி, வலிகாமம் 5 பிரதேச செயலகப் பிரிவுகள் கோப்பாய், சுன்னாகம், சங்கானை, தீவுப்பகுதி - வேலணை.

பாதுகாப்புப் படையினரின் வழித்துணையுடன் இலகுவாகவும், வேகமாகவும் மக்கள் பயணிக்க முடியும்.

எனது இந்தக் கோரிக்கை நடைமுறைக்குச் சாத்தியமானதாகும். விரைவாக நடைமுறைப்படுத்த உதவுமாறு கோரிக்கை விடுக்கிறேன்.

ஏ- 9 பயணி.

தென்மராட்சி.

## கழிவுகளைக் குடியிருப்பு இல்லாத பகுதிகளுக்கு மாற்றுங்கள்

கண்டி வீதிக்கும் கச்சேரி-நல்லூர் வீதிக்கும் இடைப்பட்ட புகையிரதப் பாதை, பலகஷ்டங்களிற்கு மத்தியில் மக்களால் துப்புரவு செய்யப்பட்டு பாதசாரிகளும், துவிச்சக்கரவண்டிகளும் செல்வதற்கு உகந்ததாகச் செப்பனிடப்பட்டுள்ளது. கண்டிவீதியிலிருந்து கச்சேரி - நல்லூர் வீதிக்குச் செல்லும் குறுகிய தூரமுள்ள பாதையாகவும் மக்களுக்குப் பயன்பட்டுவருகிறது. அன்றாடம் சகல இடங்களிலும் சேகரிக்கப்படும் குப்பைகள், மற்றும் கழிவுகளையும் யாழ். மாநகர சபையினர் கொண்டுவந்து கச்சேரி ஒழுங்கைக்கருகிலுள்ள குடியிருப்புப் பகுதியில் குவிக்கின்றனர். தூரஇடங்களிலுள்ள ஒரு சிலரும் தங்கள் கழிவுகளை இங்கு கொண்டு வந்து கொட்டி மாசடையச் செய்கிறார்கள். கழிவுப் பொருள்களில் குழந்தைகள், இளம் பெண்களினதும் கழிவு சேகரிக்கும் உபகரணங்களும், கோழிகளைச் சுத்தம் செய்கின்றபோது உண்டாகும் கழிவுகளும், மீன், நண்டு, இறால் போன்ற கடலுணவுகளின் கழிவுகளும் அடங்குகின்றன. மழைகாரணமாக இதிலிருந்து ஏற்படுகின்ற துர்நாற்றம் காரணமாக நோய்கள் பரவுவதுடன், அருகிலுள்ள குடிநீர்க் கிணறுகளும் பாதிக்கப்படுகின்றன.

இதனால் சுற்றாடலில் குடியிருப்பவர்களுக்கும், அவ்வழியால் போக்குவரத்துச் செய்பவர்களுக்கும் ஏற்படுகின்ற பலவித அசௌகரியங்களைத் தடுக்கும் நோக்குடன் சேகரிக்கின்ற குப்பைகளையும் கழிவுகளையும் குடியிருப்பில்லாத பகுதிகளில் சேகரித்து அங்கிருந்து வேறு இடங்களுக்கு அகற்றுவதற்கு மாநகரசபை ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கச்சேரியடி மக்கள் சார்பாக
இ. இராசேந்திரா.

கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

## தமிழனாக வாழவேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு

சில தினங்களுக்கு முன்பு உதயனில் கவிஞரும், தமிழ் அறிஞருமாகிய அன்பர் வி.கந்தவனம் அவர்களின் நேர்காணலைப் படித்து பெருமகிழ்ச்சியடைந்தேன்.

கவிஞர் இடம்பெயர்ந்து பிற நாட்டில் வாழ்ந்தாலும் தமிழன் என்ற உணர்வோடும் பற்றோடும் சமயத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வருவதை அறிந்தபோது நொந்து போயிருக்கும் தமிழ் உள்ளங்களுக்கு ஆறுதலும் புத்துணர்வும் ஊட்டுவதாக அமைந்தது.

குறிப்பாக செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்வீர்களா? என்று அவரிடம் கேட்டதற்கு "இல்லை" என்று அறுத்துறுத்து வெட்டினாற் போல் கூறியிருக் கின்றார்.

ஈழத்தமிழர்கள் அல்லற்பட்டுக் கண்ணீரில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவலச் சூழ்நிலையில் அந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்கும் தான் விரும்பவில்லை என்று அதற்கான காரணத்தையும் தெளிவாகக் கூறியிருக்கிறார் அந்த தன்மானத் தமிழ்க் கவிஞர்!

தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தமிழனாக வாழவேண்டும் என்பதற்கு அவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. பட்டம், பதவிக்காக காகமாகப் பறந்தடித்துத் தமிழனுக்கே குழிபறிக்கும் ஒற்றர் வேலை செய்யும் தமிழ்படித்தோர் ஒரு சிலர் மத்தியில் கவிஞர் கந்தவனம் போன்ற இனிய தமிழ் உள்ளங்கள் நொந்த தமிழரின் உள்ளங்களில் பாலை வார்க்க வருகின்றார்கள்.

-எழில்வண்ணன்-

யாழ்ப்பாணம்.

## நம்பிக்கையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்

தற்காலிக விஷயங்களுக்கு நாம் மரணத்தைத் தழுவத் தயாராக இருக்கிறோம். அனைத்துக்கும் நாம் அர்ப்பணம் செய்து பயனில்லை. கடவுளுக்கு நமது நம்பிக்கையை அர்ப்பணம் செய்ய வேண்டும். அப்போதீ நமக்கு தனிப்பட்ட நிலையிலும், மனதிலும், உலகத்திலும் அமைதி நிலவும்.

ஆகவே சமூகத்தை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சமூகம் இல்லாமல் நீயும், நீயில்லாமல் சமூகமும் வாழ இயலாது. நான் சமூகத்தில் பிறந்தவன். சமூகத்தில் ஒரு அங்கத்தினன். நீ உன்னைப்பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டு சுயநலத்துடன் இராதே.

இதை மனதில் கொண்டுதான் லோகாஸ் ஸமஸ்தா சுகினோபவந்து (உலகில் உள்ள அனைவரும் இன்புற்று இருப்பாராக) என்று வேண்டுகின்றோம். புனிதமான பாரத நாட்டில், மக்கள் உலகின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்குமாக பிரார்த்தனை செய்து, பாடு பட்டனர். பாரத நாடுதான் எல்லா நாடுகளின் பாதுகாப்புக்கும், நலனுக்குமாக முயற்சி செய்கிறது.

பாரதீயன் என்றால் என்ன பொருள்? பா. பிரகாசிக்கும் ஒளி; இவ்வாறு சுயம்பிரகாசமான ஒளியை நாடிச்செல்வதே பாரதி. ஜோதிர்மயமான இறைவனை நேசிக்கும் போதுதான் பாரதீயன் என்ற பெயருக்குத் தகுதி பெறுகின்றோம். இந்நாட்டின் சங்கீதமும், இலக்கியமும் பாரதியைப் பற்றியே பேசுகின்றன.

பா - என்றால் பாவம், ர - என்றால் ராகம், த - என்றால் தாளம். பாவம், ராகம், தாளம், இவற்றுடன் இணைந்ததே பாரதம். உலகியல் நிலை, தார்மீக நிலை, தனிப்பட்ட நிலை, ஆன்மீக நிலை இவை அனைத்திலும் பாரத தத்துவம் மறைந்துள்ளது. பரதன், இராமனின் தம்பி என்று நினைக்கிறோம்; இல்லை. இது அனைத்தும் கடந்தது. பாரத தத்துவத்தை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். பிறகு தெய்வீக எண்ணங்கள் நம்மிடம் நிரம்பும்.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு

'உதயனில்' வாரந்தோறும் வெளிவரும் 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசினை உதயன் செய்தி ஆசிரியர் ஞா. குகநாதன் வழங்குவதை முதல் இரண்டு படங்களிலும்உதயன் மக்கள் தொடர்பு முகாமையாளர் திருமதி என்.தங்கராஜா வழங்குவதை ஏனைய படங்களிலும் காணலாம்.




மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.சபிதா பரிசு பெறுகின்றார்.



கள்ளி வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நிருத்திகா இராஜகோபால் பரிசு பெறுகின்றார்.



உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாற்றைச் சேர்ந்த நாகன் கிருஷாந்தி பரிசு பெறுகின்றார்.




ஏழாலை மேற்கு, ஏழாலையைச் சேர்ந்த ஈ.தீபிகா பரிசு பெறுகின்றார்.

## மனிதர்களில் விலங்குகள்

வீண் செய்கையாலும் பயனற்ற விளையாட்டுக்களாலும் ஈடுபட்டு நேரத்தை வீணாக்குபவன்- பூனை

தானே அழகானவன், அறிஞன் என நினைத்து இறுமாந்திருப்பவன்- மயில்

வீணாக ஆடம்பரமும் மேனி மினுக்கும் கொண்டிருப்பவன்- வான் கோழி

ஒன்றாக இணைந்து காரியத்தைச் செய்து விட்டு இறுதியில் நம்பிக்கைத் துரோகம் செய்பவன்- குள்ளநரி

மற்றவர்களை அடக்கித் துன்புறுத்தி அதிகாரம் செலுத்த முற்படுபவன்- சிங்கம்

எஸ்.டிலானி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

## நீங்காதென்றும் பசுமை நினைவுகள்

ஒரு கூட்டுப் பறவைகளாய்....
பூத்துக் குலுங்கும் நந்தவனத்து மலர்களாய்.....
காடு மலை தாண்டி வரும் அருவியாய்- நாமெல்லாம்
கூடிக் கும்மாளமடித்திருந்தோம்
ஒற்றுமைக்கு நாம் உதாரணமாய்.....சிறு
குறும்புகளில் நாம் திளைத்தோம்
தண்டனைகளை மகிழ்வோடேற்று
பள்ளியிலே நாம் படித்தோம்
கல்லூரியிலன்று நட்பினால் இணைந்திருந்தோம்
நட்பின் பெருமையையும் நாமங்கு உணர்ந்து கொண்டோம்
கானல்நீர்க் கனவுகளுக்கும் அங்கு
வர்ணஜாலம் தீட்டித் திளைத்தோம்

நட்பின் பிரிவு கூட இன்று காரமாய் இனிக்கிறது
தோழமையின் பசுமை நினைவுகளும் கூடத்தான்
சுகதுக்கங்களில் பங்குகொண்ட உயிர்த் தோழிகளே!
நீங்காதென்றும் நும் நினைவு.



மேருஜா
ஜெயின்பநாதன்,
8A,
யா/சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி.

## கேள்விக்கு என்ன பதில் – 48இல் பரிசு பெறுவோர்

01) செ.செந்தூரன்,
41/1, பிரம்படி வீதி, கொக்குவில்.

02) லேனுயா கோபாலன்,
2011 - கலைப்பிரிவு,
வட்டு. இந்துக் கல்லூரி.

### கேள்விக்கு என்ன பதில்?-48இன் சரியான விடை

I. 'ரைம்ஸ்' சஞ்சிகை
II. 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி

## கேள்விக்கு என்ன பதில்? -50

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை வென்றது. உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றச் சென்ற இலங்கையை ஆரம்பத்தில் விமர்சகர்கள் கேலியாக அழைத்த பெயர் என்ன?
(சரியான விடையை 03.12.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## சிந்திக்கச் சில துளிகள்.....

★நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது ஆனால், உயிரைக் கொடுப்பதற்கு நண்பன் கிடைப்பது அரிது.

★அன்புக்கு அடங்காதவரும் இல்லை,
அது இல்லாமல் வாழ்ந்தவரும் இல்லை

★கால் இடறினால் காயம் ஏற்படும்
வார்த்தை தவறினால் வாழ்வே தவறிவிடும்

★தவறு செய்வது இயல்பு
திருத்திக் கொள்வது உயர்வு

★ நன்மை செய்வதற்கு மட்டுமே
அன்பு தேவை என்பதை விட
தீயதை அகற்றுவதற்கும் இவ் அன்பே தேவை

★நீண்ட தூரம் ஓடி வந்தால்த்தான் அதிக
உயரம் தாண்ட முடியும்.

பா.தர்மா,
கட்டப்பிராய்.

## உறவுகளின் பலன்கள்

அம்மாவிடம் கொள்ளும் உறவு அன்பைத் தரும்
கல்வியோடு கொள்ளும் உறவு அறிவைத் தரும்
இறைவனுடன் கொள்ளும் உறவு அமைதியைத் தரும்
காலத்தைப் பயன்படுத்தும் உறவு மாற்றம் தரும்
தீயவனுடன் கொள்ளும் உறவு பழியைத் தரும்
கைகள் தூரிகையின் உறவு ஓவியம் தரும்
தனிமையுடன் கொள்ளும் உறவு அமைதியைத் தரும்
அதிகாரத்துடன் கொள்ளும் உறவு ஆணவம் தரும்
நல்லவர்களுடன் கொள்ளும் உறவு வெற்றி தரும்
நட்புடன் கொள்ளும் உறவு நம்பிக்கை தரும்
லட்சியத்துடன் கொள்ளும் உறவு புகழைத் தரும்.

சா.ஜிந்துஜா,
குமரகோட்டம்,
கோண்டாவில்.

## ஓவியம்

உன் உருவுக்கே
உருவம் கொடுக்க
ஆசைப்பட்டுக்
காகிதத்தில் உன்னை
வரைந்தேன் முடியவில்லை
என்னால் முழுமையாக வரைய-
ஏனெனில்
உன்னைப் படைத்த பிரம்மனால்
கூட உன்னைப் போல
இன்னொருவனை
உருக்கொடுத்து
இவ்வுலகிற்கு அனுப்ப முடியாது
என்பதைப் பின்புதான்
உணர்ந்து கொண்டேன்.

சுபகீதா ஐயாத்துரை,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.




## இளைஞர், யுவதிகளே!


உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.........................................
முகவரி :-.........................................
:-.........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்த வாரம் வரலாற்றில்

### நவம்பர் 20




சூரிய சக்தியை மட்டுமே முற்று முழுதாகப் பயன்படுத்தி இயங்கக்கூடிய வகையில் 'சோலர் சலஞ்சர்' என்ற விமானம் 1980 ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி முதல்தடவையாக பறக்க விடப்பட்டது.

### நவம்பர் 21

பௌதீகவியலுக்காக நோபல் பரிசை வென்ற விஞ்ஞானியான வெங்கடராமன் 1970ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி காலமானார்.



### நவம்பர் 22



'பீரோ' குமிழ்முனைப் பேனா 1946ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி முதன் முதலாகப் பிரிட்டனில் விற்பனைக்கு விடப்பட்டது. ஹங்கேரியைச் சேர்ந்த 'லஸ்லோ பீரோ' என்ற பத்திரிகையாளர் இந்தப் பேனாவைக் கண்டு பிடித்தார்.

### நவம்பர் 23

1996ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி எதியோப்பிய ஜெற் விமானம் 175 பயணிகளுடன் கடத்தப்பட்டபோது இடைநடுவில் இந்து சமுத்திரத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 125 பேர் பலியாகினர்.




### நவம்பர் 24



இங்கிலாந்து கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னனாக விளங்கிய வீரரான சேர். இயன் பொத்தம் 1955ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதி பிறந்தார்.

### நவம்பர் 25

அமெரிக்காவின் கொலம்பியா விண்கலத்தில் சென்ற வீரர்கள் 1997 ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி ஏற்கனவே கட்டுப்பாட்டை இழந்து காணாமல் போயிருந்த 'த ஸ்பார்ட்டன்' என்ற இன்னொரு விண்கலத்தை மீட்டனர்.



### நவம்பர் 26



1703ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி இங்கிலாந்தில் குளிர்காற்று, கடற்கொந்தளிப்பு என்பவற்றால் 8ஆயிரம் மக்கள் மரணித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மேல்மாகாணக் கல்வித் திணைக்கள இறுதிப் பரீட்சை -2008

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

* மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்க.

01 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற குறளில் ''வையகம்'' என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்,
1) வானகம். 2) குவலயம். 3) பாதாளம். 4) கானகம்.

02. புலமைப் பரிசில் சித்திபெற்ற செய்தி கேட்டதும் அவனது உவளக கரைபுரண்டோடியது. இங்கு ''உவளக'' எனபதன் ஒத்தக்கருத்துச் சொல்,
1) மகிழ்ச்சி. 2) அதிர்ச்சி. 3) சிரிப்பு. 4) வியப்பு.

03. வாழும் செல்வமும் தாழ் இலம்பாடதும் வையத்துள் உருள் சக்கரம் போலுமே. ''இலம்பாடு'' என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்,
1) நோய். 2) வறுமை. 3) துன்பம். 4) பட்டினி.

04. கீழ்மை அகற்று- '' கீழ்மை'' என்பதன் எதிர்க்கருத்துள்ளச் சொல்,
1) மேன்மை. 2) தன்மை. 3) தூய்மை. 4) கயமை.

05. கதிரவன் எனும் கூத்தன் கதிர்களை நீட்டி விசும்பில் தோன்றினான். - ''கூத்தன்'' என்பதன் எதிர்பாற் சொல்,
1) கூத்தள். 2) கூத்தினி. 3) கூத்தாடி. 4) கூத்தி.

06. கலைப் படைப்பொன்றின் நிறைகுறைகளை ஆராய்தல்,
1) கண்டனம். 2) விமர்சனம். 3) அணிந்துரை. 4) ஆய்வு.

07. பங்கஜம் - என்னும் வடசொல்லின் பொருளைக் குறிக்கும் தமிழ்ச்சொல்,
1) மல்லிகை. 2) கனகாம்பரம். 3) குமுதம். 4) தாமரை.

08. கிரிற்சிசம் (Critism) என்பதற்கு வழங்கப்படும் தமிழ்ச்சொல்,
1) ஆர்வம். 2) சாகியம். 3) திறனாய்வு. 4) எண்மானம்.

09. வாழை, முந்திரி முதலியவற்றின் காய்த்தொகுதி குலை எனப்படுவது போல மா, புளி முதலியவற்றின் காய்த்தொகுதி,
1) கதிர். 2) தாது. 3) செண்டு. 4) கொத்து.

10. கலைக்கு பிணை போல களிறுக்கு,
1) போத்து. 2) பிடி. 3) பேடு. 4) பெட்டை.

11. ஆட்டின் மலம் பிழுக்கை என்பது போல கழுதையின் மலம்,
1) விட்டை. 2) இலத்தி. 3) சாணம். 4) எச்சம்.

12. நெல்லின் உள்ளீடு அரிசி என்பது போல உழுந்தின் உள்ளீடு,
1) மணி. 2) பருப்பு. 3) விதை. 4) கடலை.

13. படைவீரர் கூட்டத்தை அணி என்பது போல நடிகர் கூட்டத்தை,
1) அவை. 2) கணம். 3) குழு. 4) ஆயம்.

14. பனையின் இளங்காய் நுங்கு என்பது போல வாழையின் இளங்காய்,
1) மூசு. 2) கன்று. 3) குவை. 4) கச்சல்.

15. ஒருவர் தானே தன்னைப்பற்றி எழுதும் வரலாறு,
1) சிறுகதை. 2) சுயசரிதை. 3) நெடுங்கதை. 4) புனைந்துரை.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

16. '' கண் திறத்தல்'' என்ற மரபுத்தொடரின் கருத்து,
1) நித்திரை விட்டெழுதல். 2) மேற்பார்வை செய்தல்.
3) அறிவு உண்டாதல். 4) கவனமாகப் பார்த்தல்.

17. ''ஒட்டியுலர்ந்த'' என்னும் இணைமொழியின் பொருள் தரும் வேறோர் இணைமொழி,
1) எலும்பும் தோலும். 2) ஏங்கித்தேங்கி.
3) உண்டுதிரண்டு. 4) கோணல்மாணல்.

18. ''சல்லி'' என்பதன் பொது வழக்கு
1) காசு. 2) பணம். 3) நாணயம். 4) ரூபா.

19. '' ஆனைக்கும் அடி சறுக்கும்'' என்ற பழமொழியின் கருத்து,
1) செல்வரும் வறியவர் ஆவர்.
2) ஆண்டியும் அரசனாவான்.
3) எல்லா மிருகங்களுக்கும் அடி வழுக்கும்.
4) வல்லமை மிக்காரும் தவறுவர்.

20. பக்கம் சாராது நடு நிலைமையோடு காரியமாற்றலை விளக்கப் பொருத்தமான உவமைத் தொடர்,
1) புனல் ஓடும் வழிப் புல் சாய்தல் போல.
2) அகழ்வாரை தாங்கும் நிலம் போல.
3) சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல.
4) தாரகை நடுவண் தண்மதி போல.

21. பின்வருவனவற்றுள் மொழிக்கு முதலில் வரத்தக்க உயிர்மெய் எழுத்துக்கள் எவை?
1) ஆ, ஈ, ஒ. 2) க, கா, ஞ. 3) வ், ம, ச். 4) ப, த, ந.

22. பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக அமையாதது,
1) நீரேரி. 2) கவிதை. 3) கட்டுரை. 4) வானொலி.

23. ''மலையிற் சிறியது குன்று'' என்பதில் மலை ஏற்றுள்ள வேற்றுமை,
1) ஐந்தாம் வேற்றுமை. 2) ஏழாம் வேற்றுமை.
3) மூன்றாம் வேற்றுமை. 4) நான்காம் வேற்றுமை.

24. மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது. இங்கு விழுந்தவனை என்பது,
1) வியங்கோல் வினை. 2) ஏவல் வினை.
3) குறிப்புவினை. 4) வினையாலணையும் பெயர்.

25. பகுதி இரட்டித்து காலங்காட்டுவன,
1) உண்டான், கண்டான். 2) வாழ்க, வீழ்க.
3) உண்டான், பாடுவான். 4) புக்கான், விட்டான்.

26. வருகின்றான் என்ற சொல்லின் நிகழ்கால இடைநிலை எது?
1) வா. 2) கின்று. 3) ற். 4) இன்.

27. '' ஊர் வாயை மூட உலைமூடி இல்லை'' என்ற வாக்கியத்தில் ஆகு பெயர் எது?
1) உலை. 2) ஊர். 3) மூடி. 4) வாய்.

28. ''நாயிலும் கடையார்'' இங்கு உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள் யாது?
1) இழிவு சிறப்பு. 2) உயர்வு சிறப்பு. 3) ஐயம். 4) முற்று.

29. ''முத்துப் போன்ற கண்ணீர்த்துளிகளை அவன் சிந்தினான்'' என்பதில் வரும் உவமேயம் எது?
1) முத்து. 2) கண். 3) நீர்த்துளிகள். 4) அவன்.

30. ஆசிரியரினால் நூல் எழுதப்பட்டது என்ற வாக்கியத்தில் எழுதப்பட்டது என்பது,
1) எதிர்மறைவினை. 2) பிறவினை.
3) செய்வினை. 4) செயற்பாட்டுவினை.

* பின்வரும் வினாக்களில் வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

31. கண்ணனின் நெஞ்சு அச்சத்தினால்,
1) வெடுவெடுத்தது. 2) படபடத்தது.
3) தடதடத்தது. 4) குடுகுடுத்தது.

32. அன்று நீங்களும் உங்கள் பிள்ளைகளும் எங்களுடன் விருந்து வைபவத்திற்
1) கலந்து கொண்டார்கள். 2) கலந்து கொண்டோம்.
3) கலந்து கொண்டீர்கள். 4) கலந்து கொண்டன.

33. காற்று வீசியதால் மரத்திலிருந்த பூக்கள் ஒவ்வொன்றாக
1) விழுந்தன. 2) விழுந்தனர். 3) விழுந்தது. 4) விழும்.

34. அவர் திருப்பித் தருவதாக கூறியா,
1) பணத்தை வாங்கினாரா? 2) பணத்தை வாங்கினார்?
3) பணத்தையா வாங்கினார்? 4) பணத்தை வாங்கினவரோ?

35. கடற்கரைக் காட்சியை நீயும், நானும், அவனுமாகப் பார்த்து ........................
1) இரசித்தோம். 2) இரசித்தேன். 3) இரசிப்போம். 4) இரசித்தனர்.

36. எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
1) மளையில் மலை பொழிந்தது. 2) மலையில் மளை பொழிந்தது.
3) மலையில் மழை பொழிந்தது. 4) மழையில் மழை பொழிந்தது.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

37. கட்டுக்கடங்காத இளைஞன் ................ எனப்படுவான் .
1) சிறுபட்டி. 2) சகபாடி. 3) தொழும்பன். 4) கயம்பு.

38. முற்காலத்தில் அறிஞர் பலர் வடசொற்களையும் தமிழ்ச் சொற்களையும் கலந்து ............................ யில் எழுதினர்.
1) செந்தமிழ் நடை 2) மணிப்பிரவாளநடை.
3) மறுமலர்ச்சி நடை. 4) வெள்ளை நடை.

39. அருணாசலக் கவிராயர் ........................................ பாடுவதில் வல்லவர்.
1) கீர்த்தணைகள். 2) கீர்தனைகள்.
3) கீத்தனைகள். 4) கீர்த்தனைகள்.

* கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

40. அ) அக்குணங்களை ஆள்பவர் ஆண்மையுடையோர்.
ஆ) சான்றாண்மை உள்ளவரே சான்றோர்.
இ) அக் குணங்களில் எதுவும் தன்னைவிட்டுப் பிரிந்து போய்விடாமல் அடக்கி ஆண்டு வருபவர் சான்றாண்மை உடையோர்.
ஈ) ஒழுக்கத்தை உயிரிலும் பெரிதாகக் கருதுவது நற்குணங்களில் ஒன்று.
உ) நற்குணங்கள் பலவற்றைப் படைத்தோர் நல்லோர்.
1) இ, ஆ, அ, உ, ஈ.
2) உ, அ, ஈ, ஆ, இ.
3) இ, அ, ஈ, உ, ஆ.
4) இ, உ, ஆ, ஈ, அ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

01. சுருக்கமான விடை எழுதுக.

01) பின்வரும் தொடரைப்பிரித்து எழுதுக.
''வாணாளை வீணாள் ஆக்காமல்........''

02) ''நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள் அறிந்தாள்'' - இத் தொடரின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

03) ''காலிலேயும் வெள்ளி மிஞ்சி
கழுத்திலேயும் தங்கக்காரை....'' எனும் தொடரில் வரும் மிஞ்சி, தங்கக்காரை எனும் சொற்களின் பொருளினைத் தருக.

04) ''நான் சாப்பிட்டேன்'' என்ற உடன்பாட்டு வினைமுற்று வாக்கியத்தை, எதிர் மறை வினைமுற்று வாக்கியமாக மாற்றி எழுதுக.

05) பின்வருவனவற்றுள் திரிபின் ஆக்கத் தற்கிழமைக்கு உதாரணமாகக் கொள்ளத் தக்கனவற்றைத் தெரிவுசெய்து எழுதுக.
கண்ணனது பசு, நெல்லினது பொரி, கோதுமையினது மா, மாணவரினது தொகுதி.

06) சபையில் குதூகலம் வந்தவாறு இன்னதென்று என்ன காரணங்கற்பிக்கப் போகின் றாரோ எனப் புலவர்கள் தங்கள் கற்பனை உலகத்திற் சஞ்சரிக்கின்றார்கள்.

07) 'பார்' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

08) செய்தி அறிக்கைகளின் வகைகள் மூன்றைக் குறிப்பிடுக.

09) இரண்டாம் வேற்றுமைப் பொருள்கள் நான்கு தருக.

10) ''சும்மா தொடை நடுங்காத விதான ...... என்ன வந்தாலும் நான் உன்னைக் காப்பாத்துவன்.................. நீ யோசிக்காத.....'' இக்கூற்றின் திருத்திய தமிழ் வடிவம் யாது?

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

அ. இன்று நாட்டில் மின்சார வெட்டு தொடர்கதையாகவுள்ளது. மழைவீழ்ச்சியின்மையே இதற்குப் பிரதானக் காரணம். மரங்களை வெட்டுவதாலேயே இந்நிலைமை தொடர்கின்றது. எனவே, மரநடுகையை ஊக்குவிக்கும் வகையில் வீடுகள் தோறும் மரங்களை வளர்க்க வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்ட உமது கருத்து வெளிப்பாடு.

ஆ. முதியோர் எமது மூத்தத் தலைமுறையினர். அவர்களுக்கு முதுமை வந்துவிட்டதே எனபதற்காக அவர்களைப் புறந்தள்ள முடியாது. இளையோராகிய நாம் அவர்களைச் சுமையாக கருதலாகாது. அவர்களது உழைப்பின் பயனையே நாம் இன்று அனுபவிக்கின்றோம். அவர்களே எமது பண்பாட்டின் வேர்கள். எனவே, அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களுக்குரிய மதிப்பளிப்பதும் எமது கடமை ஆகும் என்பதை வலியுறுத்தி முதியோர் தினத்தன்று நீர் நிகழ்த்தும் சொற்பொழிவு.

இ. விஞ்ஞானம் மனிதனது சிந்தனை ஆற்றலை வளர்த்து மூளையால் அறியும் அறிவை விருத்தி செய்கிறது. இத்தகைய அறிவு விருத்தியின் பயனாக மனிதன் விண்வெளியில் வாழும் காலம் வெகுவிரைவில் ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது. சந்திரனில் மனிதன் கால்பதித்த நாளிலிருந்து இன்றுவரை பல்வேறு நாடுகளும் பல்வகைப்பட்ட விண்வெளி ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. இவ்விண்வெளி ஆய்வுகளினால் மனித குலத்திற்கு ஏற்படக்கூடிய அனுகூலங்கள், பிரதிகூலங்கள் பற்றி நண்பர்கள் இருவருக்கிடையில் இடம்பெறும் ஓர் உரையாடல்.

ஈ. ''அன்று விடுமுறை தினம் எனது மாமா வீட்டில் தங்கியிருந்தேன். இராப்போசனத்தின் பின்னர் படுக்கைக்குப் போய்விட்டேன். திடீரென எழுந்த அவலக் குரல் கேட்டு விழித்தெழுந்தேன். மாமா வீட்டாரும் எழுந்து விட்டனர். வீட்டுக் கதவைத் திறந்து வெளியே சென்றோம். என்ன ஆச்சரியம்! பக்கத்து வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. ........'' இந் நிலையில் பின் நடந்தவற்றையும் உமது அனுபவத்தையும் உள்ளடக்கிய ஒரு கற்பனைச் சித்திரம்.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

சுப்பிரமணிய பாரதியார் பாடல்களாலும் கட்டுரைகளாலும் நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் சமயப்பற்றையும் மனிதாபிமானத்தையும் வகுத்தார். பாரதியார் ஒரு நாட்டுக்கோ இனத்துக்கோ உரியவரல்லர். கூட்டிய மானிட ஜாதியை ஒன்றெனக் கொண்டு வையகம் முழுவதும் பயனுற வாழ்ந்தவர் பாரதி. சாதி, மத பூசல்களால் பிளவுபட்டுப் பின்தங்கிக் கிடக்கும் நம் மக்கள் முன்னேற்றப் பாதையில் பீடுநடைபோடப் பாரதி காட்டிய வழி உகந்தது. பாரதி விழாவைக் கொண்டாடுகின்ற நாங்கள் பாரதியார் பாடல்களைத் தினமும் படிப்போமாயின் எங்களுக்கு உற்சாகமும், தொழிலில் உறுதியும், ஒற்றுமை உணர்வும் உண்டாகும். அவற்றை வளர்ப்பதற்காகவே பாரதியார் பற்றிய விழாக்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன.

ஊக்கமும் உள்ளவலியும் உண்மையில் பற்றுமில்லா மாக்களுக்கு ஒரு கணமும் வாழத் தகுதியுண்டா? உயர்ந்த எண்ணங்களும் காரியத்தில் உறுதியும் இல்லாதவர்கள் பாரதி விழாக் கொண்டாடி என்ன பிரயோசனம்! ''எட்டுத் திக்குகளுக்கும் சென்று அங்குள்ள கலைச் செல்வங்களையெல்லாம் கற்றறிந்து கொணர்ந்திங்கு சேர்க்க வேண்டும்''என்றுக் கூறினான் பாரதி.

04. பின்வரும் கவிதையைப் படித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

மாலைப் பொழுதில் சோலையின் பக்கம்
சென்றேன் குளிர்ந்த தென்றல் வந்தது
வந்த தென்றலின் வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த பக்கத்தில் திருப்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடிக் கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே.

1. ஆசிரியர் கண்ட காட்சி எது?
2. அக் காட்சியை ஆசிரியர் எவ்வாறு சித்திரித்துள்ளார்?
3. தென்றல் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
4. கவிஞர் இக் காட்சிகய எங்கே கண்டார்?
5. இக் கவிதையில் இடம்பெறும் பொழுது யாது?

05. வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் நம் நாட்டுக்கு வருவதால் ஏற்படும் நன்மை தீமைகளைச் சுட்டிக் காட்டியும், தீமைகளைக் கட்டுப்படுத்துவதற்கான உமது ஆலோசனைகளை முன்வைத்தும் தினசரிப் பத்திரிகைக்கு ஒரு கடிதம் வரைக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III 22-T-III

01. சுருக்கமான விடை எழுதுக.

01) '' பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள் தீர்ந்த
மாசு அறு காட்சியவர்''
அ. பொச்சாந்து என்பதன் கருத்து யாது?
ஆ. இக் குறட்பாவின் கருத்தை எழுதுக.

02) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
''ஆற்றிலேயள்ளுண்டு போனாக்காற்சிறு நண்டு மதட்டிப்பார்க்கும்.''

03) ''தங்களைப் போன்ற புலவர்களின் தமிழில் இல்லாமல் இருக்கலாம். ஆனால், நாட்டு மக்களின் பேச்சு வழக்கில் இருக்கிறது'' இக்கூற்று யாரால்? யாருக்கு கூறப்பட்டது?

04) அ.நளவெண்பா பாடப்பகுதியில் நீங்கள் படித்த காண்டம் எது?
ஆ.''நளவெண்பா'' என்னும் நூலின் ஆசிரியர் யார்?

05. '' பார்வைகள்'' எனும் சிறுகதையில் அப்பாவால் கூறப்படும் தகாத பழக்கவழக்கங்கள் யாவை?

06. சூசிகை என்பதன் பொருள் என்ன?

07. '' குத்துக்கட்டை மேலேறி.......'' எனத் தொடங்கும் நாட்டார் பாடல் மலையக நாட்டார் பாடல் என அறிய உதவும் சொற்கள் எவை?

08. ''நகை நலம் நட்டார் கண் நந்துஞ் சிறந்த
அவை நலம் அன்பின் விளங்கும் வினச மாண்ட ........:..'' எனும் அடிகளில் வரும் நகை, நந்தும், அவை எனும் சொற்களின் பொருளினைத் தருக.

09. '' இவனைப் பார்த்தால் பூதமே மனித ரூபம் எடுத்து வந்தது போல இருக்கிறதே.'' இக்கூற்று யாரால்? யாருக்கு? எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

10. இரவு நீடித்தமையைப் பற்றிப் பாடியவர் யார்?

02. பின்வரும் செய்யுட்பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

அ. கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு.

ஆ. ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைந்தேன் - நாணிப்
பெருஞ் செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ் செல்லும் பேருமென் நெஞ்சு!

இ. ஆற்று வழியாகவும் ஊற்று வழியாகவும் நன்னீரைத் தன்னகத்தே
நிரப்பிக் கொள்ளும் பொய்கைபோல் அறிவுடையார் நல்வழிகளில்
ஈட்டிய பெரும்பொருள் கொண்டோராய் விளங்குவர்.
நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து
விளங்குதல் போல் அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த
நெஞ்சினராய் இலங்குவர்.

ஈ. இத்தனை நேரமாகி விட்டதே. இன்னும் என் கருணாகரன்
வரவில்லையே! கருணாகரா ஏன் இன்னும் தாமதிக்கிறாய்?
குறித்த நேரத்தைச் சற்றுக் கடந்தாலும் என் உயிர்
துடித்துப் போய்விடுமென்று உனக்குத் தெரியாதா?
தேவி! மகாகாளி பத்திரகாளி உன் சந்நிதியில்
கருணாகரனுக்கு மாலையிட வேண்டுமென்றே இங்கே
வந்திருக்கிறேன்.

03. நளவெண்பா சுயம்வரக்காண்டப்பகுதியில் நளமகாராஜன், தமயந்தி ஆகியோரின் சிறப்புக்கள் சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

04. முத்தொள்ளாயிரம் பாடப்பகுதியில் செவிலித் தாயால் அறையினுள் பூட்டப்பட்ட தலைவியின் தன்மை எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதை ஆராய்க.

* இல. 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

05. அ.திருமூலநாயனார் அழியாச் செல்வமாகிய கல்வியாலாய பயனை எவ்வாறு பெறலாமெனக் கூறுகிறார்.
ஆ.திருவள்ளுவர் சொல்வன்மை பற்றி யாது கூறுகின்றார்?

06. ''குத்துக்கட்டை மேலேறி'' என்ற மலையக நாட்டார் பாடலிலே இடம்பெறும் சிறப்புக்களை எடுத்துக் கூறுக.

07. ''பார்வைகள்'' என்ற சிறுகதையை அடிப்படையாக வைத்து,
1. தருமலிங்கத்தின் எதிர்பார்ப்பை எழுதுக.
2. தருமலிங்கம் ஆஸ்பத்திரியில் செய்த வேலைகள் எவை?
3. விமலன் நேர்முகப் பரீட்சையில் எவ்வாறு சித்தியடைந்தான்?

-நிறைவுற்றது-

நன்றி: மேல்மாகாண கல்வித் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்


PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670




ஏக விநியோகஸ்தர்கள்:

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



இரங்கநாதன் பிரபாசங்கர் (குஞ்சுபபி)

திதி: தசமி

மலர்வு 16★03★1967

உதிர்வு 30★11★2006

கண்ணை இழந்திருந்தால் காலம் செய்த விதியென்போம்
பொன்னை இழந்திருந்தால் போகட்டும் என்றிருப்போம்
உங்களை இழந்திருந்த உலகத்தில் வாழ்வதென்றால்?
என்னவென்று ஆகும் அப்பா ஏன் அப்பா எமை பிரிந்தாய்.

என்றும் உங்கள் நினைவில்:
குடும்பத்தினர்.

உசன் தெற்கு,
மிருசுவில். (92457)

## ஏழாவது அகவைதனில் எழுகின்ற நினைவலைகள்

நெடுந்தீவைச் சேர்ந்த

அமரர் தனுக்கோடி புண்ணியமூர்த்தி

(இளைப்பாறிய அரச மருந்துக் கலவையாளர்)

திதி:26.11.2009



மண்ணிலே மலராய் 05.04.1926

விண்ணிலே விருட்சமாய் 13.12.2002

கோயில்கள் சுற்றிவர கோலமிடும் அரியாலை பதியினிலே
வருநோய்க்கு மருந்தளித்து அயராது சேவை செய்து
ஆதரவு காட்டி நின்று அரவணைத்த அன்புக் கரங்கள் எங்கே
ஆண்டேழு அகன்றாலும் ஆறிடுமா எம் துயரமிங்கே
ஆண்டுகள் ஏழு மறைந்துவிட்ட போதிலும்
ஆழ்மனதில் எழில்முகம் மறைந்திடவில்லையே

ஏழாவது வருட ஈரவிழிகளுடன்:
குடும்பத்தினர்.

சாஸ்திரியார்லேன்,
அரியாலை. (92464)

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 ★ 01 ★ 1928



மறைவு 19 ★ 11 ★ 2007

துன்னையூர் சங்கர உடையார் வழித்தோன்றல்

அமரர் வைத்திலிங்கம் சரஸ்வதி (பாப்பீ ரீச்சர்)

திதி: பூர்வபக்க தசமி (26.11.2009)

கருவறையிலேயே காற்றூட்டி
கண்விழித்து சீராட்டி
கண்ணியமாய் வளர்த்தாளாக்கிய
கடவுளவதாரமான எம் அன்னையே!

ஆண்டுதான் இரண்டானாலும்
ஆறுவதில்லை எம் மனது - உங்கள்
ஆத்மா ஆண்டவனின் பாதமடைய
இறைவனை வேண்டிக் கொண்டிருக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அருமை மகன்
வை.பிரதாபன் (லண்டன்),
பெறாமகள் இ.திலகேஸ்வரி.

தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு. (சி/5624474)

## நெடுந்தீவுத் துறைமுகத்தில் தடுப்பு அணை அமைப்பு

நல்லூர்,நவ.26

நெடுந்தீவுத் துறைமுகத்துள் கடல் அலைகள் அடித்து உள்புகுவதைத் தடுக்கக் கூடிய வகையில் தடுப்பு அணைகள் அமைக்கப் படுகின்றன.

நெடுந்தீவுக் கடற்படையினர் வெளியிடங்களிலிருந்து பெரிய கற்களை இதற்கென எடுத்துவந்து தடுப்பு அணை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தடுப்பு அணை அமைக்கப்படுவதன் மூலம் துறைமுகத்தில் கூடுதலான சேற்று மண் உட்புகுவது தவிர்க்கப்படும் எனவும், படகுகள் போக்குவரத்தில் ஏற்படும் தாமதங்கள் தவிர்க்கக்கூடிய வாய்ப்புக்கள் கூடுதலாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தடுப்பு அணை போடப்படும் நடவடிக்கையைப் பொதுமக்கள் வரவேற்றுள்ளனர். (50-111)

## மந்திகை கண்ணகை அம்மன் கோயில் புனர்நிர்மாணம்

வடமராட்சி, நவ.26

புலோலிப் பகுதியில் பழைமை வாய்ந்த மந்திகை அருள்மிகு கண்ணகை அம்மன் கோயில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதனையொட்டி எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9.45 மணிமுதல் 10.15மணி வரையான சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

சைவக்குருமணிகள் பயிற்சிக்கல்லூரி அதிபரும், நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயில் பிரதமகுருவுமான சிவஸ்ரீ சதாமகாலிங்க சிவக்குருக்கள் பிரதம குருவாக இருந்து பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார். (50-236)

## அனுமதிப்பத்திரமின்றி எடுத்துவரப்பட்ட மரங்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், நவ.26

அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் கொண்டு வரப்பட்ட மரங்கள் சாவகச்சேரி நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு அரச மரக்கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் வாகனத்தின் சாரதிக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 12 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் வாகனத்தில் கொண்டுவரப்பட்ட மரங்களை அரச மரக்கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (50-207)

## ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றோருக்கு

யாழ்ப்பாணம், நவ.26

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் அண்மையில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக் கடிதம், கடமையேற்ற கடிதம், பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், இரண்டு நற்சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகளுடன் மூலப்பிரதிகளையும் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (50-207)


## விற்பனைக்கு

ஒட்டு மாங்கன்று பெரியது சிறியது, தேசி, மாதுளை, யம்பு (பதி), நல்ல இன தென்னங்கன்று, கமுகு, 1K கொய்யா, றெட்லேடி பப்பாக்கன்று, பலாக் கட்டை, நெல்லி, பலாக்கன்று, அகத்தி, முந்திரிகைக் கன்று, வெற்றிலைக்கன்று, சண்டி, மலை வேம்பு, சவுக்கு பெரியது சிறியது, இலுப்பங் கன்று, வில்வம் கன்று, கமூ, வேம்பு, சமன்டலை, ஒட்டு Rosa, குறோட்டன், பாம்பி வகைகள் மேலும் பல கன்றுகள் தொகையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: நிரூலங்கா பாம்,
கே.கே.எஸ்.றோட், இணுவில். தொ.பே.: 077 6129343
கிளை: பலாலி வீதி,
ஒழுங்கை, கணேசா பாடசாலை அருகில். (91240)


## 31ஆம் நாள் நினைவு

மலர்வு 09 ★ 03 ★ 1936



உதிர்வு 27 ★ 10 ★ 2009

அமரர் சிங்காரம் சரசு

மெய்யைவிட்டு ஆவி பிரிந்து உன் உடம்பு
பொய்யாகிப் போய் இன்று மாதம் ஒன்று ஆனதம்மா!
கையேந்தி நின்றவனும் கைவிட்டுப் போன பின்னே
கலங்கி நின்று வாடுகின்றோம் கவலை என்று தீருமம்மா


'வதனி நிலையம்',
உடுப்பிட்டி தெற்கு,
உடுப்பிட்டி.
தொ.பே.: 021 3213749 (91242)

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்தித்து நிற்கும்:
உறவுகள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 ★ 11 ★ 1942



மறைவு 29 ★ 11 ★ 2006

அமரர் கந்தையா மகேஸ்வரன்

திதி: 26.11.2009 நவமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
முதலாம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (91376)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் தாமோதரம்பிள்ளை தங்கவடிவேலு

பிறப்பு 15★12★1934

இறப்பு 27★10★2009

26.11.2009

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே!
யுத்தம் எனும் அரக்கன் எம் குடும்பத்தை பதம் பார்த்தபோதும்
எது வரினும் வரட்டும் என்று மனவைராக்கியம் கொண்டவரே
நீங்கள் எம்மை விட்டு அகன்று முப்பத்தொரு நாள்கள் - தான்
ஆனாலும் ஈரவிழிகளினால் சொரிகின்றோம் என்றும் கண்ணீரே.

அத்தாய், அல்வாய். மனைவி, பிள்ளைகள். (91277)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 ★ 03 ★ 1933



மறைவு 07 ★ 12 ★ 2008

குணமணி இராசதுரை

திதி: நவமி

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம்துயர்?
அன்பின் உருவமாய்... பாசத்தின் உறைவிடமாய்...
நாள்தோறும் உலாவந்த - எம் அன்புத் தெய்வமே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகளானாலும்
எங்கள் நெஞ்சில் என்றும் நீங்கள் வாழ்வீர்கள்...

எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (26.11.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
இராசதுரை (கணவர், தொ.பே.: 077 4469013)
திரு.திருமதி வசந்தகுமார் இராஜினி
(மகள், சுவிஸ்).

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (92461)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத் துரோகிகளின் சதி வலையில் சிக்குண்டுள்ளார் சரத் பொன்சேகா!

## நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, நவ. 26

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை நிறுத்துவதற்கு முயற்சி செய்த - பிரிவினைவாதத்தை ஆதரித்த ரணில் விக்ரமசிங்க, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் மற்றும் மங்கள சமரவீர போன்ற தேசத்துரோகிகளின் சதி வலையில் சரத் பொன்சேகா சிக்கியுள்ளார் என்று விமல் வீரவன்ஸ குற்றஞ் சாட்டியுள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்நாட்டு மக்களின் இதயங்களில் எரிந்துகொண்டிருந்த தீயை அணைப்பதற்காக இந்நாட்டு மக்கள் 2005 இல் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினர். பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டு மக்களின் இதயங்களில் இருந்த பயத்தை அவர் நான்கு வருட ஆட்சியில் நீக்கினார்.

இரண்டாம் கட்டமாக மக்களின் பசித் தீயை இல்லாதொழிப்பதற்காக அவர் மக்களிடம் ஆணை கேட்கின்றார். அந்த ஆணையை நாம் பெற்றுக்கொடுப்பதன் மூலம் மக்களின் பசித்தீ முற்றாக அணைக்கப்படுவதோடு கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் முன்னேற்றமடையும்.

2005 ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்தவுக்கு வாக்களிக்காத வடக்கு - கிழக்கு தமிழர் கூட இந்த முறை அவருக்கு வாக்களிப்பர். 2005 இல் தோற்கடிக்கப்பட்ட தேசத்துரோக சக்திகள் இந்த முறையும் தோற்கடிக்கப்படுவது நிச்சயம்.

ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர, மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் போன்ற தேசத்துரோக சக்திகள் வலையில் சரத் பொன்சேகா சிக்கியுள்ளார்.

ரணில், ரவூப், ஹக்கீம் மற்றும் மனோ கணேசன் போன்றவர்கள் பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பிரிவினைவாதத்தை ஆதரித்துப் பேசியவர்கள் - என்றார். (சி)

## வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்.சிவலிங்க யோகேந்திரா நிலையம் நடத்தும் வாராந்தச் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் மாலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது.

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தின் தலைவர் நா.நவராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் ''இந்து மதம் காட்டும் அறநெறி'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (50-9)

# பொதுவேட்பாளரைத் தெரிவுசெய்வதில் எதிர்க்கட்சிகள் சதி முயற்சியில் ஈடுபாடு

## ஊடகத்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 26

''எதிர்க்கட்சியினர் பொதுவேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக சதிகார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.''

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது அரசுடன் 28 அரசியல் கட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ளன. அதிகப் பெரும்பான்மையுடன் தோன்றக்கூடிய ஒரேயொரு பொது அபேட்சகர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே.

கட்சியின் தேசிய மாநாட்டின்போது மக்கள் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துமாறு கேட்டபோதும் அதற்கான பதிலை அந்தச் சந்தர்ப்பத்தில் வழங்க சட்ட அதிகாரம் இருக்கவில்லை. அதற்கான கால எல்லை பூர்த்தி அடைந்ததும் அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடியாடியே தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாட்டின் உண்மையான பொது ஜனாதிபதி அபேட்சகர் மஹிந்த ராஜபக்ஷ என்றும் எதிர்க் கட்சியினர் பொது அபேட்சகர் ஒருவரைத் தேடும் வகையில் சதிகார நடவடிக்கையில் ஈடுபட முயற்சிக்கின்றது - என்றார். (சி)

# போரை வெற்றிபெற்றுத் தந்தவர் யார் என்பதை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வெளிப்படுத்துவர்

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26

போரை விற்று பிழைப்பை நடத்தியவர்கள் யார்? போரை வெற்றி பெற்றுத் தந்தவர்கள் யார்? என்பதை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் வெளிப்படுத்துவர் என்று ஐ. தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு கூறியவை வருமாறு:-

போரில் வெற்றி பெற்றுத் தந்தவர் ஒரு வீடு கூட இல்லாமல் அலைந்து திரிகிறார். ஆனால் போரை விற்று பிழைப்பை நடத்தியவர்கள் ஆடம்பர மாளிகைகளில் சுகபோகம் அனுபவிக்கின்றனர். இந்த நிலையில் போரை வெற்றி பெற்றுத் தந்தவர்கள் யார் ? என்பதை எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் தீர்மானிப்பார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது பொது வேட்டபாளராக சரத் பொன்சேகாவை நிறுத்த ஜே. வி. பி. தீர்மானித்துள்ளது. இதனை ஐ. தே. கட்சி வரவேற்கிறது.

ஜே.வி.பியும் ஐ.தே.காவும் பொது வேட்பாளர் குறித்து பேச்சுக்களை நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்தன.

இந்த அரசு கடந்த இரண்ட வருடங்களில் நாட்டிற்கு எதையுமே செய்யவில்லை. அவர்கள் தங்கள் பதவிகளையும் இருப்புக்களையும் தக்க வைத்துக் கொள்வதற்காக தேர்தல்களை நடத்தினர். இதன் மூலம் நாட்டின் நிதியை வீணடித்தனர். இதனால் தான் நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்தை நோக்கிச் செல்கிறது. (சி)

# 5 லட்சத்து 45 ஆயிரத்து 132 மாணவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவர்

அச்சுவேலி, நவ.26

2009ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குப் புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் இரண்டுக்கும் நாடளாவிய ரீதியில் 5 லட்சத்து 45 ஆயிரத்து 132 மாணவர்கள் தோற்றுகின்றனர். மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 4ஆயிரத்து 37 பரீட்சை நிலையங்களும், 504 இணைப்பு நிலையங்களும் நிறுவப்படவுள்ளன. பரீட்சைகள் டிசெம்பர் 11ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் 5லட்சத்து 45ஆயிரத்து 132 மாணவர்களில் புதிய பாடத்திட்டத்திற்கான பரீட்சைக்கு 4 லட்சத்து 10 ஆயிரத்து 274 மாணவர்கள் தோற்றுகின்றனர். இதில் பாடசாலைப் பரீட்சார்த்திகளாக 4 லட்சத்து 5 ஆயிரத்து 257 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 5 ஆயிரத்து 17 பேரும் தோற்றுகின்றனர். இவர்களுக்காக 3 ஆயிரத்து 215 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன.


பழைய பாடத்திட்டத்தின் பிரகாரம் நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்றும் ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 858 மாணவர்களில் பாடசாலைப் பரீட்சார்த்திகளாக 7ஆயிரத்து 375 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 483 பேரும் தோற்றுகின்றனர்.

இவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஆயிரத்து 92 பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.


புதிய, பழைய பாடத்திட்டத்திற்கு நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு செயற்படவுள்ள 4 ஆயிரத்து 307 பரீட்சை நிலையங்களுக்குமான வளங்களை மேற்கொள்வதற்கு 504 இணைப்பு நிலையங்களும் 30 ஒருங்கிணைப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.


பரீட்சை தொடர்பான செயற்பாடுகளைத் திட்டமிட்ட முறையில் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (50-11)











தென்மராட்சிப் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர் தெரிவு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் உரையாற்றுவதையும் இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம். பிரதேச மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் ப.நடராசாவுக்கான நியமனக் கடிதத்தினை நீதிபதி வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாரதி, நடத்துநர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் 42 பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலைமை

## ஏ–9 பாதையூடான சேவை சீராக நடைபெற மேலும் 20 புதிய பஸ்கள் தேவைப்படுகிறது

### வட பிராந்தியப் பொது முகாமையாளர் கணேசபிள்ளை உதயனுக்கு செவ்வி

**செவ்வி: உமா**



**கேள்வி: 'கிளியரன்ஸ் நடைமுறை நீக்கப்பட்ட பின்பு யாழிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலதிகமாக இதுபற்றிக் கூறமுடியுமா?**

பதில்: இதுவரை கடந்த 16ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரைக்கும்- யாழ்.மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கும்,வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஏராளமானோர் பயணித்துள்ளனர்.

யாழிலிருந்து வவுனியாவிற்கு 6961 பயணிகள் 108 பஸ்களிலும், வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 4116 பயணிகள் 100 பஸ்களிலும்,

யாழிலிருந்து கொழும்பிற்கு 662 பயணிகள் 16 பஸ்களிலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 543 பேர் 13 பஸ்களிலும் ஏ-9 வீதியூடாக இதுவரை பயணம் மேற்கொண்டிருந்தனர் மக்களின் தொகைக்கு ஏற்ப நாம் அதிகளவான பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் பஸ்களுக்கென குறித்த நேர ஒழுங்குகள் விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவிருக்கின்றது. தற்போது பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப புறப்படும் நேரம், பஸ்களின் எண்ணிக்கை என்பன தீர்மானிக்கப்பட்டு வருகின்றன.

**கேள்வி: கிளிநொச்சியில் புதிதாக பஸ்டிப்போ ஒன்று திறக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றதே....?**

பதில்: கிளிநொச்சி நகரில் இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போ டிசெம்பர் மாதம் முதலாம் திகதி திறக்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை அமைந்திருந்த இடத்திற்கு முன்னால் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய கட்டடத்திலும் அதனோடு இணைந்திருக்கும் காணியில் இந்த டிப்போ அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் இணைந்து இதனை என்னிடம் கையளித்தனர்.

இந்த டிப்போவில் முதல் கட்டமாக ஐந்து பஸ்கள் சேவையில் ஈடுபடவிருக்கின்றன. இதில் யாழ்-கிளிநொச்சிக்கும், கிளிநொச்சி - யாழ்ப்பாணத்துக்கும் என தலா ஒரு பஸ் வீதம் சேவையில் ஈடுபடும். அத்துடன் அங்கு மூன்று பஸ்கள் உள்ளூர் சேவையில் ஈடுபடவிருக்கின்றன.

நவம்பர் மாதம் 30ஆம் திகதி கிளிநொச்சியின் வடக்குப் பகுதிகளான திருநகர், கணேசபுரம், உருத்திரபுரம், ஜெயந்திபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் எனக்கூறப்பட்டுள்ளது.

இந்த மக்களின் நலன் கருதியும், அங்கு பணியாற்றவிருக்கும் அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதியுமே முதற் கட்டமாக இந்த பஸ்சேவை இடம்பெறவிருக்கிறது.

1990களின் பின்னர் தற்போதுதான் இங்கு எமது சேவை இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

**கேள்வி: யாழ்ப்பாணத்தில் வ.பி. போ.ச.வின் செயற்பாடுகள், தேவைகள் குறித்து விளக்க முடியுமா?**

பதில்: தற்போது யாழ் சாலையிலிருந்து 86பஸ்களும், பருத்தித்துறை சாலையிலிருந்து 30 பஸ்களும், காரைநகர் சாலையிலிருந்து 14 பஸ்களும் சேவையில் ஈடுபட்டுவருகின்றன.

இன்றைய நிலையில் வாகனச் சாரதி, நடத்துநர் மற்றும் பஸ்கள் அதிகம் எமக்குத் தேவைப்படுகின்றன.

தினமும் 42 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலைமை அண்மைக்காலமாக உள்ளது. சாரதி, நடத்துநர் சேவைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் அண்மையில் நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது. எனினும் போக்குவரத்து அமைச்சின் அனுமதி கிடைக்காததனால் அந்த வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படவில்லை.

எமது சேவையினை விரிவுபடுத்தியதன் காரணமாக உடனடியாக 20 பஸ்கள் தேவையாக இருக்கின்றது. இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபை தலைவர் டம்மிகஷேவபத்திரனவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருக்கிறோம்.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்ட தலைவர் பசில் ராஜபக்ஷவிடமும் எமது தேவைகள் குறித்து விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

பஸ்களுக்கான உதிரிப் பாகங்கள் மற்றும் எரிபொருள் என்பன தற்போது ஓரளவு தொடர்ச்சியாகக் கிடைப்பதனால் சமாளிக்க முடிகிறது.

**கேள்வி: ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கான பஸ்கட்டணம் தொடர்பாக......?**

பதில்: யாழ்ப்பாணம் - கொழும்பிற்கான அரை சொகுசு பஸ்ஸுக்கான கட்டணம் 550 ரூபாவாகவும்-சாதாரண பஸ்ஸுக்கான கட்டணம் 365 ரூபாவாகவும் ஆகும். ஆசன முற்பதிவு செய்து கொள்வது எனில் 50 ரூபாவும் அறவிடப்படும்.

யாழ்ப்பாணம் - வவுனியாவிற்கு 300 ரூபா அரைச் சொகுசு பஸ்ஸுக்கும், 200 ரூபா சாதாரண பஸ்ஸுக்கும் கட்டணமாக அறவிடப்படுகிறது.

இதே போல், யாழ்ப்பாணம் - மதவாச்சி வரை 450 ரூபா அரைச்சொகுசு பஸ்ஸுக்கும், 300 ரூபா சாதாரண பஸ்ஸுக்கும் கட்டணமாக மக்களிடம் அறவிடப்படுகிறது.

**கேள்வி: பொதுமக்களிடமிருந்து எத்தகைய ஒத்துழைப்பை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?**

பதில்: மக்கள் வெளி மாவட்டங்களுக்கு பயணிப்பதற்கென அதிகபணம், அதிக நேரங்களை செலவு செய்யும் நிலைமை தற்போது நீங்கியுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியமானது. அது கிடைப்பதன் மூலமே சேவையைச் சிறப்பாக வழங்க முடியும்.

கிளியரன்ஸ் நடைமுறை நீக்கப்பட்ட முதல் நாள் யாழ்.புகையிரத நிலையமுன்றலில் மக்கள் நடந்துகொண்ட விதம் எமக்கு மனவருத்தத்தைத் தருகிறது.

இது மட்டுமன்றி யாழிலிருந்து கொழும்பு செல்வது எனக்கூறி ஆசன முற்பதிவு செய்து கொள்ளும் மக்களில் சிலர் வவுனியாவில் இறங்கி விடுகின்றனர். இதனால் பஸ்ஸில் ஆசனங்கள் வெறுமையாக்க் காட்சியளிக்கும் நிலைமை உள்ளது.

கொழும்பு செல்வதற்கு மட்டுமே ஆசன முற்பதிவு செய்து கொள்ளும் நடைமுறையுள்ளது. இதனால் வவுனியா மற்றும் ஏனைய இடங்களுக்குச் செல்வோர் கொழும்புக்கென ஆசன முற்பதிவு செய்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்ய வேண்டாம் எனவும் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

---

## காலம்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளுக்கான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,நவ.26

சங்கானை பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களில் காலங்கடந்த இறப்பு, பிறப்புகளை பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை சங்கானை பிரதேச செயலகத்திலும், நாளை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையும் இடம்பெறும் இந்த சேவைகளில் மக்கள் பங்குபற்றி பயனடைந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட செயலக வட வலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி மகாராணி ராசரட்ணம் கேட்டுள்ளார்.

(50-14)

---


## அறிவித்தல்
## வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் பட்டின உப அலுவலகம்

ஆதனப் பெயர்மாற்றம்

இல. 269/6,269/7,269/8,269/10,269,277பொன்னாலை வீதி, வட்டாரம்-01

ஆதன இல. 269/6,269/7,269/8,269/10,269/11,277 பொன்னாலை வீதி, வட்டாரம் -01இல் திருமதி A.கதிரவேலு எனும் பெயரில் எமது ஆதனப்பதிவேடுகளில் காணப்படும் ஆதனங்களை

1. சி.செந்தூர்ச்செல்வன்
2. இ.மேகநாதன்
3. இ.ஸ்ரீகாந்தன்
4. த.மோகனதாஸ்
5. இ.இராஜேஸ்வரன்
6. பொ.சதீஸ்வரன்

ஆகியோர் தமக்கு உரிமையானது எனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வானத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து சி.செந்தூர்ச்செல்வன், இ.மேகநாதன், இ.ஸ்ரீகாந்தன், த.மோகனதாஸ், இ.இராஜேஸ்வரன், பொ.சதீஸ்வரன் என்பவர்களின் பெயர்களுக்கு மேற்குறித்த ஆதனங்கள் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.


## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.26

இந்து கலாசார திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'இந்து சமய வாழ்வியல்' எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தராஜாவும், 'இந்து சமய மெய்யியல்' எனும் தலைப்பில் சைவப் புலவர் கந்த சத்தியதாசனும், 'இந்து சமய வாழ்வியல்' எனும் தலைப்பில் ஆசிரியர் கு.பாலசண்முகனும், 'இந்து சமய வரலாறு' எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரனும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இதில் யாழ்.மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-9)


## பத்தாவது ஆண்டு பாதம் பதிக்கும் காயத்திரி.....

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

கல்விச் சமூகத்துக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் இனிய கிறிஸ்மஸ் - புத்தாண்டு வாழ்த்துக்களுடன் "காயத்திரி"

- சிறுவர் நூல்கள்
- புலமைப்பரிசில் நூல்கள்
- சிங்களம் கற்பதற்கான நூல்கள்
- சமய நூல்கள்
- பயிற்சி நூல்கள்
- கணனி நூல்கள்
- கதைப்புத்தகங்கள்
- இலக்கிய நூல்கள்
- பொது நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்

காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை | மலிவு விலையில்....

பாடசாலைகள் கண்காட்சியை பார்க்க விஷேட ஒழுங்குகள்... 021 222 9881

நவம்பர் 29, 30 டிசெம்பர் 1ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனுமதி இலவசம்

காயத்திரி பப்ளிகேஷன் கொழும்பு

011 4981906, 0727374750

காயத்திரியை நேரில் சந்தியுங்கள்.......
மிகுதியைப் பாருங்கள்......

(சி/562716)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் எல்லை அத்துமீறலை இந்தியா அலட்சியப்படுத்தாது

## அமெரிக்காவில் வைத்து மன்மோகன் சிங் எச்சரிக்கை

வாஷிங்ரன், நவ. 26

சீனாவின் எல்லை அத்துமீறல் நடவடிக்கையை இந்தியா அலட்சியப்படுத்தாது - என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடமும் அவர் எடுத்துக் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார்.


சந்திப்பின் போது, தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும், சீனாவின் எல்லை அத்துமீறல் குறித்தும் ஜனாதிபதி ஒபாமாவிடம் பிரதமர் மன்மோகன் சிங் எடுத்துரைத்தார் எனச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பின்னர் ஜனாதிபதி ஒபாமா மற்றும் மன்மோகன் சிங் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியாவும், அமெரிக்காவும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றன எனக் கூறிய ஒபாமா, இந்தியா ஆசிய நாடுகளில் முன்னோடியாக திகழ்வதாக ஒபாமா புகழாரம் சூடினார். மேலும், பிரதமர் மன்மோகன் சிங்கின் அமெரிக்கப் பயணம் மூலம் இரு நாடுகளின் நட்புறவை மேலும் வளர்க்கும் என ஜனாதிபதி ஒபாமா கூறினார்.

இந்தியாவில் விவசாயம், கட்டமைப்பு, எரிசக்தி துறைகளில் அதிக முதலீடு செய்ய அமெரிக்க மக்களை வரவேற்கிறோம் என கூறிய பிரதமர் மன்மோகன் சிங், இந்தியாவில் வர்த்தக வாய்ப்புக்கு பஞ்சமில்லை. மற்ற நாடுகளைவிட அமெரிக்காவுக்கு எங்கள் அழைப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இரு நாடுகள் இடையே சிறந்த பொருளாதார உறவு இல்லாமல் மற்ற நெருக்கங்கள் முழுமையடையாது எனக் கூறினார்.

மேலும், இந்தியா, அமெரிக்கா இடையே மக்களுடன் மக்கள் நல்லுறவு, இருதரப்பு வர்த்தக உறவு ஆகியவை தீவிரமடைவதால் பொருளாதார வளர்ச்சி வேகமாகும். இரு நாடுகள் இடையே புரிந்து கொள்ளுதல் ஏற்படும். அதுபோன்ற நெருங்கிய உறவையே அமெரிக்காவிடம் இந்தியா எதிர்பார்க்கிறது என பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

தொடர்ந்து சீனாவின் அத்துமீறல் குறித்து கூறிய பிரதமர், சீனாவின் இந்த நடவடிக்கையை இந்தியா அலட்சியப்படுத்தாது எனக் கூறினார். முன்னதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அமெரிக்க அரசு சார்பாக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



அமெரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை வெள்ளை மாளிகையில் சந்தித்தபோது.....

# மீன்பிடிக் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்கு எதிராக புதுடில்லியில் திருமாவளவன் ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ. 26

மீன்பிடிக் கட்டுப்பாட்டுச் சட்டப் பிரேரணையை மத்திய அரசு திரும்பப் பெறாவிட்டால், டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மீனவ மக்களின் வாழ்வாதார உரிமைகளைக் கடுமையாகப் பாதிக்கும் வகையில் இந்திய அரசு, மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது. இந்தச் சட்டம் இந்திய மீனவர்களின் கடல் உரிமைகளை வெகுவாகப் பாதிக்கும்.

இந்தச் சட்டம் இந்திய மீனவர்களின் ஆழ் கடல் மீன்பிடிப்பை தடை செய்வதோடு, மீனவச் சமுதாயத்தின் பாரம்பரிய உரிமைகளை பறிக்கும் வகையில் உள்ளது. எனவே, இச்சட்டம் அறிமுகம் செய்வதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வன்மையாக எதிர்க்கிறது.

இச்சட்டத்தை இந்திய அரசு திரும்பப் பெற வேண்டும். இல்லையெனில், தமிழக மீனவ அமைப்புகளை ஒருங்கிணைத்து, டில்லியில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் - என்றுள்ளது.

# ஊழலுக்கு எதிரான ஐ.நா. பிரகடனம்: மன்றில் ஒப்புதல் பெறாதமை ஏமாற்றம்!

புதுடில்லி, நவ. 26



ஊழலுக்கு எதிரான ஐ.நா. பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தியா, அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற தவறியமை ஏமாற்றம் அளிக்கிறது - என்று பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து சுமார் ரூபா 65 லட்சம் கோடி அளவுக்கு கறுப்புப்பணம் வெளிநாட்டு வங்கிகளில் சட்டத்துக்கு புறம்பாக முதலீடு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

ஊழலுக்கு எதிரான ஐ.நா. பிரகடனத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளதால் இது குறித்த விவரங்களைத் தெரிவிக்க சுவிட்ஸர்லாந்து அதிகாரிகள் மறுக்கின்றனர் என்று பா.ஜ.க. நாடாளுமன்ற கட்சிக் கூட்டத்தில் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி தெரிவித்தார்.

காங்கிரஸ் கூட்டணி அரசு பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ள அதேசமயம் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறத் தவறியமை ஏமாற்றம் அளிக்கிறது - என்றும் அவர் தெரிவித்தார். மக்களவைத் தேர்தலின்போது வெளி நாடுகளில் முதலீடு செய்யப்படுள்ள கறுப்புப் பண விவகாரத்தை பா.ஜ.க. எழுப்பியது. ஆட்சிக்கு வந்த பின்னர் கறுப்புப் பணத்தை திரும்பக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று காங்கிரஸ் தெரிவித்திருந்தது.

ஆனால் அதுதொடர்பான ஐ.நாவின் பிரகடனத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளதால் கறுப்புப் பணம் தொடர்பான விவரங்களை பெறமுடியவில்லை.

# முல்லைப்பெரியாறு பிரச்சினைக்காக டிசெ. 19 இல் சரத் கட்சி நடைப் பயணம்

சென்னை, நவ. 26

முல்லைப்பெரியாறுப் பிரச்சினையில், மக்களுக்கு உண்மை நிலையை விளக்க டிசம்பர் 19 ஆம் திகதி சமத்துவ மக்கள் கட்சியினர் நடைப்பயணம் செல்லவுள்ளனர் - என்று அக் கட்சியின் தலைவர் சரத்குமார் கூறியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நிறைவேற்றப்படாமல் உள்ளது. இந்தப் பிரச்சினை திசை மாறி புதிய அணை கட்ட வேண்டும் என்று கேரள அரசு இப்போது கூறுகிறது. இந்தப் பிரச்சினையில் அரசியல் நோக்கத்தோடு அணுகாமல் நல்ல தீர்வு ஏற்பட அனைவரும் ஒற்றுமையோடு முயற்சிக்க வேண்டும். தமிழகத்தின் நன்மை கருதி முதல்வர் கருணாநிதி பல முயற்சிகளை எடுத்து வருகிறார்.

இப்பிரச்சினையில் உண்மை நிலையை மக்களுக்கு விளக்கி விழிப்புணர்ச்சி ஏற்படுத்த எனது தலைமையில் டிசெம்பர் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேனியில் இருந்து நடைபயணம் தொடங்கவுள்ளது. 20ஆம் திகதி கடலூரில் நடைப்பயணம் நிறைவடைகிறது.

# லிபரான் விசாரணைக் குழு அறிக்கை: வாஜ்பாய், அத்வானி மீது குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 26

பாபர் மசூதி இடிப்பை நடத்தி முடித்து வகுப்புக் கலவர நிலைக்குக் கொண்டுசென்றதில் பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் வாஜ்பாய், எல்.கே. அத்வானி, சங்க பரிவாரங்களின் நிர்வாகிகள் உள்ளிட்ட 68 பேருக்கு பங்குள்ளது - என்று லிபரான் விசாரணைக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.



அயோத்தியில் பாபர் மசூதியானது 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி கரசேவகர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இதற்கு பா.ஜ.க., வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்டவை காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இதை மறுத்த பா.ஜ.க., சங்கபரிவாரங்கள் இந்துக்களின் மனக் குமுறலே மசூதி இடிப்பில் முடிந்தது என்று குறிப்பிட்டு வருகின்றனர்.

பாபர் மசூதி இடிப்பு குறித்து விசாரித்த லிபரான் விசாரணைக் குழு, தனது அறிக்கையை கடந்த ஜூன் 30ஆம் திகதி அரசிடம் ஒப்படைத்தது. இந்நிலையில் அந்த அறிக்கையின் சில பகுதி ஆங்கில நாளேடு ஒன்றுக்கு ரகசியமாக கசிந்து புயலை கிளப்பிவிட்ட நிலையில் மறுநாள் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

வகுப்பு நல்லிணக்கத்தை சீர்குலைக்கச் செய்யும் அளவுக்கு பூதாகர பிரச்சினையாகிப்போன பாபர் மசூதி இடிப்புச் சம்பவத்துக்கு சங்கபரிவார அமைப்புகள், அதிகாரிகள் உள்ளிட்ட 68 பேர் மீது லிபரான் விசாரணைக் குழு கடுமையாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

4 தொகுப்புகளில் 1000 பக்கம் கொண்டுள்ளது லிபரான் அறிக்கை. இந்த அறிக்கையில் குற்றம்சுமத்தியுள்ள 68 பேரில் முதலில் இடம்பெறுபவர்களாக முன்னாள் பிரதமர் வாஜ்பாய், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி ஆகியோர் உள்ளனர். பா.ஜ.க. தலைவர்கள் முரளி மனோகர் ஜோஷி, அப்போதைய உத்தரப்பிரதேச முதல்வர் கல்யாண் சிங், வி.எச்.பி. அமைப்பைச் சேர்ந்த கிரிராஜ் கிஷோர், அசோக் சிங்கால் உள்ளிட்டோரையும் இந்தக் குழு பாபர் மசூதி இடிப்பில் குற்றம்சாட்டியுள்ளது.

16ஆம் நூற்றாண்டு வரலாற்றுச்சின்னமாக திகழ்ந்த பாபர் மசூதியைத் தகர்க்க சங்க பரிவாரங்கள் முடிவெடுத்தாலும் அதில் பா.ஜ.கவின் மிதவாதத் தலைவர்கள் எனக் கூறிக்கொள்ளும் வாஜ்பாய், அத்வானி ஆகியோருக்கும் பங்குள்ளது என நீதிபதி லிபரான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மக்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கு மாறாக இவர்கள் நடந்துள்ளனர். செய்யக்கூடாத குற்றச்செயலை செய்துள்ளனர் இந்த போலி மிதவாதிகள். இதைவிட பெரிய துரோகமோ குற்றமோ ஜனநாயகத்தில் நடந்து இருக்க முடியாது.

ஆனால் இவையெல்லாம் பொய்யென லிபரான் குழு மேலும் தெரிவித்துள்ளது.

# இந்தியச் செய்திகள்

## இலங்கை மீனவர் ஐந்து பேர் கைது

இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்த இலங்கை மீனவர்கள் 5 பேரை, இந்தியக் கடலோரக் காவல்படையினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்தனர்.

மண்டபத்திலுள்ள இந்தியக் கடலோர காவல்படையினர், தனுஷ்கோடி கடல் பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது, அப்பகுதியில் நின்று கொண்டிருந்த இலங்கைப் படகை விரைந்து சென்று பிடித்தனர்.

பின்னர், படகை சோதனையிட்டு, அதிலிருந்த 5 மீனவர்களையும் கைது செய்து மண்டபம் கடற்கரைக்கு அழைத்துச் சென்றனர்.

பிடிபட்ட இலங்கை மீனவர்களிடம் இந்தியக் கடலோரக் காவல் படைக் கொமாண்டர் சைனி விசாரணை நடத்தினார். மேலும், படகின் இயந்திரம் பழுதானதால், படகு திசைமாறி இந்திய எல்லைக்குள் வந்து விட்டனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, இலங்கை மீனவர்கள் மண்டபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# இலங்கைத் தூதரகம் மீது தாக்குதல்; டாக்டர் கிருஷ்ணசாமிக்குப் பிணை

புதுடில்லி, நவ. 26

இலங்கைத் தூதரகம் மீதான தாக்குதல் வழக்கில் டாக்டர் கிருஷ்ணசாமி உட்பட 12 பேர்களைப் பிணையில் விடுவிக்க நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் டில்லியில் சமீபத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது ஒரு சிலர் டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்குள் நுழைந்து அங்குள்ள பொருள்களைச் சேதப்படுத்தினர். இது குறித்து டில்லி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த வழக்கில் டாக்டர் கிருஷ்ணசாமி உட்பட 12 பேர் டில்லி உயர்நீதிமன்றில் ஏற்கனவே முன் பிணை பெற்றிருந்தனர். இந்த நிலையில், உயர்நீதிமன்றின் உத்தரவின் பேரில், அவர்கள் 12 பேரும் நீதிமன்றில் ஆஜரானார்கள். பின்னர் டாக்டர் கிருஷ்ணசாமி உட்பட 12 பேரும் [illegible] சொந்த பிணையிலும், அதே தொகைக்கு நபர் பிணையிலும் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

# மீன்பிடித் தொழில் சட்டத்தை முற்றிலும் கைவிட வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, நவ. 26

மீனவர்களுக்கு எதிரான, அவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் மீன்பிடித் தொழில் ஒழுங்கு முறை மற்றும் மேலாண்மைச் சட்டத்தைக் கைவிட வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

இந்தியக் கடல் எல்லைக்கு அப்பால் ஆழ்கடலில் மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறோம் என்று சொல்லி உலக வர்த்தக நிறுவனத்தின் [illegible] இணைந்து மீன்பிடித் தொழில் [illegible] மற்றும் மேலாண்மைச் சட்ட முன்வடிவு உருவாக்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் வாழ்வுரிமைக்கு எதிரான இந்தச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி, தமிழகத்தின் சார்பில் ஒட்டுமொத்தமாக குரல் எழுப்ப வேண்டும்.

இந்தச் சட்ட முன்வடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்திக் கொண்டிருக்காமல், திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

இந்தச் சட்ட முன்வடிவை மத்திய அரசு முற்றிலுமாக கைவிட வேண்டும். இல்லையெனில், இந்தக் [illegible]ரிக்கையை வலியுறுத்தி தமிழகக் கடலோர மாவட்ட மீனவர்களைத் திரட்டி பா.ம.க. சார்பில் பெரும் போராட்டம் நடத்தப்படும் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக் கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.



## ஜிவித்தனா கமலச்சந்திரன்
### சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
### புள்ளிகள் - 167

"எனது பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன், வகுப்பாசிரியர் செல்வி ச.வினோதினி ஆகியோரின் வழிகாட்டலுடனும் பெற்றோரின் அன்புடனும் கூடிய கண்டிப்பினாலும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களின் வழிகாட்டலுடனேயே நான் இப்பெறுபேற்றினைப் பெறமுடிந்தது.

எனது வீட்டில் நான் படிப்பதற்குரிய அனைத்து உதவிகளையும் அம்மா செய்ததோடு என்னுடன் தினமும் காலை 5 மணிமுதல் பாடசாலை செல்லும் வரையும் இரவில் 6-9 மணி வரை கல்வி கற்பிப்பதோடு பத்திரிகைகளில் வரும் வினாத்தாள்களைச் செய்வித்ததோடு அறிவுரைகளும் கூறி என்னை வளப்படுத்தினார்.

எனது எதிர்கால வாழ்வில் சிறந்த சட்டத்தரணியாக வந்து சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றுவதே எனது லட்சியமாகும்.

எனது இப்பெறுபேற்றிற்கு உதவிய அதிபர், ஆசிரியர்களுக்கும், கடவுளுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு, அவர்களின் ஆசி என்றும் எனது வெற்றிக்குப் பக் கபலமாக அமைய இறைவனை வேண்டுகிறேன்.



## சசிகரன் அபிரக்ஷன்
### பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
### புள்ளிகள் - 151

அதிபர், ஆசிரியர்களின் வழிநடத்தலும் பெற்றோரின் கரிசனையுமே புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற எனக்கு உந்துசக்தியாக அமைந்தது. திருமதி த.அகிலன், இ.இராஜேஸ்வரன் ஆகியோர் பாடசாலையில் எனக்குக் கற்பித்தலுடன் தேவையான வழிப்படுத்தல்களைச் செய்து உற்சாகமூட்டினர்.

எனது தந்தை சசிகரன் ஆசிரியராக, அதிலும் புலமைப்பரிசில் விசேட வகுப்புகள் எடுக்கும் ஆசிரியராக இருந்தமையால் காலையிலும், இரவிலும் எனக்கும் எனது சகபாடிகளுக்கும் கற்பிப்பார். நானும் அவர்களது உற்சாகத்தினால் கரிசனையெடுத்துப் படித்தமையால் சித்தியடைய முடிந்தது. எதிர்காலத்தில் கட்டட நிர்மாணப் பொறியியலாளராக வரவிரும்புகின்றேன்.

**சந்திப்பு : வல்லழகனார், குமரன்.**



## ஆதிமூலநாதன் ஹெனோசன்
### மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி
### புள்ளிகள் - 166

முடக்காடு, கரவெட்டியை வதிவிடமாகக் கொண்ட நான், எனது பாடசாலையில் தரம் 1இலிருந்து கல்விகற்று வருகிறேன்.

எனது பாடசாலை அதிபர் இ.இராகவன், வகுப்பாசிரியை செல்வி க.ஆனந்தநாயகி மற்றும் பெற்றோரின் கவனத்துடன் கூடிய கற்பித்தலுமே இந்த உயர் புள்ளியைப் புலமைப் பரிசில் பரீட்சையில் நான் பெற்றுப் பாடசாலையில் இரண்டாவது நிலையை அடைவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

எமக்கு பாடசாலைக் கல்வியை முடித்து மாலைநேரங்களிலும் சனி, ஞாயிறு கிழமைகளிலும் மேலதிக வகுப்புக்களை நடத்திக் கரிசனையுடன் கற்பித்த எமது அதிபர், ஆசிரியர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். எனக்குப் பிரத்தியேகமாகக் கற்பித்த திருமதி இராணி ஆசிரியருக்கும் இதயபூர்வமான நன்றிகள். எதிர்காலத்தில் பொறியியலாளராக வருவதே எனது இலட்சியம். எனது இலட்சியம் நிறைவேற எல்லாம் வல்ல தச்சை ஐங்கரனின் அருளை வேண்டி நிற்கின்றேன்.



## மிதுலா ஜோன்
### பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
### புள்ளிகள் - 143

பாடசாலையில் தரம்- 4 இல் கற்பித்த திருமதி நா.அச்சுதன், தரம்- 5இல் கற்பித்த திருமதி த.அகிலன், இ.இராஜேஸ்வரன் ஆகியோர் அன்போடும் பரிவோடும் எனக்குக் கற்பித்தனர். அதிபர் அவர்கள் அடிக்கடி எமது முன்னேற்றத்துக்கு உகந்த அறிவுரைகள் கூறுவார்.

தனியார் கல்வி நிலையத்தில் சசி ஆசிரியர் பரீட்சை நுட்பங்களை விளக்கிக் கற்பிப்பார். வீட்டில் அதிகாலை 5 மணிக்கு எழுந்தது முதல் இரவு 10 மணிக்குப் படுக்கைக்குச் செல்வது வரை பெற்றோர் என்னை அன்புடன் வழிநடத்தி, சந்தேகங்களை நிவர்த்திப்பர். இவர்கள் எல்லோருடைய ஊக்கமும் என்னை உற்சாகத்தோடு செயற்பட வைத்தமையால் என்னால் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைய முடிந்தது. எதிர்காலத்தில் மருத்துவராக வரவேண்டும் என்ற இலக்குடன் தொடர்ந்து படிக்கவிருக்கிறேன்.



## தர்சிகா குணபாலன்
### பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
### புள்ளிகள் - 143

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களின் அன்பும் அரவணைப்புமே என்னை இவ்வாறு சித்தியடைய வைத்துள்ளது. எனது தாய் ஒரு ஆசிரியையாக இருந்தமை யால் எனக்கு வீட்டில் கற்பிப்பார். பாடசாலையிலும் திருமதி த. அகிலன், திரு.இ.இராஜேஸ்வரன் ஆகியோர் ஐயந்திரிபுறக் கற்பித்தனர். நானும் அதிக கவனத்தோடும் சித்தியடைய வேண்டுமென்ற ஆர்வத்தோடும் படித்தேன். எனது வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் ஊக்கத்துடன் கற்று ஒரு மருத்துவராக வந்து மக்களுக்குச் சேவையாற்றவே விரும்புகிறேன்.

---

# 'ஷில்ப-2009' தொழில் முயற்சியாளர் விருதுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 34 பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.26

கிராமியக் கைத்தொழில்கள், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் அனுசரணையுடன் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட 'ஷில்ப-2009' தொழில் முயற்சியாளர் விருதுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 34 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர். ஜெயமனோன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டோரின் விவரங்கள் வருமாறு:

சோமசேகரன் ககனானந்தா (மைக்ரோ பி.சி.சிஸ்ரம்), இராசையா குணசேகர் (ரொப் எற), சுப்பர் பொன்னையா நடராசா (அண்ணா தொழிலகம்), சுப்பிரமணியம் நிமலேந்திரன் (நாயகி உற்பத்திகள்), சிவரட்ணம் கோபிதாசன் (கலாபா இன்டஸ்ரி), கணேசன் கௌதமன் (கௌரி பாதணிகள்), சிவதாசன் சந்திரமேனன் (ஜெனா பாதணிகள்),

இராசையா சிவராசா (எஸ்.பி.ஜீ.பாதணிகள்), தவகுலசிங்கம் தவச்செல்வன் (தவம்ஜா இரும்புத் தொழிலகம்), கந்தப்பு விமலராஜா (நவலோகம் இன்டஸ்ரி), விஸ்வலிங்கம் இராசலிங்கம் (லிங்கோ வெல்டிங்), சின்னப்பன் குருநாதன் (ஒமேகா இன்டஸ்ரி), கதிரன் கதிரமலை (சுஜீவன் தும்புத் தொழிலகம்), இளையதம்பி பாலநேமி (பாலநேமி தும்புத் தொழிலகம்).

இராசா ஜெயக்காந்தன் (அம்பாள் மரத் தொழிலகம்), இளையதம்பி இராசநாயகம் (துர்க்கா மரத்தொழிலகம்), சின்னத்தம்பி தவராசா (ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மரத் தொழிலகம்), சிவஞானசுந்தரம் ராஜ்குமார் (கரிகணன் பிறிண்டேர்ஸ்), சுப்பிரமணியம் பாஸ்கரன் ஆச்சாரி (பாஸ்கரன் சிற்பாலயம்), கந்தையா தர்மகுலசிங்கம் (கே.ரி. எம்.எண்ணெய் ஆலை), மாரிமுத்து பரமானந்தன் (பரமநாதன் மட்பாண்டம்).

தவமணி தவராசா (டயானா பிளாஸ்ரிக் இன்டஸ்ரி), சின்னத்துரை யசோதரன் (யசோ ஆட்ஸ்), வேலும்மயிலும் ரகுணதாசன் (ரகுணதாசன் பிளாஸ்ரிக் தொழிலகம்), ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் (ஜெனா கட்டடப் பொருளகம்), கந்தசாமி கோபாலசிங்கம் (கோபாலசிங்கம் கட்டடப்பொருள்), திருமதி வாமதேவன் சோமேஸ்வரி (சிற்றி கணன் காமென்ஸ்).

இராசையா நேசராசா (ஐதுஸ் தையலகம்), திருமதி சூரியகுமார் கலாதேவி (கலா காமென்ஸ்), வேலுப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா (ஈ.யூ.ரி.), சின்னத்துரை சுதர்சன் (நியூ அசோகன் அலுமினியம் பிறிங் சென்ரர்), பாலசிங்கம் பாலச்சந்திரன் (சந்திரன் தொழிலகம்), சின்னையாப்பிள்ளை ரமேஸ் (ரமேஸ் கம்மாலை), யோகப் யோகராசா (யோகராஜா இலகு பொறியியல்). (50)

# தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க இலவச கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

## இலங்கை வங்கி நடத்துகின்றது

யாழ்ப்பாணம், நவ.26

இலங்கை வங்கி இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இலவச கருத்தரங்கையும் பயிற்சிப் பட்டறையையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தத் தீர்மானித்துள்ளதாக வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் தெரிவித்தார்.

இலங்கை வங்கியில் கணக்கினைத் தற்போது பேணுபவர்களும் இதுவரை கணக்கினை ஆரம்பிக்காதவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றலாம் எனவும் மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளிலோ அல்லது உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் கூறினார்.

தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களும் தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையலாம்.

இக்கருத்தரங்கை நடத்த கொழும்பிலிருந்து நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்கள் வருகை தரவுள்ளனர்.

பயிற்சியாளர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறும் உதவிப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

# முன்பள்ளி புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.26

தொட்டிலடி கண்ணன் முன்பள்ளி ஹரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தினால் மீளப் புனரமைக்கப்பட்டு நவீன விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணியின் வேண்டுகோளுக்கு இணங்க மேற்படி முன்பள்ளி புனரமைக்கப்பட்டு கடந்த வாரம் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது.

ஊஞ்சல், சீ-சோ, இராட்டினம் என்பன வழங்கப்பட்டுள்ளதுடன் சகல வசதிகளும் கொண்ட மலசலகூடம் புதிதாக நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகச் சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்துள்ளார். (50-302)

# வீதியைப் புனரமைத்தமைக்கு மக்கள் பாராட்டு

யாழ்ப்பாணம், நவ.26

நாற்பது வருடங்களாகத் திருத்தப்படாமல் இருந்த வி.எச்.லேன், வஸந்தபுர வீதி, வலி.கிழக்கு புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் வி.நடராசாவின் ஏற்பாட்டில் நிக்கொட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் போக்குவரத்து நலன் கருதி மேற்படி வீதியைப் புனரமைத்துத் தந்த ஊழியர்கள் அனைவருக்கும் அக்கிராம மக்கள் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளனர். (201)

# மாணவர்களுக்கு காலணிகள்

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் இணைந்துள்ள மீள்குடியேறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சாந்திகம் நிறுவனம் 30 சோடி காலணிகளை வழங்கியுள்ளது.

இப்பாடசாலையில் கல்விபயிலும் மீளக் குடியேறிய குடும்பத்து மாணவர்களுக்கு சாந்திகம் நிறுவனத்தால் நடத்தப்பட்ட உள ஆற்றுப்படுத்தல் நிகழ்வில் காலணிகள் வழங்கப்பட்டதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (201-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்த இந்தியா தேவையான உதவிகளை வழங்கி வருகிறது

## யாழ். மாநகர சபையில் இந்தியத் தூதுவர் உரை

யாழ்ப்பாணம், நவ. 26



வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதிலும் அந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதிலும் இந்தியா கூடுதலான உதவிகளை வழங்கி வருவதாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் கூறினார்.

யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இந்தியத் தூதுவருக்கு மாநகரசபையில் வரவேற்பு அளிக்கப்பட்டது

அங்கு அசோக் கே. காந்த் மேலும் பேசும் போது கூறியதாவது:-

நான் பதவியேற்றதும் முதன் முதலில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததில் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவும் இலங்கையும் நீண்டகாலமாகவே நட்புறவுடன் இருந்துவருகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக இந்தியா பெரிதும் உதவி வருகின்றது. கண்ணி வெடிகளை அகற்றுவதற்கென ஏழு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் வைத்திய மாணவர்கள் மிகவும் திறமையானவர்கள் என்பதை அறிந்துள்ளேன். யாழ்ப்பாண மக்கள் நிறைந்த அறிவு மிக்கவர்கள். யாழ்.மாநகரசபை வழங்கியுள்ள கோரிக்கைகள் தொடர்பாகவும், யாழ் ஆயுள் வேதக் கல்லூரி குறித்தும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் கவனம் செலுத்துவேன் - என்றார்.

மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா உரையாற்றுகையில் அழிந்து போன மாநகரசபைக் கட்டடம், திறந்த வெளியரங்கு ஆகியவற்றையும் திருப்பவும் அமைக்கவும், நகரின் பொருளாதார வளத்தை உயர்த்தக் கூடியவகையில் தொழிற்பயிற்சிகளை வழங்கவும் இந்தியா முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மாநகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ்.கனகரத்தினம் உரையாற்றுகையில்:-

எமது மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் தொப்புள் கொடியுறவும் கலாசார ஒருமைப்பாடும் உண்டு. இந்தியாவுடன் நட்புறவுடன் இருந்து வந்தவர்கள் நாங்கள். துரதிஷ்டவசமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் எமது மக்களுக்கு நிவாரண உதவிகள், குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நிதி உதவிகளை இந்தியா வழங்கி வருகின்றது. இந்த மக்கள் மீளக்குடியமர வேண்டும் என்பதில் இந்தியா கொண்டுள்ள அக்கறையை மதிக்கிறோம். எனினும் வழங்கப்படும் நிதி உதவிகள் போதாதிருப்பதால் மேலும் கூடு தலான உதவிகளை வழங்கி எமது மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவும் கண்ணி வெடிகளை துரிதமாக அகற்றவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றார். (50-111)

# சுயதொழிலுக்கான கொடுப்பனவு பெறவுள்ள 31 பேரின் விவரம்

## நாளை தென்மராட்சி செயலகத்துக்கு வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.26

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உடைய 31 பேருக்கான சுயதொழில் கொடுப்பனவுக்கான நிதி பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளது.

பயனாளிகள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலகச் சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தலா 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறவுள்ள அந்த 31 பேரினதும் விவரம் வருமாறு:-

சி. ஜெயகாந்தன் (நாவற்குழி), சுந்தரம் கறுப்பி (கரம்பைக்குறிச்சி), க. முருகானந்தம் (கச்சாய் தெற்கு), இ. நவீன் குமார் (நாவற்குழி தெற்கு), சி. சிங்கராசா (கச்சாய் வீதி, கொடிகாமம்), சி. நிரோஷன் (உப்புக்கேணி, சாவகச்சேரி), சி.நல்லையா (நாவற்குழி தெற்கு), பொ.பிரகாஸ் (சாவகச்சேரி), சு. குணரத்தினம் (நாவற்குழி), ச. சிவலிங்கம் (நாவற்குழி), வே.நவரத்தினம் ( நாவற்குழி), ரதனா ராஜாஜி (நுணாவில் மேற்கு), தா. வள்ளிப்பிள்ளை (இயற்றாலை), பொ. தவராசா (மீசாலை வடக்கு), செ.சிங்காரசிவம் (மந்துவில் மத்தி), கு.நந்தகுமாரன் (மட்டுவில் தெற்கு), பா. கஜேந்திரன் (கற்குழி, சாவகச்சேரி), பொ. கமலம் (கச்சாய் வீதி, கொடிகாமம்), தி.செல்லம்மா (கரம்பைக்குறிச்சி), யோ.சாவித்திரி (மட்டுவில் வடக்கு), து.அருந்தவமலர் (மட்டுவில் மத்தி), கா.மாலினி (மந்துவில் மேற்கு), இ. ரேணுகாதேவி (மிருசுவில் வடக்கு), சோ. யோகரத்தினம் (கற்குழி வடக்கு), க.ஞானகணேசன் (கற்குழி ஒழுங்கை), மு.இலட்சுமிப்பிள்ளை (தாவளை), த.கஜனி (கைதடி தெற்கு), இ.முருகன் (கைதடி கிழக்கு), ப. புவனேஸ்வரி (உசன்), அ.விமலாதேவி (கல்வயல்), அ.ஆனந்தராஜா (கல்வயல்). (ஒ-207)

# சரத் பொன்சேகாவிடம் சட்டவிரோதமாக வாகனங்களும் படை வீரர்களும்

## இப்படிக்கூறுகிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு.நவ.26



முன்னாள் இராணுவத் தளபதியும், முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகா சட்ட விரோதமாக 110 பாதுகாப்புப் படையினரையும், 26 வாகனங்களையும் தம்வசம் வைத்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

அவரிடம் உள்ளவர்களில் 103 இராணுவ வீரர்களும், 07 இராணுவ அதிகாரிகளும் அடங்குகின்றனர். ஜெனரல் சரத் பொன்சேகாவால் கோரப்பட்ட எண்ணிக்கையிலான படைவீரர்கள் அவரின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் ஐந்து பெண் படை உறுப்பினர்கள் மட்டும் வழங்கப்படவில்லை. இதேவேளை கூடுதலாக அவரிடம் தங்கியுள்ள ஏனைய வீரர்களை அவரவரின் சொந்தப்படையணிக்கு திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படும் கூற்று அடிப்படையற்றது எனக்கூறினார்.

பாதுகாப்புப்படையின் உயர் அதிகாரி யாராவது ஒருவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவுவதாக புலனாய்வுப் பிரிவால் அறிவிக்கப்பட்டால், உடன் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனக்குறிப்பிட்ட அவர் இதுவரை இவ்வாறான தகவல் எதுவும் கிட்டவில்லை என மேலும் தெரிவித்தார்.

# விசேட கல்விப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.நவ.26

கைதடி நவீல்ட் பாடசாலையும், யாழ். தேசிய கல்வியற் கல்லூரியும் இணைந்து நடத்திய விசேட கல்வித்துறை முகிழ் நிலை ஆசிரியர்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கட்டுரைப்போட்டி *(முதலாம் வருடம்)*

முதலாம் இடம்- வ.உமா, ரா.விஜயநிதி, இரண்டாம் இடம்- க.பிரகாசினி, சி.சிவாநந்தினி, மூன்றாமிடம்- சி.வினோதரன்,

*இரண்டாம்வருடம்*

முதலாமிடம்-ந.கோபு, இரண்டாமிடம்- ம.அனோஜா

சைகைமொழிப்போட்டி *(முதலாம் வருடம்)*

முதலாமிடம்- க.பிரியகாசினி, இரண்டாமிடம்- சி.துசாந்தி,மூன்றாமிடம்- ம.தனேஸ்வரன்.

*இரண்டாம்வருடம்*

முதலாமிடம்- சு.சாருமதி, இரண்டாமிடம்- யோ.சதீஸ்னி, மூன்றாமிடம்- க.சிந்துஜா, சி.ரேனுகா

கவிதைப்போட்டி-*(முதலாம் வருடம்)*

முதலாமிடம்-ரா.விஜயநிதி, இரண்டாமிடம்- சி.மாணல், மூன்றாமிடம்- பா.ரஜிந்தன்

*இரண்டாம்வருடம்*

முதலாமிடம்- ஜெ.கொலின்ஸ்ரன், இரண்டாமிடம்- ம. அனோஜா, மூன்றாமிடம்-கு.தர்மகுமார், ந.கோபு

பிறைல் மொழிப் போட்டி *(முதலாம் வருடம்)*

முதலாமிடம்-சி.துசாந்து, இரண்டாமிடம் -இ.ஜெயமதன், மூன்றாமிடம்- இ.விஜயநிதி

*இரண்டாம்வருடம்*

முதலாமிடம்- க.சுரேந்திரன், இரண்டாமிடம்- சி.ரேணுகா, மூன்றாமிடம் - ம.அனோஜா, த.நிசாந்தன். (ஒ-201)

# ஸ்கந்தாவில் இரு தினங்கள் உடற்கல்வி பயிற்சி முகாம்

திருநெல்வேலி, நவ.26

வலிகாமம் வலய பாடசாலை முதன்மை நிலை 2 மாணவர்களுக்கான உடற்கல்வி பயிற்சி முகாம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

இந்த உடற்பயிற்சி முகாமில் தரம் 3, தரம் 4 இல் கற்பிக்கும் பொருத்தமான ஓர் ஆசிரியையும் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும், இதில் பங்குபற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உடற்பயிற்சிக்குரிய சீருடையுடன் சமுகமளிக்குமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உடுவில், தெல்லிப்பழைக் கோட்ட பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் சனிக்கிழமையும், சங்கானை சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இந்தப் பயிற்சி முகாம் காலை 8 மணி முதல் ஒரு மணிவரை நடைபெறும். (ஒ-125)

# முச்சக்கர வண்டி அன்பளிப்பு

வண்ணை,நவ.26

வன்னியில் யுத்த அனர்த்தங்களால் கால்கள் இரண்டும் பாதிக்கப்பட்ட உயர்தர வகுப்பு மாணவி ஒருவருக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த முச்சக்கர வண்டி ஒன்றை வழங்கியுள்ளது.

அத்துடன், யாழ்.பல்கலைக்கழக மாணவன், மாணவி மற்றும் பாடசாலை மாணவி ஒருவர் உட்பட மூவருக்கு 30 ஆயிரம் ரூபா செலவில் சைக்கிள்களும் வழங் கப்பட்டன. (ஒ-160)

# சுழிபுரம் பிரதான வீதியின் அவலம்

சுழிபுரம், நவ.26

சுழிபுரம், சத்தியக்காட்டு சந்தைக்குச் செல்லும் சுழிபுரம் பிரதான வீதிச் சந்தி வெள்ளக் கிடங்காகி மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் இருக்கின்றது.

அதே சமயம் விபத்துக்களும் அடிக்கடி நடைபெறுகின்றன.

வீதியில்தேங்கி நிற்கும் சேறும் சகதியும் கூடிய நீர் வாகனங்கள் செல்லும் போது பாதசாரிகள் மீது சிந்தி வீசப் படுவதால் அவர்களின் உடைகள் அலங்கோலப் படுத்தப்படுகின்றன.

இந்தச் சீர்கேடான நிலைமையைக் கவனித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஒ-28)

# வயல்களில் தேங்கியுள்ள நீரை வெளியேற்ற நடவடிக்கை

கைதடி,நவ.26

கைதடி வடக்கில் பெய்த கடும்மழையினால் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அப்பகுதி விவசாயிகள் 'நியாப்' திட்ட சமூக வலுவூட்டாளர் வை.ரவிசங்கரிடம் நீரை வெளியேற்றும் நடவடிக்கை பற்றிச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

உடனடியாக அவர் எடுத்த முயற்சியின் பலனாக 'நியாப்' பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.விசுவலிங்கம் நேரடியாக வருகை தந்து நெற்செய்கை பண்ணப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு வெள்ள நீரை அகற்ற நடவடிக்கை எடுத்திருப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-288)

# தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் ஆறு அம்சக் கோரிக்கைகள் பரிசீலனை

யாழ்ப்பாணம், நவ.26

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவரினால் முன்வைக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் செயலாளர் அன்ரன் பெரேரா இதற்கான அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை நேரடியாகச் சென்று சம்மேளனத் தலைவர் கையளித்திருந்தார்.

இந்த மகஜரில் விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்சி னைகளுக்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் அதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சின் செயலாளரை ஜனாதிபதியின் செயலாளர் அன்ரன் பெரேரா பணித்துள்ளார்.

இதேவேளை, வடக்குமாகாண சிறுவர் வைத்தியசாலை புனரமைப்பு தொடர்பாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமியுடன் ஜனாதிபதியின் செயலாளர் தொடர்பு கொண்டுள்ளதாகவும் யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியாருக்கு [illegible] தத்தில் தெரி[illegible] (ஒ-302)

# கற்கள் பறித்து நாளாகிவிட்டன; வீதி எப்போது திருத்தப்படும்

## உரும்பிராய் கிழக்கு மக்கள் ஆதங்கம்

யாழ்ப்பாணம், நவ.26

உரும்பிராய் கிழக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை வீதியின் திருத்த வேலைக்காக கற்கள் பறிக்கப்பட்டு நான்கு மாதங்களாகியும் இதுவரை திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று அப்பிரதேச மக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கையின் பேரில் இவ்வீதி திருத்த வேலைக்காக நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் அரச அதிகாரிகளின் அசமந்தப் [illegible] திருத்த வேலைகள் தொடங்கப்படாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தற்போதைய மழை காலத்தினால் இவ்வீதியால் பாரமான பொருள்களை ஏற்றிச் செல்வதில் பெரும் இடர்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, நிதியாண்டு முடியும் தறுவாயில் உள்ளதனால் இவ்வீதி திருத்தி முடிக்கப்படுமா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் உடனடி நடவடிக்கை எடுத்து இவ்வீதியின் திருத்த வேலைகளைச் செய்து முடித்து உதவுமாறு வேண்டுகின்றனர். (ஒ-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ் அரசியல்வாதிகளின் கொலைகளால் இரு மாகாணங்களில் நெருக்கடி நிலை பிரகடனம்!

## பொலிஸ், இராணுவம், படைகள் குவிப்பு

மணிலா, நவ. 26

பிலிப்பைன்ஸில் அரசியல் கட்சியினர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பலியானோரின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது. இதையடுத்து, 2 மாகாணங்களில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸில் அடுத்த வருட மே மாதம் மாகாண ஆளுநர் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் மகுயின்டாநாவ் மாகாணத்தில் உள்ளூர் அரசியல் பிரமுகர் இஸ்மாயில் மன்குடாடாட்டு என்பவர் போட்டியிடுகிறார்.

இவரது சார்பில் திங்கட்கிழமை வேட்பு மனுத்தாக்கல் செய்ய இவரது மனைவி ஜெனாலின், ஆதரவாளர்கள், 50 சட்டத்தரணிகள் ஆகியோர் உட்பட 100 இற்கும் மேற்பட்டோர் வாகனங்களில் ஊர்வலமாகக் கிளம்பினர். அவர்களுடன் செய்தி சேகரிக்க பத்திரிகையாளர்கள் 12 பேரும் சென்றனர்.

வாகனங்கள் காட்டு வழியாகச் சென்றபோது, 100 பேர் கொண்ட ஒரு மர்மக் கும்பல் துப்பாக்கிமுனையில் அந்த வாகனங்களை வழிமறித்து அனைவரையும் கடத்திச் சென்றது. கடத்தப்பட்டவர்கள் கதி என்னவானது என்பது தெரியாமல் இருந்தது.

கடத்தல் கும்பலை இராணுவத்தினரும், பொலிஸாரும் வலைவீசி தேடி வந்தனர். இந்த நிலையில் கடத்தப்பட்ட 46 பேரது சடலங்கள் மலைப்பகுதியின் குழிகளிலும், புதர்களிலும் சிதறிக் கிடக்கக் கண்டறியப்பட்டன. இவர்களில் ஜெனாலின் உட்பட 14 பேர் பெண்கள் ஆவர்.

ஆயுதம் தாங்கிய மர்மக் கும்பல், பலரின் தலையைத் துண்டித்து கொலை செய்துள்ளது. கொல்லப்பட்ட பலரது சடலங்களில் பலத்த இரத்தக் காயங்களும் காணப்பட்டன. கொலையுண்ட 46 பேரது சடலங்களும் செவ்வாய்க்கிழமை அதிகாலை மீட்கப்பட்டன.

இதற்கிடையே கடத்தப்பட்டவர்களில் 4 பேர் தப்பிவிட்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. கடத்தப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்களில் கொலையுண்டோரைத் தவிர ஏனையோரின் கதி என்னவாயிற்று என்று இன்னும் தெரியவில்லை. அவர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதனால் பலியானோரின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம்.

இந்தப் பயங்கரச் சம்பவத்தையொட்டி பிலிப்பைன்ஸின் மகுயின்டாநாவ், குதராத் ஆகிய மாகாணங்களிலும், கொட்டபட்டா நகரிலும் கலவரம் வெடித்தது. இதை அடக்குவதற்காக இந்த 2 மாகாணங்களிலும், கொட்டபட்டா நகரிலும் நெருக்கடி நிலையை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா மகாபகல் அரோயா பிரகடனப்படுத்தியுள்ளார். மேலும் இந்த மாகாணங்களில் இராணுவமும், பொலிஸ் படையும் குவிக்கப்பட்டுள்ளன.

''2 மாகாணங்களிலும் பதற்ற நிலை நிலவுவதால், அதைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அங்கு கலவரம் பெரிதாக வெடித்து விடக்கூடாது என்பதற்காகவும் அவசரநிலை பிரகடனம் அறிவிக்கப்பட்டுள்ளது'' என்று ஜனாதிபதி குளோரியா தெரிவித்துள்ளார்.

தெற்கு பிலிப்பைன்ஸில் மன்குடாடாட்டு என்னும் பழங்குடியினரும், அம்பாட்டுவான் என்னும் பழங்குடியினரும் பெருமளவில் வசிக்கிறார்கள். ஆளுநர் தேர்தல் நடக்கும் போதெல்லாம் இவர்களிடையே பயங்கர மோதல் மூள்வதுண்டு. இவர்களுக்கிடையிலான அரசியல் பகை காரணமாக இந்தப் படுகொலைச் சம்பவம் நடந்துள்ளது.

# இத்தாலியில் விமான விபத்து: 5 விமானப்படை அதிகாரிகள் பலி!

ரோம், நவ. 26

இத்தாலி விமானப் படையின் பயிற்சி விமானமொன்று தீப்பற்றி விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் ஐவர் உடல் கருகி உயிரிழந்தனர்.

விமானப் படை அதிகாரிகளான புருணோ க வெசானா, ஜியான்லுகா மின்சினோ, சல்வடோர் பெடில்லோ, மங்ரிஷியோ, ஜியான் லுகா லோரிஸ் ஆகியோரே உயிரிழந்த வர்களாவர்.

பைசா நகரத்திலிருந்து திங்கட்கிழமை இரவு இந்த பயிற்சி விமானம் புறப்பட்டது. எனினும், கிளம்பிய வேகத்திலேயே விமானத்தில் தீப்பற்றிக்கொண்டது. அதனால் தீப்பிழம்பாக மாறிய விமானம் தரையில் விழுந்து நொறுங்கியது என அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இத் தீவிபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை. இவ்விபத்து தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## உலக அரங்கில்

# ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, நவ. 26

ஜப்பானின் வடகோடியிலுள்ள ஹொக்காய்டோ பகுதியில் நேற்று மதியம் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.8 புள்ளிகளாகப் பதிவானது. இந் நிலநடுக்கத்தால் பாதிப்பு ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை. ஆழிப்பேரலை எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 2.26 மணிக்கு ஹொக்காய்டோ கிழக்கு கடற்கரையிலிருந்து 30 கி.மீ. தொலைவில் கடலுக்கடியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என ஜப்பானிய பூகம்ப ஆய்வு மையத் தகவல் தெரிவிக்கிறது.

# வட இங்கிலாந்தில் கடும் மழையால் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு!

லண்டன், நவ. 26

ஸ்கொட்லாந்தினதும், இங்கிலாந்தினதும் வட பகுதிகள் வரலாறு காணாத மழை வெள்ளத்தால் வெகுவாக பாதிப்படைந்துள்ளன. பிரிட்டனில் கடும் மழையால் பல நகரங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த கோடை காலத்தில் பெய்த மழை 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இருந்தது. கடந்த 2007 இல் ஏற்பட்ட வெள்ளத்தால் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளும், அலுவலகங்களும் சேதமடைந்தன.

கடந்த வாரம் ஆரம்பமாகிய மழையால் ஸ்கொட்லாந்தினதும், இங்கிலாந்தினதும் வட பகுதிகள் வெகுவாக பாதிப்படைந்துள்ளன. பல பகுதிகள் நீரில் மூழ்கிக் கிடக்கின்றன.

கம்ரியாவிலுள்ள காக்கர்மவுத், தெர்வன்ட், வொர்க்கிங் டவுன் ஆகிய நகரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஆற்று வெள்ளம் கரைகளை மேவி தெருக்களில் புகுந்ததால் ஏராளமான மக்கள் தரை தளத்தை விட்டு மாடிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஏராளமான இடங்களில் பாலங்கள் உடைந்துள்ளன. தண்ணீர் காடாகக் காட்சி அளிக்கிறது. வொர்கிங்டன் பகுதியில் ஒரேநாளில் 314 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இங்கிலாந்து வரலாற்றிலேயே இல்லாத ஒன்று.

நவம்பர் மாதம் முழுக்க பொழியவேண்டிய மழை ஒரே நாளில் கொட்டித் தீர்ந்துள்ளது என வானிலைமைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்க ஹெலிகொப்டர்களும் படகுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

# பசுபிக் தீவான டோங்காவில் பூகம்பம்

சிங்கப்பூர், நவ. 26

சிங்கப்பூர் அருகே தெற்கு பசுபிக் தீவான டோங்காவில் செவ்வாய்க்கிழமை சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.8 புள்ளிகளாகப் பதிவானது. இந்த பூகம்பத்தால் ஆழிப்பேரலை பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

டோங்கா தலைநகரான நுகுஅலோஃபாவிலிருந்து 195 கிலோ மீற்றர் தொலைவில் இந்தப் பூகம்பம் மையம் கொண்டிருந்தது என அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது

கடந்த 100 ஆண்டுகளில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டு ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட தென் பசுபிக் நாடுகளில் டோங்காவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

கலிபோர்னியாவிலும் செவ்வாய்க்கிழமை வெவ்வேறு இடங்களில் நில நடுக்கங்கள் ஏற்பட்டன. சேதாரம் எதுவும் ஏற்பட்டதற்கான தகவல் வெளியாகவில்லை.

மேற்கு சான்டீகோவில் சான்க்ளிமென்டி தீவிலிருந்து தென்கிழக்கே 23 மைல் தொலைவில்கடலுக்கடியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 3.9 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது.

உள்ளூர் நேரப்படி காலை 6.34 மணிக்கு இந்த நிலநடுக்கம் பதிவானது என அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் அதிகாலை 3.59 இற்கு 3.7 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் சாக்ரமென்டோ அருகே ஏற்பட்டுள்ளது. கெய்ஸருக்கு இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள கோப் என்ற இடத்தினருகே இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என்றும் அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

# இஸ்ரேலிய 'ஹெலி' விபத்து: நால்வரின் சடலங்கள் மீட்பு

டெல்அவிவ், நவ. 26

சிவிலியன் ஹெலிக்கொப்டரொன்று இஸ்ரேலின் கரைப் பிராந்தியத்துக்கு அப்பால் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இதில் நால்வர் கொல்லப்பட்டனர்.

சிரோனிங் கரைக்கப்பால் இடம்பெற்ற இவ் விபத்தில் மரணித்த நால்வரின் சடலங்களும் மீட்கப்பட்டன. இவர்களில் இரு உல்லாசப் பயணிகளும், இரு விமானிகளும் அடங்குவர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

விபத்து சம்பவித்த இடத்தில் பிரிட்டிஷ் கடவுச்சீட்டு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை. இதுதொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

நெட்டானியா நகருக்கண்மையிலுள்ள கடற்பரப்பில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது. தலைநகரான டெல்அவிவிலிருந்து வடக்கே, 30 கிலோ மீற்றர் (18 மைல்) தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது. ஹெலிக்கொப்டரின் சிதைந்த பாகங்கள் சுழியோடிகளால் மீட்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

# பாகிஸ்தானில் இராணுவத் தாக்குதல்; 15 தீவிரவாதிகள் பலி; 6 பேர் கைது!

இஸ்லாமாபாத், நவ. 26

பாகிஸ்தானில் இராணுவம் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் பதுங்கியுள்ள தலிபான்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது. இதையடுத்து, பாகிஸ்தான் இராணுவத்தினர், பழங்குடிகள் அதிகளவில் வசிக்கும் வசீரிஸ்தான் பகுதியில் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையில் தீவிரவாதிகள், பெஷாவர் உள்ளிட்ட நகரங்களில் தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தி வருகிறார்கள். பெஷாவர் அருகே உள்ள கைபர் பகுதியை, ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவச் சிப்பாய்கள் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பாரா என்ற பகுதியில் 15 தீவிரவாதிகள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. குர்குரே என்ற இடத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடங்களையும், இராணுவத்தினர் அழித்தனர். தீவிரவாதிகள் பயன்படுத்திய 12 கார்களும் அழிக்கப்பட்டன.

கடந்த சில தினங்களாக தீவிரவாதிகள் பள்ளிக்கூடங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி வந்தனர். ஞாயிற்றுக்கிழமை இரவும் ஒரு பள்ளி மீது தாக்குதல் தொடுத்தனர். இதையடுத்து, இராணுவம் லஷ்கர்-இ-இஸ்லாம் தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதலை தொடங்கியது. ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தரைப் படையுடன் சேர்ந்து விமானப்படை ஹெலிகொப்டர்களும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

லஷ்கர்-இ-இஸ்லாம் தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் தொடங்குவதற்கு முன்பாக கைபர் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தேடுதல் வேட்டை முடியும்வரை பொதுமக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியேறவேண்டாம் என்றும் வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது.

இதனால் கைபர் பகுதியில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் முடங்கிக் கிடக்கின்றனர்.

இதுவரை நடத்திய தேடுதல் வேட்டையில் தீவிரவாதிகளிடமிருந்து இராணுவத்தினர் ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர் என அங்கிருந்து வரும் அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களாகவே பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் கைகள் ஓங்கியுள்ளன. பெஷாவர் பகுதியில் மட்டும் ஆதிக்கம் செலுத்தி வந்த அவர்கள் தற்போது நாட்டின் ஏனைய பகுதிகளிலும் துணிகரமாக ஊடுருவி நாட்டை சீர்குலைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலும் பாதுகாப்பு நிலைகளை குறி வைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

# ஹிட்லர் பயன்படுத்திய கார் ரூபா 28 கோடிக்கு விற்பனை

பேர்லின், நவ. 26

ஜேர்மனியின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்தவர் அடோல்ப் ஹிட்லர். இரண்டாம் உலகப் போரின் போது இவர் உலகையே அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டார். இவர் தனக்குப் பிடித்தமான ஒரு 'பென்ஸ்' ரகக் கார் வைத்திருந்தார்.



இதற்கு மெல்சிட்ஸ் பென்ஸ் என்று பெயர். காரின் முன்பகுதி திறந்த நிலையில் இருக்கும்.

கருநீல நிறம் கொண்ட இக்காரில் இரண்டாம் உலகப் போரின்போது இவர் வலம் வந்தார். இக்காரை இந்திய நணயப்படி 28 கோடி ரூபாவுக்கு (40 இலட்சம் யூரோ) ஒரு ரஷ்ய கோடீஸ்வரர் விலைக்கு வாங்கியுள்ளார். விலைக்கு வாங்கிய அந்த கோடீஸ்வரரின் பெயர் வெளியிடப்படவில்லை. இது குறித்து ஜேர்மனியில் பரபரப்பாக பேசப்படுகிறது.

# தாய்லாந்து முன்னாள் பிரதமர் காலமானார்

தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் சமக் சுந்தரவெஜ் (வயது 74) செவ்வாய்க்கிழமை காலமானார். நுரையீரல் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த இவர் பாங்கொக்கில் உள்ள முருங்கிராட் சர்வதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். நோய் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

சமக் சுந்தரவெஜ் சிறந்த அரசியல்வாதி. அதுமட்டுமின்றி, தொலைக்காட்சிகளில் சமையல் நிகழ்ச்சிகள் மூலம் மிகவும் பிரபலமானவர். தாய்லாந்தின் பிரதமராக இவர் சிறிது காலமே பதவி வகித்து வந்துள்ளார்.

கடந்த ஆண்டு அமெரிக்காவிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய சுந்தரவெஜ் தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டார். எதையும் வெளிப்படையாகப் பேசுவது இவரது பழக்கம். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தீவிர அரசியலில் ஈடுபட்ட இவர், கம்யூனிஸ கொள்கைகளுக்கு எதிரான போக்கை மேற்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 84ஆவது அவதாரதின நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

பாபாவின் திருவுருவப்படம் ஊஞ்சலில் வைக்கப்பட்டிருப்பதனையும், நிகழ்வில் கலந்துகொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

யாழ்.மாவட்ட நீதிபதியும் வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையங்களின் இணைப்புக்குழுவின் தலைவருமான இ.வசந்தசேனன் சிறப்புரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் யோகா ஆசிரியர் மா.இரட்ணசோதி உரையாற்றுவதை நாலாவது படத்திலும் நிலையத் தலைவர் ஆ.ஜெகநாதன் தலைமையுரை ஆற்று வதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: கே.கே. தாஸன்)

# யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் இணுவில் பாலாவோடையில் கைதானார்!

## விசாரணைக்காக கொழும்புக்கு கூட்டிச் செல்லப்படலாம்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணம் முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் (எஸ்.பி) கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இணுவில் பகுதி யைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி அளித்துள்ளது.

கொழும்பிலிருந்து வந்த இரகசியப் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பிரஸ்தாப சந்தேகநபரை இணுவில் பாலாவோடை பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்துக் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் இடம் பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்பட்டே இவர் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது. சந்தேக நபரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு சி.ஐ.டி பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன் கூட்டிச் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. கைதான சந்தேக நபர் வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து அண்மையில் குடாநாட்டுக்கு வந்தவர் என்று கூறப்படுகின்றது. (ஒ-68)

# சாதாரண பரீட்சார்த்திகளுக்கு விஞ்ஞானபாடக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.26

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சார்த்திகளுக்கான செய்முறை விளக்கத்துடனான விஞ்ஞான பாடக் கருத்தரங்கு ஆனைப்பந்தியிலுள்ள 'நியூ எடியுகேஷன் வேள்ட்' கல்வி நிலையத்தில் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவர்களைக் கருத்தரங்களில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(அ-7)

# எனக்கு எதிராக மக்களைத் திருப்ப மஹிந்தவும் கோத்தபாயவும் முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, நவ. 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளரும் மற்றும் சிலரும் பாதுகாப்பு அமைச்சினரும் தனக்கு எதிராக செயற்படுகின்றனர் எனப் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியுள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

மக்களைத் தனக்கு எதிராகத் தூண்டி விடும் முயற்சி இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்திச் சேவைக்கு செவ்வாய்க்கிழமை அளித்துள்ள பேட்டியில் முதற்தடவையாகப் பகிரங்கமாகக் கருத்துகளை வெளியிட்டுள்ள ஜெனரல் பொன்சேகா மேலும் தெரி வித்துள்ளவை வருமாறு:-

எனது வாழ்வின் முக்கிய தருணங்களாக அடுத்த 48 மணித்தியாலங்கள் அமையப் போகின்றன.

இன்று எனது எதிர்காலத் திட்டத்தினை அறிவிப்பேன். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா, பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதா என்பது உட்பட அனைத்து விடயங்கள் குறித்தும் வியாழக்கிழமை அறிவிப்பேன்.

கடந்த வாரம் பதவியை இராஜிநாமாச் செய்தபின்னர் உடனடியாக என்னை எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து வெளியேறுமாறு கேட்டுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்பு அமைச்சினரும், அதன் செயலாளர் ஆகியோரும் எனக்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

**மக்களை எதிராகத் தூண்டி விடுகின்றனர்**

அவர்கள் எனக்கு எதிராக அரசியல் ரீதியாக மாத்திரம் செயற்படவில்லை. நான் ஊடகங்களைச் சந்திப்பதையும் அவர்கள் விரும்பவில்லை.

விடுதலைப் புலிகளை அழித்ததற்கான பெருமையை தாங்கள் எடுத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

அவர்கள் மக்களை எனக்கு எதிராகத் தூண்டிவிட முயல்கின்றனர். ஓரளவிற்கு இதில் வெற்றி பெற்றுள்ளனர்.

நவம்பர் 22 ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து என்னை வெளியேறுமாறு கேட்டனர்.

இதுவரை வீடொன்றை என்னால் பெற முடியவில்லை. இதன் காரணமாகவே எனக்கு விருப்பமில்லாத போதிலும் இந்த வீட்டில் தங்கியிருக்கிறேன்.

என்னை வெளியார் போன்று நடத்துகிறார்கள்.ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனது பாதுகாப்பைக் குறைத்த பின்னர் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் எனக்கு 600 பேர் பாதுகாப்பு அளித்தனர். பின்னர் அதனை 25 ஆகக் குறைத்தனர். நான் எதிர்ப்புத் தெரிவித்த பின்னர் 70 ஆக அதிகரித்துள்ளனர்.

எனது வீட்டைப் பாதுகாப்பதற்கு 70 பேர் போதாது. எனது அலுவலகத்திற்கும் ஆள்கள் தேவை. பொது நிகழ்வுகளுக்குச் செல்லும் போது எனக்கு மேலதிக பாதுகாப்பு அவசியம்.

இராணுவத் தளபதி என்ற வகையில் இந்திய உயர் அதிகாரிகளுடன் நான் பல தடவைகள் தொடர்பு கொண்டிருக்கிறேன்.

இரு நாடுகளுக்கும் இடையில் நல்ல உறவுகள் உள்ளன. இந்தியாவை நான் அதிகளவு மதிக்கின்றேன். நான் எப்போதும் ஊடக சுதந்திரத்தை மதிக்கிறேன்.

ஊடகங்கள் மக்களைப் பிழையாக வழி நடத்திய தருணங்களில் நான் அவர்களுடன் பேசி அதனைத் திருத்தினேன். நான் ஊடகங்களுக்கு எதிரானவன் எனச் சொல்வது வெறும் பிரசாரமாகும்.

இலங்கையர்கள் அனைவருக்கும் ஜனநாயக சுதந்திரத்தை வழங்குவதே எனது முதல் விடயமாக அமையும். இலங்கை ஊழலற்ற நாடாக மாறவேண்டும். நீதியான சமூகம், ஊடக சுதந்திரம், மத ஜனநாயகம், அயல் நாடுகளுடன் நல்லுறவு என்பவையும் முக்கியம். (அ-சி)

# நவீல்ட் பாடசாலையில் விசேட கல்விப் போட்டி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

உலக வலுவற்றோர் தினத்தை முன்னிட்டு கைதடி நவீல்ட் பாடசாலையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விசேட கல்வித்துறை முகிழ்நிலை ஆசிரியர்களுக்கிடையில் நடத்திய விசேட கல்விப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை கைதடி நவீலட் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பரிசில்கள் வழங்குவதற்கு அனுசரணை வழங்கிய சாவகச்சேரி ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி முகாமையாளர் பி.அருள்பிரகாசமும் மற்றும் தென்மராட்சி வலய விசேடகல்வித்துறை ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ். கோகுலதாஸ னும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பர். (7)

# அரச பஸ் சேவை சீரின்மையால் தென்மராட்சி மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணத்துக்கும் கொடிகாமத்துக்கும் இடையிலான இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் பஸ் சேவை சீரின்மையால் அன்றாடம் பிரயாணம் செய்பவர்கள் தாம் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னர் அநேகமாக அரைமணித்தியாலத்திற்கு ஒரு தடவை சேவையில் ஈடுபட்டுவந்த இந்த பஸ் சேவை தற்போது நீண்ட நேர இடைவெளியில் நடை பெற்று வருகிறது, பயணிகள் நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டிய நிலைமை தொடர் கிறது.

இதேவேளை, கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்ல வேண்டிய கடைசி இரண்டு மூன்று பஸ் சேவைகளும் ஒழுங்கற்ற முறையிலேயே இடம்பெறுகின்றன என்றும் சில வேளைகளில் சேவை முற்றாகவே இடம்பெறுவதில்லை என்றும் தெரிவிக்கப் படுகின்றது. இவ்வாறான நிலைமையினால் அன்றாடம் பஸ்ஸில் பயணம் செய்யும் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மாதாந்த பருவச் சீட்டு பெற்றுக்கொள்பவர்கள் உட்பட அனைத்துப் பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகப் புகார் கூறப்படுகிறது.பிறமாவட்டங்களுக்கான பஸ் சேவையை அதிகரிக்கவுள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்படும் நிலையில் மாவட்டத்துக்குள்ளே நிலவும் இந்தப் பிரச்சினைகளை முதலில் நிவர்த்தி செய்ய வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது என்றும் பயணிகள் அங்கலாய்க்கின்றனர். (ஒ-7)

# படகுகளில் வெளிநாடு செல்ல முற்பட்டவர்களை விசாரிப்பதற்கு விசேட பொலிஸ் குழு

கொழும்பு, நவ.26

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு படகுகளிலிருந்த 140 பேரிடமும் விசாரணை நடத்த விசேட இரகசியப் பொலிஸ் குழுவொன்று அனுப்பிவைக்கப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

140 பேரும் காலி பூஸா கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்களன்று தென்பகுதி ஆழ்கடலில் வைத்து விமானப்படையின் ஒத்துழைப்புடன் இந்த 4 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்றபோது கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கென இரகசியப் பொலிஸ் [illegible] யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முகாம் அகதிகளுக்கு ஏற்பாடு செய்க

## தேர்தல் ஆணையாளரிடம் 'பவ்ரல்' கோரிக்கை

கொழும்பு, நவ.26

வடபகுதியிலுள்ள முகாம்களில் இருக்கும் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக உரிய ஏற்பாட்டைச் செய்யுமாறு 'பவ்ரல்' அமைப்பு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் 2008 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய நடைபெறுகிறது. இடம்பெயர்ந்தவர்கள் இந்த வாக்காளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனரா என்பதை உறுதிப்படுத்த முடியாது. இதனால், துரிதமான [illegible] முன்னெடுக்க வேண்டும் எனவும் 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

தற்போது முகாமில் இருக்கின்ற மக்களுக்கும் மற்றும் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டுமெனத் தெரிவித்துள்ள அவர், அந்த மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய அடையாள அட்டையொன்று வழங்கப் பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த பேச்சுக்களை நடத்துவதற்காகத் தமது அமைப்பு அடுத்த வாரம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவைச் சந்திக்க உள்ளதாகத் தெரிவித்த ரோஹண ஹெட்டியாராய்ச்சி, இதன்போது மேற்கூறிய விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்படும் எனவும் கூறினார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 வருட ஆட்சியில் ஜனாதிபதி மஹிந்த அரச யாப்பை முற்றாக மீறிவிட்டாராம்

## ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. சொல்கிறார்

கொழும்பு, நவ. 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது நான்கு வருட ஆட்சியில் அரசியல் யாப்பை முற்றாக மீறிச் செயற்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பார் என்று வாக்குறுதி வழங்கியே மஹிந்த ராஜபக்ஷ மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று 2005 இல் ஜனாதிபதியானார்.

தற்போது அவர் 4 வருடங்கள் ஆட்சி செய்துவிட்டார். ஆனால், இன்னும் கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அப்படியான நிலையில், ஜனாதிபதித் தேர்தலை இப்போது நடத்துவதற்கான அதிகாரம் அவருக்கில்லை.

இத் தேர்தலில் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை வெல்லவைப்பது முட்டாள்தனம். அவர் வந்து எதுவித மாற்றத்தையும் இந்நாட்டில் ஏற்படுத்தமாட்டார். மீண்டும் இப்போதுள்ள ஊழல், மோசடி மிக்க குடும்ப ஆட்சியேதான் நடைபெறும்.

நான்கு வருட ஆட்சியில் மஹிந்த அரசியல் யாப்பை முற்றாக மீறிச் செயற்பட்டுள்ளார். 17 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்கள் எவற்றையும் இன்னும் ஸ்தாபிக்கவில்லை. இதுபோன்ற பலதரப்பட்ட விடயங்களில் மஹிந்த அரசியல் யாப்பை மீறிச் செயற்பட்டுள்ளார்.

நாம் ஆட்சிக்கு வந்ததும் இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்போம். மஹிந்த ராஜபக்ஷவால் சீரழிந்து போயுள்ள இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

# பொன்சேகா போக்குவரத்து விதிமுறையை மீறினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 26

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, போக்குவரத்து விதிமுறைகளை மீறிநடந்தால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்று மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் மெதிவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்து ஜெனரல் பொன்சேகாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில், பெருந்தெருக்களில் பாதுகாப்பு வாகனங்கள் எப்படி பயணம் செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளும், விளக்கமும், வழிகாட்டலும் கூறி ஆலோசனை வழங்கியுள்ளார். இந்த விதிமுறைகளையும் ஆலோசனைகளையும் மீறி சரத் பொன்சேகாவின் வாகனங்கள் பெருந்தெருக்களில் பயணம் செய்தால் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

தம்புள்ள சந்திக்கு அருகாமையில் சரத் பொன்சேகா பயணமொன்றை மேற்கொண்ட போது, அவருடைய பாதுகாப்பு வாகனங்கள் காரணமாக வீதிப்போக்குவரத்து தடைப்பட்டது என்றும் அதன் பின்னணியிலேயே சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இவ்வாறு எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் என்றும் தெரிய வருகிறது.

(அ-சி)

# முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக்கு தொழில்வாய்ப்பு வழங்க நடவடிக்கை

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களைத் தொழில் துறைகளில் ஈடுபடுத்துவதற்குப் புனர்வாழ்வு ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவர்கள் தமது தொழிற்றிட்டங்களை தனிப்பட்ட ரீதியிலோ அல்லது கூட்டாகவோ செயலாக்குவதற்கு ஏதுவாக இவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்படுகிறது என புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்கான நிதியுதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இவர்களின் தொழில் நடவடிக்கைகளை 3 ஆண்டுகள் மேற்பார்வை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக யுனெஸ்கோ அமைப்பினதும் சர்வதேச நாடுகளினதும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் வர்த்தக சமூகத்தினரதும் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

இத்திட்டத்தில் 2,900 பேருக்குப் புனர்வாழ்வளிக்கப்படுகிறது. இதில் 70 வீதமானவர்கள் 18 முதல் 40 வயதெல்லைக்குட்பட்டவர்கள் - என்றார்.

புனர்வாழ்வளிக்கப்படுவோரின் ஆன்மீக வளர்ச்சிக்காக சகல மதத் தலைவர்களதும் உதவியும் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# ஜனாதிபதியுடன் போட்டியிட தகுதியான எவருமே எதிர்க்கட்சிகளிடம் இல்லையாம்

## அமைச்சர் ஜயரத்ன சொல்கிறார்

ஜனாதிபதித் தேர்தலில் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிடத் தகுதியுடைய எந்த வேட்பாளரும் எதிர்க் கட்சிகளிடமில்லை - என்று விவசாய அமைச்சர் தி.மு. ஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் கூறியவை வருமாறு -

மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்துள்ள ஜனாதிபதியின் அளப்பரிய சேவைகளை யாராலும் மறக்கடிக்க முடியாது. மக்கள் மத்தியில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளர் அறிவிப்பைத் தாமதித்து உள்ளனர். நாட்டை ஐக்கியப்படுத்திய பெருந்தலைவர்கள் வரிசையில் எமது ஜனாதிபதியின் பெயர் இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியாதென பலம் கொண்ட நாடுகள்கூட கைவிரித்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ துணிவுடன் எழுந்து நின்று அதனை என்னால் சாதிக்க முடியும் என உலகுக்கு உணர்த்தினார். இதனை எமது நாட்டு மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பர் ஒருபோதும் மறக்கவே மாட்டார்கள்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட நான்கு ஜனாதிபதிகள் இந்த நாட்டை ஆட்சி செய்த போதும் அவர்களால் செய்ய முடியாமல் போன பல முக்கிய பணிகளை எமது ஜனாதிபதி செய்துள்ளார். அத்துடன் இந்த நாட்டை பொருளாதார வளம் கொண்டதாக மாற்றியமைக்க அவர் தொடர்ந்தும் அப்பதவியில் இருக்க வேண்டியது அவசியம். - என்றார். (அ-சி)

# மத்திய மாகாணத்தில் வைரஸ் தொற்று; இதுவரை 13 பேரின் மரணங்கள் பதிவு

## சுகாதார அதிகாரிகள் தகவல்

நொவெல் இன்புளுவென்சா எனப்படும் ஏ.எச் 1 என் 1 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களெனச் சந்தேகிக்கப்படும் 13 பேரின் மரணங்கள் இதுவரை மத்திய மாகாணத்தில் மட்டும் பதிவாகியுள்ளன என சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் நான்கு பேரின் மரணங்கள், இந்த வைரஸினால் ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் சாந்தி சமரசிங்ஹ தெரிவித்தார்.

இவ்வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களெனச் சந்தேகிக்கப்படும் நோயாளர்களின் பதிவு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது எனவும் அவர் கூறினார்.

மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளையும் மேலதிக வகுப்புகளையும் மூடுவதாகத் தீர்மானித்தபோதும் இன்னும் மேலதிக வகுப்புகள் நடத்தப்படுகின்றன எனப் பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, சகல மேலதிக வகுப்புகளையும் நிறுத்தி இந்நோய் பரவாமல் தடுக்க உதவுமாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கேட்டுள்ளார்.

### வெள்ளமுள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது தலா 15 கிலோகிராம் எடையுள்ள சக்திவாய்ந்த வெடிபொருள்கள் அடங்கிய 74 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது மேலும் 38 குண்டுகள், 6 கிளைமோர் குண்டுகள் உட்பட பல யுத்த உபகரணங்கள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

### தமிழர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் பொன்சேகாவைத் தமது தரப்பில் வேட்பாளராக நிறுத்தியுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. ஆனால், சரத் பொன்சேகா அவரது முடிவை இன்னும் ஓரிரு நாள்களில் தெரிவிப்பார் என்று கூறியுள்ளார்.

மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. அக்கட்சியின் சார்பில் போட்டியிடுபவர் ரணில் விக்கிரமசிங்கவா அல்லது வேறு ஒருவரா என்பது இன்னும் தெரியாது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் ஒன்றிணைந்து சரத் பொன்சேகாவைப் பொது வேட்பாளராக நிறுத்தவுள்ளன என்றும் கூறப்படுகின்றது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும்வரை வேட்பாளர் தொடர்பில் உறுதிசெய்ய முடியாதுள்ளது.

ஆகவே, வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்புதான் வேட்பாளர்கள் நூறு வீதம் உறுதி செய்யப்படுவர். இதன் பிறகுதான் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்று எமது கூட்டமைப்பு முடிவு செய்யும்.

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு வேட்பாளர்கள் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக முன்வைக்கும் தீர்வுத்திட்டங்களை ஆராய்ந்து பார்த்தே நாம் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வருவோம்'' - என்றார்.

### விருதலைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களைத் தென்னிலங்கையில் மேற்கொள்வதற்கு உதவி ஒத்தாசை புரிந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் விவசாயி ஒருவர் அக்குரஸ்ஸ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரின் உடைமையிலிருந்து பல கைக்குண்டுகள், துப்பாக்கி, வெடிபொருள்கள் ஆகியவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனரென அறிவித்துள்ளனர். கே.சதீஸ் என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

### ஜனாதிபதித் தேர்தலில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பிரச்சினை தீர்க்கப்பட்டு சர்வதேச தலையீடுகளும் நிறுத்தப்பட்டால் மாத்திரமே எமது நாடு முழுமையாகச் சுதந்திர மடைந்த நாடாகமாறும்.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் உதவியுடன் மஹிந்த ராஜபக்ஷ தமிழர் எழுச்சியை நசுக்கினார். அது இங்கு பெரிய வெற்றியாகக் கொண்டாடப்படுகின்றது. ஆனால், தமிழர்கள் இப்போது தாயகத்தை இழந்து கையேந்தி அலையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தியாவின் பிடிக்குள் எமது பொருளாதாரம் சிக்கியுள்ளது. எமது நாடு இந்தியாவின் காலனித்துவ நாடாக மாறியுள்ளது.

தொழிலாளர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கும் நோக்கில் நான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன் - என்றார்.

**2010 கல்வியாண்டு**
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம்: 30.11.2009
மாலை 3 மணி -6 மணி
புதிய/பழைய மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.
குறைந்தளவு மாணவர்கள் நிறைந்தளவு கல்வி
I.B.S கல்வி நிறுவனம் சுண்டுக்குளி
(92484)

### அமெரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், சட்டவிரோத பங்குப் பரிவர்த்தனையின் ஊடாக ராஜ் ராஜரட்ணம் பெருந்தொகை லாபத்தை ஈட்டியுள்ளார் என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

### 6 மாதங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்திருக்கின்றன.

முத்தரப்புகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொகுக்கப்பட்டு ஒப்பந்தமாக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

* பொது வேட்பாளர் கட்சி ஒன்றுக்கு அப்பாற்பட்டவராக இருத்தல்.
* பிரபல்யமற்ற கட்சி ஒன்றில் அவர் போட்டியிட வேண்டும்.
* பிரதான கமிட்டி, இணைப்புக் கமிட்டி ஆகிய இரு கமிட்டிகளை அமைத்து ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான முடிவுகள் அனைத்தையும் இக்குழுக்கள் மூலமாக எடுத்தல்.
* ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நிலைநிறுத்தி நீதியான நிர்வாகத்தையும் சமூக மற்றும் சட்ட ஒழுங்குகளையும் பேணுதல் மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடத்துதல்.
* ஜனாதிபதிப் பதவியை ஏற்றவுடன் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் காபந்து அரசு ஒன்றை நிறுவுதல்.
* நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் சட்ட நகல் ஒருமாத காலத்துக்குள் முன்வைக்கப்பட்டு ஆறு மாத காலத்துக்குள் அதனை நடைமுறைப்படுத்தல்.
* புதிய ஜனாதிபதியின் முதலாவது உத்தியோகபூர்வ நடவடிக்கையாக 17 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்திற்கு அமைய தேர்தல், பொலிஸ், நீதி, அரச சேவை ஆகிய துறைகளில் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல்.
* அகதிகளை மீளக்குடியமர்த்துதல், அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், அவர்கள் தமது வாழ்வை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும்வரை வாழ்வாதார உதவிகளை வழங்கல்.
* சிறைவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளை அவர்களின் குற்றச்சாட்டுகளுக்கேற்ப சட்ட நடவடிக்கை எடுத்தல், புனர்வாழ்வு அளித்தல் அல்லது விடுதலை செய்தல்.
* கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணுதல், பத்திரிகைச் சபைச் சட்டமூலத்தை இல்லாமல் செய்வதன் மூலம் நாட்டுக்கு நீதியான ஊடக கலாசாரமொன்றை அறிமுகப்படுத்தல்.

### ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்காற்று மற்றும் நன்னடத்தை தொடர்பான, பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உடன் அனுப்பவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர், இடமாற்றச் செயற்பாடுகளை வழமைபோலச் செயற்படுத்துவதற்கான உத்தரவைத் தாம் பிறப்பிப்பார் எனவும் பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

G.C.E (O/L) 2009 பரீட்சார்த்திகளுக்கான
விஞ்ஞான பாட கருத்தரங்கு செய்முறை
விளக்கத்துடன்
இடம்: NEW EDUCATION WORLD
ஆனைப்பந்தி (குருகுலம் அருகில்)
காலம்: 28,29-11-2009 (10.00 AM)
அனுமதி: இலவசம் (92486)

**ஆசிரிய விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது**
அழகியல் பட்டதாரிகளை ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை -2009,
முடிவு திகதி - 04.12.2009
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 6693, 4374

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org